விலை ரூபா: 15.00

Registered as a Newspaper in Srilanka


# வலம்புரி

பக்கங்கள்: இருபது — Valampurii

சங்கு 12 வள்ளுவர் ஆண்டு 2042 கார்த்திகை 10 சனிக்கிழமை (26.11.2011) தொலைபேசி 222 3378, 222 7829 ஒலி 342

ரா ம் கோ
MADRAS CEMENTS LTD
RAMCO CEMENT
RAMCO
SLS 107 தரம் கொண்டதும்
100 வீத சாதாரண போட்லான்
சீமெந்து (O.P.C.) ராம்கோ சீமெந்து

# யுத்தக் குற்றச்சாட்டுக்களை அரசுதான் விசாரிக்க வேண்டும்



## ஜே.வி.பி. கோரிக்கை

யுத்தக் குற்றச்சாட்டுகள் குறித்து இலங்கை அரசு தான் விசாரணை நடத்த வேண்டும். உலக நாடுகள் எல்லாமுமே ஏதோ ஒருவகையில் குற்றம் புரிந்துள் என. எனவே விசாரணை நடத்தும் தகுதி யாரிடமும் இல்லை என ஜே.வி.பியின் தலைவர் சோமவன்ஸ அமரசிங்க கூறினார். (20ஆம் பக்கம் பார்க்க)

## பொன்சேகாவின் மனு விசாரணை ஒத்திவைப்பு

(கொழும்பு)

முன்னாள் படைத் தளபதி சரத் பொன் சேகா தனது நாடாளுமன்ற உறுப்பினர் பதவி பறிக்கப்பட்டமைக்கு எதிராக தாக்கல் செய்த மேன்முறையீட்டு மனு மீதான விசாரணை ஒத்தி வைக்கப்பட்டுள்ளது

பொன்சேகாவின் சார்பில் தாக்கல் செய்யப் பட்ட இம் மனு மீதான விசாரணை கொழும்பு மேன்முறையீட்டு நீதிமன்றத்தால் நேற்று எடுத்துக்கொள்ளப்பட்டது.

ரஞ்சித் (20ஆம் பக்கம் பார்க்க)

## சரணடைந்தோர் நிலை குறித்து அரசு பதிலளிக்காதது ஏன்?

### சிறிதரன் எம்.பி. கேள்வி

இறுதிக் கட்ட யுத்தத்தின் போது வெள்ளைக் கொடியுடன் வந்து சரணடைந்தவர்களுக்கும் ஆயர் ஒருவரின் உதவியுடன் சரணடைந்த 100க்கு மேற்பட்டோருக்கும் என்ன நடந்தது என்ற தகவலை அரசாங்கம் இன்னும் வெளி யிடாமல் இருப்பதாக தமிழ்த் தேசிய கூட்ட மைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர் சிறிதரன் விசனம் தெரிவித்துள்ளார்.

நாடாளுமன்றத்தில் நேற்று நடைபெற்ற வரவு செலவுத் திட்டம் மீதான விவாதத்தில் கல ந்து கொண்ட நாடாளுமன்ற உறுப்பினர் சிறி தரன் இந்த குற்றச்சாட்டினை முன்வைத்தார்.

அத்துடன், அப்பா வருவார் என்று கண்ணீ ருடனும், ஏக்கத்துடனும் பல பிள்ளைகள் காத்திருக்கும் நிலைமையே வன்னியில் ஏற்பட்டுள்ளதாக குறிப்பிட்ட அவர், சரண டைந்த போராளிகளுக்கு அரசாங்கம் பார பட்சம் காட்டுவது ஏன் என்றும் கேள்வி எழுப் பினார்.

அத்துடன் புனர்வாழ்வளிக்கப்பட்டு விடு விக்கப்பட்ட முன்னாள் போராளிகள் பலர் நிம் மதியற்ற வாழ்க்கையே வாழ்ந்து வருவதாக குறிப்பிட்ட அவர், போரில் இறந்தவர்களை நினைத்து அவர்களுக்கு பூ வைத்து வணங்க முடியாத துர்ப்பாக்கிய நிலைமையே காணப் படுவதாகவும் குறிப்பிட்டார்.

இதேவேளை (20ஆம் பக்கம் பார்க்க)

## நாட்டில் பெய்யும் அடை மழையால் 12 பேர் பலி, 5 ஆயிரம் வீடுகள் சேதம்

(கொழும்பு)

நாட்டில் தற்போது பெய்துவரும் அடை மழை காரணமாக 12 பேர் உயிரிழந்ததுடன் 5 ஆயிரம் பேர் பாதிக்கப்பட்டுள்ளனர் என தேசிய பேரிட நிவாரண அதிகாரி காமினி அத்திராச்சி தெரிவித்துள்ளார்.

தென்மேற்கு பருவ காற்று மழை இவ் வாறு பெய்யும் என நாம் எதிர்பார்க்கவில்லை. காலி, மாத்தறை ஆகிய இடங்களில் 106 வீடுகள் முற்றாக இடிந்துள்ளன. ஆயிரம் வீடுகள் ஓரளவு சேதம் அடைந்துள்ளன.

அதேவேளை, வடக்கில் தொடரும் மழை யால் பல இடங்கள் வெள்ளத்தில் மூழ்கியுள் ளன. யாழ்.குடாநாட்டில் காக்கைதீவு, பொம்மை வெளி உட்பட்ட தாழ்நிலங்களில் வசிக்கும் மக்கள் இடம்பெயரவேண்டிய நிலை ஏற்பட் டுள்ளது.

வன்னியில் குடிசை வீடுகளில் வசிப் போர் பெரும் துன்பங்களை எதிர்நோக்கி யுள்ளனர். தொடரும் கனமழை இன்றும் பெய்யக் கூடும் என வானிலை அவதான நிலையம் கூறியுள்ளது. (எ-5,11)

## மிதிவெடி வெடித்து இளைஞன் காயம்

(யாழ்ப்பாணம்)

மாவிட்டபுரம் பகுதியில் வீட்டு வளவினுள் புதைக்கப்பட்டிருந்த மிதிவெடி வெடித்ததில் ஒருவர் படுகாயமடைந்தார். இச்சம்பவம் நேற்று மாலை இடம்பெற்றுள்ளது.

அதே இடத்தைச் சேர்ந்த ஆர்.ஜெக நாதன் (வயது 29) என்பவரே படுகாயமடைந் தவராவார். படுகாயமடைந்த இவர் யாழ். போதனா வைத்தியசாலையில் அனுமதிக்கப் பட்டுள்ளார். (எ-6)

## இராணுவத்தின் கண்காணிப்பு கிளிநொச்சியில் அதிகரிப்பு

### பதற்றத்தில் மக்கள்

(கிளிநொச்சி)

கிளிநொச்சி பிரதேசத்தில் படையினரின் கண்காணிப்பு மற்றும் சோதனை நடவடிக் கைகள் அதிகரித்துள்ளதாக பிரதேச தகவல் கள் தெரிவித்தன.

நேற்று வீதியில் செல்லும் வாகனங்க ளை மறித்த படையினர் அவற்றுள் ஏறிச் சோதனை மேற்கொண்டதாக கூறப்பட்டுள்ளது.

விடுதலைப்புலிகளின் மாவீரர் தினம் நாளை என்பதால் இந்நடவடிக்கைகளை படையினர் மேற்கொண்டிருக்கக்கூடும் என மக்கள் கருத்துத் தெரிவித்தனர்.

சில கடைகளுக்குச் சென்ற படையினர் நாளை 27-ம் திகதி வர்த்தக நிலையங்களை அவசியமாகத் திறக்க வேண்டும் என்று உரிமை யாளர்களுக்கு கட்டளையிட்டுள்ளனர்.

மாவீரர் தினத்தை முன்னிட்டு வர்த்தக நிலையங்களை உரிமையாளர்கள் மூடக் கூடும் என்று அஞ்சியே படையினர் இவ்வாறு கட்டளையிட்டுள்ளனர். அத்துடன் கிளிநொச்சி யில் படையினர் கண்காணிப்பை தொடர்ச் சியாக தீவிரப்படுத்தி வருவதால் மக்கள் மத் தியில் பதற்றம் ஏற்பட்டுள்ளது.

இதேவேளை கிளிநொச்சி மாவட்டத்தில் உள்ள முழங்காவில் மாவீரர் துயிலும் இல்லத்தில் மாவீரர் நாள் சுவரொட்டிகள் ஒட்டப்பட்டதாகவும் அதனை இராணுவத்தினர் அகற்றியுள்ள தாகவும் தெரிவிக்கப்படுகிறது. அங்கு மர்மமாக மாவீரர் தின சுவரொட்டிகள் ஒட்டப்பட்டதை யடுத்து படையினர் அவ்விடத்திற்குச் சென்று அவற்றை கிழித்துள்ளனர்.

இதேவேளை யாழ் பல்கலைக்கழகத்திற் குள் நுழைந்த (20ஆம் பக்கம் பார்க்க)

## சித்திரவதைகளுக்கு எதிரான நடவடிக்கைகள் தேவை!

### சர்வதேச நீதியாளர் குழு கோரிக்கை

(கொழும்பு)

சித்திரவதை சம்பவங்களுக்கு எதிராக நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட வேண்டு மென சர்வதேச நீதியாளர்கள் குழு கோரிக்கை விடுத்துள்ளது.

சித்திரவதை சம்பவங்களுக்கு எதிராக சட்ட நடவடிக்கை எடுக்கும் விவகாரத்தில் அரசாங்கம் எவ்வித நெகிழ்வுத்தன்மை களையும் கடைப்பிடிக்கக் கூடாது என சர்வ தேச நீதியாளர்கள் குழு வலியுறுத்தியுள்ளது.

சித்திரவதைகளுக்கு எதிராக நடவடிக்கை எடுத்தல் தொடர்பிலான ஐக்கிய நாடுகள் அமைப்பின் அறிக்கை நேற்று வெளியிடப் பட்டது.

இலங்கையில் சித்திரவதைச் சம்பவங்கள் மற்றும் அதற்கு எதிரான நடவடிக்கைகள் குறித்தும் இவ்வறிக்கையில் தெரிவிக்கப் பட்டுள்ளது.

இந்நிலையில் இலங்கையில் இடம்பெறும் சித்திரவதைச் (20ஆம் பக்கம் பார்க்க)

## இலங்கையில் சர்வாதிகாரம்; உறுதிப்படுத்தினார் மங்கள!



(கொழும்பு)

இலங்கையில் சர்வாதிகார நிலைமை ஏற்பட்டுள் ளமை உறுதிப்படுத்தப்பட்டுள்ளதாக ஐக்கிய தேசியக் கட்சி யின் பாராளுமன்ற உறுப்பினர் மங்கள சமரவீர தெரிவித் துள்ளார். ஜனநாயக நாடுகளின் வரிசையில் இலங்கை 109ம் நிலையை பிடித்துள்ளது. சிம்பாவே 136-ம் நிலை யை பிடித்துள்ளது என அவர் கூறினார்.

2012-ம் ஆண்டுக்கான வரவு செலவுத் திட்ட விவா தத்தில் கலந்து கொண்டபோது அவர் இதனைக் குறிப்பிட் டுள்ளார். பொஸ்னியா 77-ம் நிலையும், மலாவி 82-ம் நிலையையும், நைஜிரியா 93-ம் நிலையையும் வகிப்பதாகத் (20ஆம் பக்கம் பார்க்க)

நடுவு நிலை தவறா நன்னெறி காக்கும் உங்கள் நாளிதழ்

# மட்டக்களப்பில் ஈராக் கிராமம்

மட்டக்களப்பு மாவட்டத்தில் இது வரைகாலமும் சதாம் ஹூசைன் கிராமம் என அழைக்கப்பட்ட கிராமம்– ஈராக் கிராமம் எனப்பெயர் மாற்றம் செய்வதற்கான தீர்மானம் ஏறாவூர் பிரதேச அபிவிருத்தி ஒருங்கிணைப்பு குழுக் கூட்டத்தில் எடுக்கப்பட்டுள்ளது.

மறைந்த ஈராக் ஜனாதிபதி சதாம் ஹூசைனை நினைவுபடுத்தும் இக் கிராமத்தின் இந்த பெயர்மாற்றம் தொடர்பாக, ஏறாவூர் பிரதேச அபிவிருத்திக் குழுக் கூட்டத்தில் எடுக்கப்பட்ட தீர்மானம் மாவட்ட செயலாளருக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளது.

1978ஆம் ஆண்டு நவம்பர் 23 ஆம் திகதி மட்டக்களப்பு மாவட்டத்தில் பெரும் சூறாவளி அனர்த்தம் ஏற்பட்டது. அக்காலத்தில் மட்டக்களப்பு மாவட்டத்தின் இரண்டாவது நாடாளுமன்ற உறுப்பினர் பதவி வகித்த மர்ஹூம் அஹமட் பரீட் மீரா லெப்பை ஈராக்குக்கு விஜயம் மேற்கொண்டு பாதிக்கப்பட்ட மக்களுக்கு உதவ முன்வருமாறு அன்றைய ஈராக் ஜனாதிபதி சதாம் ஹூசைனிடம் வேண்டுகோள் விடுத்தார்.

இதன் பிரகாரம் ஏறாவூர் பிரதேசத்தைச் சேர்ந்த 100 முஸ்லிம் குடும்பங்களுக்கு மாதிரி கிராமம் ஒன்றை அமைத்துக்கொடுக்க அன்றைய ஈராக் அரசாங்கம் முன்வந்தது.

பள்ளிவாசல், மத்தரஸா மற்றும் விளையாட்டு மைதானம் உட்பட சகல வசதிகளையும் உள்ளடக்கி இக்கிராமம் அமைக்கப்பட்டு சதாம் ஹூசைன் கிராமம்என்ற பெயரில்1982ஆம்ஆண்டு யூலை 25 ஆம் திகதி பொது மக்களிடம்கையளிக்கப்பட்டது. (எ-5)

# சுதந்திரமான விசாரணைப் பொறிமுறை அமைக்கக் கோரி கிலாரிக்கு மனு

(வாஷிங்டன்)

இலங்கை ஜனாதிபதியால் நியமிக்கப்பட்ட உண்மைகளைக் கண்டறிவதற்கான நல்லிணக்க ஆணைக் குழுவின்அறிக்கையில்நம்பகத்தன்மை மற்றும் சுதந்திரத்தன்மை இல்லாவிடின் சுதந்திரமான அனைத்துலக விசாரணை பொறிமுறை அமைக்கப்படவேண்டும்என்பதைவலியுறுத்தி அமெரிக்க செனட்சபையின் மூன்று உறுப்பினர்கள் இராஜாங்க அமைச்சர் கிலாரி கிளின்டனுக்கு கடிதம் எழுதியுள்ளனர்.

இக் கடிதத்தில் கைது செய்யப்பட்டவர்கள் மீது சட்டத்துக்கு புறம்பான படுகொலைகள் மற்றும் போரற்ற வலயமாக பிரகடனப்படுத்தப்பட்ட பகுதிக்குள் மருத்துவ்மனைகளை இலக்கு வைத்து இலங்கைப்படையினர் மேற்கொண்ட எறிகணை, குண்டுவீச்சு தாக்குதல்கள் தொடர்பாகவும் குறிப்பிடப்பட்டுள்ளது.

அதேவேளை அமெரிக்கா எதிர்பார்க்கும் சுதந்திரத்தன்மை மற்றும் நம்பகத்தன்மை சார்ந்த அடிப்படைத் தரங்களை பேண உண்மைகளை கண்டறிவதற்கான நல்லிணக்க ஆணைக்குழு தவறுமாயின்–இரு தரப்பிலும் மோசமான போர்க்குற்றங்களுக்கு பொறுப்பானவர்களை சட்டத்தின் முன் நிறுத்துவதற்குரிய நகர்வினை இலங்கை அரசாங்கம் முன்னெடுக்காதுவிடுமாயின்-சுதந்திரமான அனைத்துலக விசாரணை பொறிமுறையொன்றினை அமைப்பதற் குரிய அழுத்தத்தினை பிரயோகிக்க வேண்டும் என தங்களைக் கோருகின்றோம் என அக்கடிதத்தில் மேலும் வலியுறுத்தப்பட்டுள்ளது. (எ-5)


## வலிகாமம் தெற்கு பிரதேச சபை சுன்னாகம்

### 2012 ம் ஆண்டுக்கான மீள் கேள்வி அறிவித்தல்

வலிகாமம் தெற்கு பிரதேச சபையின் எல்லைக்குட்பட்ட சந்தைகள், கருவாட்டுக் கடைகள் என்பவற்றை 2012.01.01 தொடக்கம் 2012.12.31 ம் திகதி வரை குத்தகைக்கு வழங்குவதற்கான மீள் கேள்விகள் கோரப்படுகின்றன.

அட்டவணை

| தொ.இல. | சந்தைகள் இறைச்சிக் கடைகள் கருவாட்டுக்கடைகள் விபரம் | மீளளிக்கப்படாத கேள்விப்பத்திரப் பணம் | கேள்வி வைப்பு | ஏற்றுக்கொள்ளக்கூடிய ஆகக்குறைந்த கேள்வித் தொகை(வற் வரி தவிர) | மாத வாடகை (வற் வரி தவிர) |
|---|---|---|---|---|---|
| | சுன்னாகம் உப அலுவலகம் | | | | |
| 1 | சுன்னாகம் மத்திய சந்தை (துவிச்சக்கர வண்டித் தரிப்பிடம் உட்பட) | 2000 | 30000 | 9000000 | - |
| 2 | கருவாட்டுக்கடை இல 3 | 750 | 7500 | 44550 | 250 |
| 3 | கருவாட்டுக்கடை இல 4 | 750 | 7500 | 44550 | 250 |
| | உடுவில் உப அலுவலகம் | | | | |
| 1 | மருதனார்மடம் சந்தை (துவிச்சக்கர வண்டித் தரிப்பிடம் உட்பட) | 2000 | 30000 | 13100000 | - |
| 2 | மல்வம் சந்தை | 500 | 5000 | 49500 | - |

1. கேள்விப்பத்திரம் வழங்கும் காலம் 2011.11.28 - 2011.12.01 பி.ப 2.00 மணிவரை
2. கேள்விப்பத்திரம் ஏற்றுக்கொள்ளுதல் 2011.12.02 நண்பகல் 12.00 மணி வரை
3. கேள்விப்பத்திரம் திறக்கப்படுதல் 2011.12.02 பி.ப. 2.00 மணிவரை

4. கேள்வி சம்பந்தமான மேலதிக விபரங்களை 2011.11.10 ம் திகதிய உதயன், தினக்குரல், வலம்புரி பத்திரிகையிலும் எமது தலைமை அலுவலகத்திலும் அலுவலக நேரத்தில் பெற்றுக்கொள்ளலாம்.

வலி தெற்கு பிரதேச சபை,
சுன்னாகம்
2011. 11. 25

தி.பிரகாஷ்,
தவிசாளர்,
வலி தெற்கு பிரதேச சபை,
சுன்னாகம்.

(சி-5051)



## பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் பணிமனை யாழ்ப்பாணம்.

### சமைத்த உணவு விநியோகம், சுத்திகரிப்பு சேவை, பாதுகாப்புச் சேவை, வாகன சுத்திகரிப்புச் சேவை, அழுக்குத்துணி சலவை சேவை, காகிதாதிகள் மற்றும் மின்சார நீர் விநியோகப் பொருட்கள் வழங்கல் சேவைகளுக்கான பெறுகைகள் - 2012

நாட்டமுள்ள விலைக்கேள்வீதாரர்கள் எமது பணிமனையில் கிடைக்கும் கேள்விப்பத்திர படிவத்தினை பூர்த்திசெய்து ஒவ்வொரு பெறுகைக்கும் தனித்தனியாக குறிப்பிட்ட தொகையை காசாக செலுத்தி பெறுகைப்பத்திரங்களை அலுவலக நாட்களில் 02.12.2011 வரையான காலப்பகுதியில் 09.00 மணி தொடக்கம் 15.00 மணி வரை (12.30 தொடக்கம் 13.00 மணி தவிர்ந்த) நேரங்களில் 572/3, வைத்தியசாலை வீதி, யாழ்ப்பாணத்தில் அமைந்துள்ள யாழ். பிராந்திய சுகாதார சேவைகள் பணிமனையில் பெற்றுக்கொள்ளலாம்.

விலைக் கேள்விகள் 05.12.2011 திகதி காலை 10.00 மணிக்கு முன்பதாக பதிவுத் தபாலிலோ அல்லது நேரடியாகவோ இப் பணிமனையின் மேலதிக பிராந்திய பணிப்பாளர் (நிதி) அறையில் பேணப்படும் பெறுகைகள் பெட்டியில் சேர்ப்பிக்கப்படல் வேண்டும்.

மேலதிக விபரங்களை நேரடியாகவோ அல்லது அலுவலக நேரத்தில் தொலைபேசி இலக்கம் 021 222 2278 (Ext.21) ஊடாக அறிந்துகொள்ளமுடியும்.

தலைவர்,
திணைக்கள பெறுகைகள் குழு
மாகாண சுகாதார சேவைகள்

(சி-5052)


# புங்குடுதீவில் நாளை இலவச மருத்துவ முகாம்

சமாதானத்திற்கான சமயங்களின் இலங்கைப் பேரவையின் அனுசரணையுடன் யாழ்.போதனா வைத்தியசாலை விசேட வைத்திய நிபுணர்களால் வைத்திய வசதியின்றி அவலப்படும் புங்குடுதீவு நோயாளர் நலன்கருதி நாளை இலவச மருத்துவ முகாம் இடம்பெறவுள்ளது.

இதில் சகல நோய்களுக்கும் நிபுணத்துவ வைத்தியர்களால் சிகிச்சை அளிக்கப்படவுள்ளது.

நாளைக் காலை 9.00மணி தொடக்கம் நண்பகல் 12.00 மணி வரை புங்குடுதீவு மகாவித்தியாலய மண்டபத்திலும், பி.ப 2.00மணி தொடக்கம் 4.00மணி வரை புங்குடுதீவு கமலாம்பிகை வித்தியாலய மண்டபத்திலும் இவ்மருத்துவ முகாம் இடம்பெறவுள்ளது.

புங்குடுதீவில் உள்ள அனைத்து நோயாளர்களும் பங்குபற்றி பயன் பெறுமாறு ஏற்பாட்டுக் குழுவினர் அறிவித்துள்ளனர். (எ)

## புதிய நிர்வாகசபை தெரிவிப்பு

புங்குடுதீவு ஐங்கரன் சனசமூக நிலையத்தின் புதிய நிர்வாக சபை கடந்த மாதம் தெரிவு செய்யப்பட்டது.

இதில்,போசகர்-த.தவராசா, தலைவர்- அ.சுந்தரலிங்கம், செயலாளர்-ச.கஜேந் திரன், பொருளாளர் - ப. சத்திய ராகவன், உப தலைவர் -தி.உருத்திரசீலன், உப செயலாளர்-நா.றஜீவ்கரன் ஆகியோர் நிர்வாக சபை அங்கத்தவர்களாக தெரிவு செய்யப்பட்டனர். (எ)

# வீதி அகலிப்பு காரணமாக மின்சாரம் துண்டிக்கப்படும்

(யாழ்ப்பாணம்)

வீதி அகலிப்பு பணிகளுக்காக உயர் அழுத்த மின்விநியோக மார்க்கங்களை இடமாற்றம் செய்ய வேண்டியிருப்பதால் நாளை மறுதினம் திங்கட்கிழமை, முதலாம் திகதி வியாழக்கிழமை, மூன்றாம் திகதி சனிக்கிழமை ஆகிய நாட்களில் காலை 8.30 மணியிலிருந்து மாலை 5.00 மணிவரை கரந்தன், நீர்வேலி, சிறுப்பிட்டி, கோப்பாய், இருபாலை, கல்வியங்காடு, நல்லூர், அரியாலை, தென்மராட்சிப்பிரதேசம் ஆகிய இடங்களில் மின்சாரம் தடைப்படும்.

வரும் 29 ஆம் திகதி, செவ்வாய்க்கிழமை, இரண்டாம் திகதி வெள்ளிக்கிழமை, நான்காம் திகதி ஞாயிற்றுக்கிழமை ஆகிய தினங்களில் காலை 8.30 மணியிலிருந்து மாலை 5.00 மணிவரை சுன்னாகம், மல்லாகம், ஏழாலை, தெல்லிப்பளை, அளவெட்டி, பன்னாலை, சிறுவிளான், புன்னாலைக்கட்டுவன், அச்செழு, புத்தூர், ஆவரங்கால், அச்சுவேலி, இடைக்காடு, வடமராட்சிப் பிரதேசம் ஆகிய இடங்களிலும்,

நாளை மறுதினம் திங்கட்கிழமை, 30 ஆம் திகதி புதன்கிழமை, 4ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை ஆகிய நாட்களில் 8.30 மணியிலிருந்து மாலை 5.00 மணிவரை உரும்பிராய், ஊரெழு, பிரதேசத்தின் ஒரு பகுதி ஆகிய இடங்களிலும்,

29ஆம் திகதி செவ்வாய்க்கிழமை, இரண்டாம் திகதி வெள்ளிக்கிழமை ஆகிய தினங்களில் காலை 8.30 மணியிலிருந்து மாலை 5.00 மணிவரை புன்னாலைக் கட்டுவன் வடக்கு தெற்கு, மயிலங்காடு பிரதேசத்தின் ஒரு பகுதி, ஈவினை பிரதேசத்தின் ஒரு பகுதி ஆகிய இடங்களிலும்,

30ஆம் திகதி புதன்கிழமை காலை 8.30 மணியிலிருந்து மாலை 5.00 மணிவரை இணுவில், மருதனார்மடம், உடுவில், சங்குவேலி, மானிப்பாய், கட்டுடை, தாவடி, கொக்குவில், நாச்சிமார் கோவிலடி, ஆனைக்கோட்டை, நவாலி, கோண்டாவில், கோம்பயன் மணல்பிரதேசம் ஆகிய இடங்களிலும் மின் விநியோகம் தடைப்பட்டிருக்கும். என இலங்கை மின்சாரசபை அறிவித்துள்ளது. (எ)


## இலவச மருத்துவ முகாம் -புங்குடுதீவு-

சமாதானத்திற்கான சமயங்களின் இலங்கைப் பேரவை (SLCRP) இன் மனிதாபிமானச் செயற் .பாடுகள் இலங்கையின் பல மாவட்டங்களிலும் செயற்படுத்தப்பட்டு வருகின்றன. அவ்வகையில் யாழ். மாவட்டப் பிரிவு இலவச மருத்துவ முகாம் ஒன்றை எதிர்வரும் 27.11.2011-ம் திகதி ஞாயிற்றுக் கிழமை புங்குடுதீவில் நடாத்தவுள்ளது.

மு.ப.9.00 - 12.00 - புங்குடுதீவு 'மகாவித்தியாலயம்.

பி.ப. 2.00 - 4.00 -புங்குடுதீவு கமலாம்பிகை மகாவித்தியாலயம்.

(6852)

# இன்று ஒரு தகவல்

## பக்தியும் பகல் வேஷமும்

ஓர் ஊரிலே ஒரு சாமியார் இருந்தார். அவரைச்சுற்றி ஏகப்பட்ட கூட்டம்.

கடவுளைப்பற்றி அந்தச் சாமியார் நிறைய கதையெல்லாம் சொல்லுவார்.

அவரைச் சுற்றியிருக்கிற கூட்டமும் அதை மிகவும் ஆவலாக கேட்டுக்கொண்டிருக்கும்.

இதைக்கேள்விப்பட்ட கடவுளுக்கே மனதினுள் பெருமையாக இருந்தது.

நமது பெருமையை எடுத்துச் சொல்வதற்கும் பூலோகத்திலே பல பேர் இருக்கின்றார்கள். அதை கேட்பதற்கும் அதிகளவு சனக்கும்பல் இருக்கிறது.

மக்களிடமும் கடவுள் பக்தி அதிகம் இருக்கத்தான் செய்கிறது என்று நினைத்தார்.

“சரி .....நேரிலேயே அங்கே போய் எல்லோரையும் சந்தித்துவிட்டு வரலாம்” என்று நினைத்து அங்கேயிருந்து புறப்பட்டு பூலோகத்துக்கு வந்து சேர்ந்தார்.

அவருக்கு இங்கே வந்துசேர்ந்த நேரம் மிகவும் நல்லதாக அமைந்தது.

ஒரு கோயிலில் ஏதோ விசேஷம். அந்தச்சாமியார் ஏதோ பக்தி பிரசங்கம் செய்து கொண்டிருந்தார்.

சனங்கள் கூட்டமாக அமர்ந்திருந்து அதைக் கேட்டுக் கொண்டிருந்தார்கள்.

கடவுள் அப்படி இருப்பார்,இப்படி இருப்பார் என்று அந்தச் சாமியார் ஏதோ கடவுளையே நேரிலே பார்த்தது மாதிரி வர்ணித்துக் கொண்டிருந்தார்.

கூட்டம் முடிந்து சனங்கள் தமது இருப்பிடங்களை நோக்கி செல்ல ஆரம்பித்தார்கள்.

கோவிலுக்கு வெளிப்பக்கத்தில் ஓர் அரச மரம். அந்த மரத்துக்கு அடியிலே உலகத்தை சுற்றிப்பார்க்க வந்த உண்மையான கடவுள் நின்று கொண்டிருக்கின்றார்.

வெளியிலே வந்த ஒரு பக்தர் அதைப் பார்த்தார். ஆச்சரியப்பட்டார். கடவுளின் அருகில் சென்றார்.

“பலே! கடவுள் மாதிரியே உருவமெடுத்து நிற்கிறீர்கள். வேடப்பொருத்தம் மிகவும் நன்றாகவுள்ளது” என்றார்.

கடவுளுக்கு தூக்கி வாரிப்போட்டது “என்ன இது? இப்படி சொல்லுகிறாய் நான் தான் கடவுள்” என்றார்.

“இதோ பார்..... இப்படி என்னிடம் மட்டும் சொன்னதோடு நிறுத்திக்கொள்”. சத்தம் போட்டு சொன்னால் ,உனக்கு மூளைக்கோளாறு என்று எல்லோருக்கும் தெரிந்து விடும். அதன் பின் கல்லை எடுத்து உன் மீது வீசுவார்கள். அவ்வளவு தான் என்று எச்சரிக்கை செய்தார் பக்தர்.

“இதோ பார்.....நான் சொல்வதை சிறிது நேரம் அவதானமாகக் கேள்....” என்று ஆரம்பித்தார்.

“நீ சொல்வதை நான் கேட்பது இருக்கட்டும். முதலில் நான் சொல்வதை நீ கேள். உள்ளே இருந்து எங்களின் சாமியார் வருவதற்குள் நீ இடத்தை விட்டு நீங்க வேண்டும் . இல்லையென்றால் விடயம் விபரீதமாக போய்விடும்” என்றார்.

“யார் அவர்? உங்கள் சாமியார் தானே வருகிறார், வரட்டும். அவருக்கு என்னை நன்றாக அடையாளம் தெரியும். ஏனென்றால் நான் எப்படி இருப்பேன் என்பதைப்பற்றி அவர் தானே தினமும் உங்களுக்கு எடுத்தியம்புகிறார்” என்றார் கடவுள்.

“இது என்ன வம்பாகப் போய்விட்டது” என்றார் இந்த பக்தர்.

சிறிது நேரம் நின்று விட்டு எல்லா பக்தர்களும் கலைந்து சென்றுவிட்டார்கள் .

அந்த ஒரு பக்தர் மட்டும் உள்ளே போய் சாமியார் கிட்ட விபரத்தை சொன்னார்.

“சாமி ....யாரோ ஒருத்தன் கடவுள் மாதிரி வேடம் போட்டுக் கொண்டு வந்து வெளியே குழப்பம் செய்கிறான்” என்றார்.

சாமியார் கோபமாக வெளியே வந்து பார்த்தார்.

“ஏன் இப்படி வேடம் போட்டு வந்து ,இங்கே கலாட்டா செய்கிறாய் .... பேசாமல் போய் விடு” என்றார்.

இவர் எவ்வளவோ சொல்லிப்பார்த்தார். அவர் கேட்கவில்லை. கடைசியில் ஒரு அறையில் இவரைத்தள்ளி கதவைப்பூட்டிவிட்டார்.

கடவுளுக்கு இது பெரும் சங்கடமாய் போய்விட்டது. கண்ணை மூடிக்கொண்டு பேசாமல் உட்கார்ந்தார் .

நடு இரவில் ...அந்தச் சாமியார் கதவைத் திறந்து கொண்டு உள்ளே வந்தார். கடவுள் காலிலே விழுந்தார்.

“கடவுளே!என்னை மன்னித்துவிடு. காலையிலேயே நீங்கள் யார் என்பதை அடையாளம் கண்டு கொண்டேன்” என்றார்.

*தென்கச்சி கோ சுவாமிநாதன்*

# கற்கை நெறிகளுக்கான விண்ணப்பம் கோரல்

தேசிய பயிலுநர் கைத்தொழிற் பயிற்சி அதிகார சபையினால் (NAITA) கிளிநொச்சி மாவட்டத்தில் வீட்டு மின்னிணைப்பு, நீர்க்குழாய் பொருத்துதல், குளிரூட்டி திருத்துதல், தாதி உதவியாளர், கணனி கற்கை அனுமதிப் பத்திரம் (Computer Driving License) ஆகிய கற்கை நெறிக்கான விண்ணப்பங்கள் தகுதியான இளைஞர், யுவதிகளிடமிருந்து கோரப்படுகின்றன.

மேற்படி கற்கை நெறிகள் அடுத்தாண்டு (2012) ஜனவரி மாதம் 2 ஆம் திகதி ஆரம்பிக்கப்படவுள்ளன.

எனவே, விண்ணப்பதாரிகள் தங்களது சுயவிபரங்கள் அடங்கிய விண்ணப்பங்களை பூர்த்தி செய்து தேசிய பயிலுநர், கைத்தொழிற் பயிற்சி அதிகார சபை, மாவட்ட அலுவலகம், ஆனந்தபுரம், கிளிநொச்சி எனும் முகவரிக்கு எதிர்வரும் டிசெம்பர் மாதம் 26 ஆம் திகதிக்கு முன்னர் நேரடியாகவோ அல்லது தபால் மூலமாகவோ அனுப்பி வைக்குமாறு கிளிநொச்சி தேசிய பயிலுநர் கைத்தொழிற் பயிற்சி அதிகாரசபை மாவட்ட முகாமையாளர் அறிவித்துள்ளார்.

அத்துடன் மேலதிக தொடர்புகளுக்கு 0343942824 அல்லது 0212285615 எனும் தொலைபேசி அழைப்பினை ஏற்படுத்துவதன் மூலம் தகவலைப் பெற முடியுமென அவர் குறிப்பிட்டுள்ளார்.

(அ-2)

# சிறுவர் பாதுகாப்பு நிதியத்தால் துவிச்சக்கரவண்டிகள் வழங்கல்

ஐக்கிய நாடுகள் சிறுவர் பாதுகாப்பு நிதியத்தினால் துணுக்காய், வவுனியா வடக்கு, கிளிநொச்சி ஆகிய கல்வி வலயங்களிலுள்ள பாடசாலைகளில் கல்வி பயிலும் மாணவர்களுக்கு துவிச்சக்கரவண்டிகள் வழங்கப்படவுள்ளன.

இத்துவிச்சக்கரவண்டிகள் வறுமைக் கோட்டின் கீழ் உள்ளவர்களுக்கும் நீண்ட தூரத்திலிருந்து போக்குவரத்து வசதியின்றி கல்வி பயிலவரும் மாணவர்களுக்கும் வழங்கப்படவுள்ளது.

இதற்கமைய துணுக்காய் கல்வி வலய மாணவிகளுக்கு 50 துவிச்சக்கரவண்டியும் வவுனியா வடக்கு கல்விவலய மாணவிகளுக்கு 50 துவிச்சக்கரவண்டிகளும் கிளிநொச்சி கல்வி வலய மாணவிகளுக்கு 90 துவிச்சக்கரவண்டிகளும் நேற்று முன்தினம் வியாழக்கிழமை அந்தந்த வலயக்கல்வி பணிப்பாளர்களிடம் கையளிக்கப்பட்டுள்ளது. இத்துவிச் சக்கரவண்டிகள் பாடசாலை அதிபர்கள் ஊடாக மாணவர்கள் தெரிவு செய்யப்பட்டு வழங்கப்படவுள்ளன.ஏற்கனவே கடந்த வாரம் ஆண்களுக்கு ஒரு தொகுதி துவிச்சக்கர வண்டிகள் வழங்கப்பட்டமை குறிப்பிடத்தக்கது. (அ-3-15)

# நூல் வெளியீட்டுவிழா

துணுக்காய் கல்வி வலயத்திலுள்ள மு/கோட்டை கட்டிய குளம் அ.த.க.பாடசாலையினால் கோட்டை சுவடுகள் நூல் வெளியீட்டுவிழா எதிர்வரும் 29ஆம் திகதி செவ்வாய்க்கிழமை பி.ப 1.30மணிக்கு பாடசாலை பிரதான மண்டபத்தில் பாடசாலை அதிபர் இ.தங்கராசா தலைமையில் நடைபெறவுள்ளது.

இந்நிகழ்வில் பிரதம விருந்தினராக துணுக்காய் வலயக்கல்விப்பணிப்பாளர் த.மேகநாதன் கலந்து சிறப்பிக்கவுள்ளார். சிறப்பு விருந்தினர்களாக துணுக்காய் பிரதேச செயலாளர் சி.குணபாலன், துணுக்காய் கல்வி வலய கணக்காளர் கு.பார்த்தீபன், துணுக்காய் கல்வி வலய முகாமைத்துவ பிரதிக் கல்விப் பணிப்பாளர் கு.விஜயபாலா, துணுக்காய் கல்வி வலய திட்டமிடல் பிரதிக்கல்விப்பணிப்பாளர் சி.ஜெயபாலன், துணுக்காய் கல்வி வலய மாணவர் அபிவிருத்தி பிரதிக்கல்விப்பணிப்பாளர் ஆ.சுந்தரமூர்த்தி, துணுக்காய் கோட்டக்கல்வி பணிப்பாளர் கு.செல்வரத்தினம், இலங்கை வேதாந்தமன்ற உறுப்பினர் எஸ்.மங்களம்மா ஆகியோர் கலந்து சிறப்பிக்கவுள்ளனர். (அ-3-15)

# குடாநாட்டு சந்தைகளில் நேற்றைய விலை விபரம்

| மரக்கறி வகைகள் | நெல்லியடி | திருநெல்வேலி | சாவகச்சேரி |
|---|---|---|---|
| | ரூபா | ரூபா | ரூபா |
| கத்தரிக்காய் | 70 | 60 | 50 |
| உருளைக்கிழங்கு | 80 | 90 | 75 |
| பச்சைமிளகாய் | 320 | 300 | 310 |
| தக்காளி | 120 | 110 | 140 |
| மரவள்ளிக்கிழங்கு | 30 | 35 | 25 |
| கோவா | 30 | 40 | 30 |
| கரட் | 100 | 80 | 80 |
| பூசணி | 50 | 60 | 60 |
| புடோல் | 40 | 30 | 50 |
| வாழைக்காய் | 30 | 35 | 30 |
| சின்ன வெங்காயம் | 100 | 110 | 90 |
| பெரிய வெங்காயம் | 80 | 90 | 70 |
| பாகற்காய் | 170 | 150 | 180 |
| வெண்டிக்காய் | 30 | 35 | 35 |
| கருணைக் கிழங்கு | 85 | 80 | 75 |
| பயற்றங்காய் | 180 | 200 | -- |
| லீக்ஸ் | 40 | 30 | 40 |
| பீற்றூட் | 30 | 20 | 25 |
| கறிமிளகாய் | 120 | 130 | -- |
| முருங்கைக்காய் | 60 | 50 | 70 |
| போஞ்சி | 50 | 70 | -- |
| கத்தரிதம்புள்ள | 60 | 60 | -- |
| கீரை - 1 பிடி | 10 | 20 | 20 |
| தேசிக்காய் | 180 | 190 | 200 |
| தேங்காய் (ஒன்று) | 20-35 | 20-35 | 30 |

# இராசி பலன்

26.11.2011

(கார்த்திகை 10, சனிக்கிழமை)

சூரிய உதயம் காலை 6.05 மணிவரை

பிரதமை முற்பகல் 10.37 மணிவரை

கேட்டை பின்னிரவு 1.36 மணிவரை

இராகுகாலம் 9.12-10.42 மணிவரை

சுபநேரம் 3.12-4.42 மணிவரை

**மேடம்** ஒருவேலையை முடிக்க ஒன்றுக்கு மேற்பட்ட தடைவைகள் அலையநேரிடலாம், வேலைச்சுமை கூடும், உடல்நலனில் கவனம் தேவை, செலவுகள் அதிகமாகும், மனச்சஞ்சலங்கள் அதிகமாகும்.

**இடபம்** குடும்பத்தில் சுகங்களும் சந்தோசங்களும் அதிகரிக்கும், வெளியூர்த் தொடர்புகள் விரிவடையும், செல்வாக்கு மேலோங்கும் நாள், நம்பி வந்தவர்களுக்கு கை கொடுத்து உதவுவீர்கள்.

**மிதுனம்** வியாபார விருத்தி ஏற்படும் நாள், வீட்டுப் பிரச்சினைகளை தீர்த்து கொள்வீர்கள், ஆரோக்கியம் சீராகும், கடன்களில் ஒரு பகுதியை கொடுத்து மகிழும் வாய்ப்புண்டு, சுவாரஸ்யமான நாள்.

**கடகம்** நீண்ட நாள் ஆசையொன்று நிறைவேறலாம், தொழிலில் புதிய முதலீடுகளை செய்யும் எண்ணம் உருவாகும், பிரியமான சிலரின் சந்திப்பு இடம் பெறலாம், போசன சுகமுண்டு.

**சிங்கம்** சுப செய்திகள் வந்து சேரும் நாள், பெண்கள் வழியில் பெருமைப்படும் வகையில் உதவிகள் கிடைக்கலாம், வாகன சுகமுண்டு, வியாபார விருத்திக்கு வித்திடுவீர்கள், பெற்றோர் மீது பாசம் கூடும்.

**கன்னி** உயர்வான சிந்தனைகள் மனதில் குடிகொள்ளும் நாள், உறவினர் வழியில் உதவிகள் கிடைக்கலாம், தொழில் போட்டிகளை முறியடித்து வெற்றி காண்பீர்கள், பொருளாதார நிலை உயரும்.

**துலாம்** புத்திசாலித்தனமான செயற்பாடுகளால் புகழ் அதிகரிக்கும்,பெரிய மனிதர்கள் வீடு தேடி வருவர், தொழில் முன்னேற்றமுண்டு, பொருளாதார நிலை உயரும், சுப் செய்திகள் வந்து சேரலாம்.

**விருச்சிகம்** வளர்ச்சிப் பாதையை நோக்கி நகர்வீர்கள், உறவினர் பகை அகலும், வருமானம் திருப்தி தரும், தேவையற்ற கற்பனைகளை வளர்ப்பீர்கள், போசன சுகமுண்டு.

**தனுசு** இடமாற்றத்தால் இனிய மாற்றம் காணவேண்டிய நாள், கோபத்தை குறைத்துக் கொள்வது நல்லது, தொழில் வளர்ச்சிக்கு அனுபவம் மிக்கவர்களின் ஆலோசனைகள் கிடைக்கலாம்.

**மகரம்** தொழில் முன்னேற்றம் கருதி பெரிதும் பாடுபடுவீர்கள்,பொருளாதார நிலை உயரும்,உறவினர் வருகையால் உள்ளம் மகிழ்வீர்கள், பொது வழியில் புகழ் கூடும்.

**கும்பம்** தடைப்பட்ட காரியங்கள் கைகூடும், அருமையான நாள், எதிர்பார்த்த தொகை வந்து சேரலாம், மனதிற்கினிய தகவல்கள் வந்து சேரலாம், நண்பர்கள் உதவியுண்டு.

**மீனம்** தடைகள் விலகி தனலாபம் பெருகும் நாள்,திறமை மிக்கவர்களின் ஒத்துழைப்பு கிடைக்கும், தேகநலன் சீராகும், விலகிச் சென்றவர்கள் விரும்பி வந்து இணைவர், சொத்து தகராறுகள் நல்ல முடிவுக்கு வரும்.

வளவன்

# தொடரும் பருவ மழையால் மக்கள் இருப்பிடங்களை விட்டு வெளியேற்றம்

(கரவெட்டி)

வடமராட்சியில் நேற்று முன்தினம் வியாழக்கிழமை பெய்த கனமழையால் அதிகளவான மக்கள் தமது இருப்பிடங்களை விட்டு அருகில் உள்ள ஆலயங்கள், பொது மண்டபங்களில் தஞ்சம் புகுந்துள்ளனர்.

கரவெட்டி பகுதிகளான இராச கிராமம், கன்பொல்ல ஆகிய பகுதிகளில் உள்ள குடிசைகளில் வாழும் மக்கள் அதிகளவானோர் இவ்வாறு இடம் பெயர்ந்துள்ளனர்.


தமது குடிசைகளுக்குள் வெள்ள நீர் புகுந்ததால் தொடர்ந்து வசிக்க முடியாத சூழ் நிலையில் தமக்கு அவசியமான பொருட்களை மட்டும் எடுத்துக் கொண்டு அருகில் உள்ள பாதுகாப்பான இடங்களுக்கு தஞ்சம் புகுந்தனர்.

இது தொடர்பாக உரிய அதிகாரிகள் இம்மக்களின் அவல நிலைகளை கருத்திற் கொண்டு உதவ முன்வர வேண்டும் என பாதிக்கப்பட்ட மக்கள் கோரிக்கை விடுத்துள்ளனர்.

(அ-3-24)

# வீதியைப் புனரமைக்க மக்கள் கோரிக்கை

(நவாலி)



மானிப்பாய் ஆலடிச் சந்தியிலுள்ள வர்த்தக வங்கிக்கு முன்னால் உள்ள வீதியானது புனரமைக்கப்படாது குன்றும் குழியுமாக காணப்படுகின்றது.

இவ்வீதியில் மழைநீர் தேங்கி நின்று வங்கிக்கு செல்லும் வாடிக்கையாளர்கள் மற்றும் பயணிகள் பயணம் செய்யும் போது வீதி யால் செல்லும் வாகனங்களால் வெள்ள நீரானது அடித்துச் செல்வதால் ஆடைகள் அழுக்கடைகின்றது.

எனவே, உரிய தரப்பினர் இவ்வீதியைப் புனரமைத்து போக்குவரத்துக்கு உதவுமாறு மக்களும் பயணிகளும் கோரிக்கை விடுத்துள்ளனர். (அ-3-26)

# அநாதரவான நிலையில் சிகிச்சை பெறும் முதியவர்



(யாழ்ப்பாணம்)

யாழ். பொலிஸ் நிலையத்திற்கு அருகாமையில் அநாதரவாக நின்ற முதியவர் ஒருவரினை யாழ். பொலிஸார் யாழ்.போதனா வைத்தியசாலையில் அனுமதித்துள்ளனர்.

கடந்த இரு வார்ங்களாக யாழ். போதனா வைத்தியசாலையில் 8 ஆம் விடுதியில் நோயுற்ற நிலையில் சிகிச்சை பெற்றுவந்த முதியவர் தற்போது குணமடைந்துள்ளார்.

ஆயினும் இம்முதியவர் உறவினர்கள் யாருமற்ற நிலையில் வைத்தியசாலையில் தங்கியுள்ளார்.

ஏறத்தாழ 60 வயது மதிக்கத்தக்க இம்முதியவரை உறவினர்கள் இனங்கண்டு பொலிஸாரிடம் அல்லது போதனாவைத்தியசாலையில் தொடர்பு கொள்ளுமாறு யாழ். பொலிஸ் நிலையப் பிரதிப் பொறுப்பதிகாரி கேட்டுள்ளார். (அ)

# நீதிமன்றத்தால் அபராதம்

(யாழ்ப்பாணம்)

நுளம்புப் பெருக்கத்திற்கேற்ற வகையில் கழிவுப் பொருட்களை சேகரித்து வைத்த குற்றச்சாட்டின் பேரில் 14 பேர் யாழ். பொலிஸாரால் கைது செய்யப்பட்டு நேற்றைய தினம் யாழ்.நீதிவான் நீதிமன்றில் ஆஜர்படுத்தப்பட்டனர்.

வழக்கை விசாரித்த யாழ். நீதிவான் நீதிமன்ற மேலதிக நீதிவான் அ.பிறேம்சங்கர் குறித்த நபர்கள் மன்றில் குற்றத்தை ஒப்புக் கொண்டமையால் குற்றவாளிகளெனக்கண்டு 6 பேருக்கு தலா ஆயிரத்து 500 ரூபா அபராதமும் 8 பேருக்கு தலா ஆயிரம் ரூபா அபராதமும் செலுத்தத்தவறின் தலா ஒருமாத சாதாரண சிறைத் தண்டனையும் வழங்கித் தீர்ப்பளித்தார். (அ-3)

# முன்பள்ளிகளை அபிவிருத்தி செய்ய நடவடிக்கை

(சாவகச்சேரி)

தென்மராட்சி பிரதேசத்தில் உள்ள முன்பள்ளிகளை அபிவிருத்தி செய்வதற்கான ஆயத்த நடவடிக்கைகளை தென்மராட்சி வலயப் பணிமனையினர் மேற்கொண்டு வருகின்றனர்.

தென்மராட்சி பிரதேச செயலகத்தில் அண்மையில் நடைபெற்ற ஒருங்கிணைப்புக்குழுக்கூட்டத்தில் மேற்குறித்த தீர்மானம் எடுக்கப்பட்டது.

இதன்படி தென்மராட்சி பிரதேசத்தில் நீண்ட காலமாக அபிவிருத்தி செய்யப்படாத முன்பள்ளிகள் அபிவிருத்தி செய்யப்படவுள்ளமை குறிப்பிடத்தக்கது. (அ-3-29)

# பரிசளிப்பு விழா

(கரவெட்டி)

வடமராட்சி கல்வி வலய பாடசாலைகளுக்கிடையிலான விளையாட்டு விழாவின் பரிசளிப்பு நிகழ்வு எதிர்வரும் டிசெம்பர் மாதம் 4 ஆம் திகதி காலை 9 மணிக்கு நெல்லியடி மத்திய மகா வித்தியாலய ஆராதனை மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

வடமராட்சி வலயக் கல்விப் பணிப்பாளர் வை. செல்வராசா தலைமையில நடைபெறவுள்ள இந்நிகழ்விற்கு பிரதம விருந்தினராக வடமராட்சி தெற்கு மேற்கு பிரதேச செயலாளர் எஸ். சத்தியசீலன் கலந்து சிறப்பிக்கவுள்ளார். (அ-3-24)

* * * * * *

(யாழ்ப்பாணம்)

யாழ்.இந்து ஆரம்பப் பாடசாலை பரிசளிப்பு விழா நாளை மறுதினம் திங்கட்கிழமை காலை 8:30 மணிக்கு பாடசாலை அதிபர் சு.தியாகலிங்கம் தலைமையில் நடைபெறவுள்ளது.

இந்நிகழ்விற்கு பிரதம விருந்தினராக யாழ். வலயக் கல்விப் பணிப்பாளர் யோகசாமி இரவீந்திரன் கலந்து சிறப்பிக்கவுள்ளார். (அ)





# வடமாகாண விஞ்ஞான புதிர்போட்டியில் இரண்டு மாணவர்களுக்கு பதக்கம்



(கரவெட்டி)

வடமாகாண விஞ்ஞான புதிர்ப் போட்டியில் நெல்லியடி மத்திய மகா வித்தியாலய இரு மாணவர்கள் தங்கம், வெள்ளிப் பதக்கங்களைப் பெற்றுள்ளனர்.

இதில் தரம் 8 இல் கல்வி கற்கும் மாணவி த.அபிஷேகா முதலாம் இடத்தைபெற்று தங்கப்பதக்கத்தையும் தரம் 9இல் கல்வி கற்கும் சி.வினித்குமார் 2 ஆம் இடத்தைப் பெற்று வெள்ளிப்பதக்கத்தையும் பெற்றுள்ளனர். (அ-3-24)



# வித்தகபுரம் மக்களுக்கு...

(யாழ்ப்பாணம்)

தெல்லிப்பளை வித்தகபுரம் பிரதேசத்தில் காசுக்கான வேலைத்திட்டத்திற்கு பதிவுகளை மேற்கொண்டவர்கள் அனைவரும் நாளை ஞாயிற்றுக்கிழமை காலை 8 மணிக்கு கிராம சேவகர் அலுவலகத்திற்கு வங்கிப் புத்தகம், அடையாள அட்டை என்பவற்றுடன் வருமாறு தெல்லிப்பளை வித்தகபுரம் கிராம அபிவிருத்தி சங்கம் அறிவித்துள்ளது. (அ)









யாழ்.இந்துக்கல்லூரியின் பரிசளிப்பு விழா அண்மையில் கல்லூரி குமாரசுவாமி மண்டபத்தில் நடைபெற்றது. இந்நிகழ்வில் பிரதம விருந்தினர்களாக கலந்து கொண்ட பேராசிரியர் கா.குகபாலன், அவரது பாரியார், கல்லூரி அதிபர் வி.கணேசராஜா, அவரது பாரியார், பிரதிஅதிபர்கள், உப அதிபர், பழைய மாணவர் சங்கத்தலைவர் ஆகியோர் மேடையில் நிற்பனையும் கல்லூரி அதிபர் உரையாற்றுவதையும் திருமதி குகபாலன் 2010 ஆம் ஆண்டின் முதன்மைமாணவனாக தெரிவு செய்யப்பட்ட ஜெ.நிரோஜனுக்கு சான்றிதழ்,தங்கப்பதக்கம் வழங்குவதையும் படங்களில் காணலாம்.

# மீள்குடியேற்றப்பட்ட மக்களுக்கு அடிப்படை வசதிகள் எதுவுமில்லை

## சபையில் ஐ.தே.க. எம்.பி. விஜயகலா விசனம்



யுத்தத்தினால் பாதிக்கப்பட்டு இடம்பெயர்ந்த மக்கள் முழுமையாக இன்னமும் மீளக்குடியமர்த்தப்படவில்லை. மீள்குடியேற்றப்பட்ட மக்களுக்கும் அடிப்படை வசதிகள் மேற்கொள்ளப்படவில்லை. வீடுகளை இழந்த நிலையில் அல்லற்படும் இந்த மக்களுக்கு வீடுகளை அமைத்துக் கொடுக்க வேண்டியது அரசாங்கத்தின் பொறுப்பாகும். வீடு, வாசல்களை அமைக்காது மீள்குடியேறிய மக்கள் எங்கு வாழ்வது? என்பது குறித்து அரசாங்கம் சிந்திக்க வேண்டும் என்று ஐக்கிய தேசியக் கட்சியின் யாழ். மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் திருமதி விஜயகலா மகேஸ்வரன் சபையில் தெரிவித்தார்.

யுத்தத்தில் ஆயிரக்கணக்கான தமிழ் பெண்கள் விதவைகளாக்கப்பட்டுள்ளனர். ஆயிரக்கணக்கானோர் அங்கவீனர்களாகவும், சிந்த சுவாதீனமற்றவர்களாகவும், மாற்றப்பட்டுள்ளனர். வடக்கு, கிழக்கில் பாதிக்கப்பட்ட மக்களுக்கு நிவாரணங்களை வழங்கவோ, அந்த மக்களின் வாழ்வாதாரத்தை கட்டியெழுப்பவோ இந்த வரவு செலவுத் திட்டத்தில் எத்தகைய திட்டங்களும் அமுல்படுத்தப்படவில்லை. இது மிகவும் கவலைக்குரிய விடயமாகும். வாழ்க்கையை வெறுத்த நிலையில் வாழ்ந்து வரும் இந்த மக்களின் வாழ்வாதாரத்தை கட்டியெழுப்ப அரசாங்கம் நடவடிக்கை எடுக்க வேண்டும் என்றும் அவர் வலியுறுத்தினார்.

வரவு செலவுத் திட்டம் மீதான விவாதத்தில் கலந்து கொண்டு உரையாற்றுகையிலேயே திருமதி விஜயகலா மகேஸ்வரன் எம்.பி. மேற்கண்டவாறு கூறியுள்ளார்.

இங்கு அவர் மேலும் உரையாற்றுகையில், யுத்தத்தினால் உயிர், உடைமைகளை இழந்த தமிழ் மக்கள் தமது வாழ்வாதாரத்தினை கட்டியெழுப்புவதற்காக தொடர்ந்து பாடுபட்டு வருகின்றனர். சகலதையும் இழந்து துன்பத்தின் எல்லை வரை சென்ற மக்களுக்கு இனியாவது விடிவு பிறக்க வேண்டும். அந்த விடிவை நோக்கியதாக அரசாங்கத்தின் செயற்பாடுகள் அமைய வேண்டியது இன்றைய காலகட்டத்தில் அவசியமானதாகும். இந்த நிலையிலேயே ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணியின் ஏழாவது வரவு செலவுத் திட்டம் சமர்ப்பிக்கப்பட்டுள்ளது. ஆனாலும் இந்த வரவு செலவுத் திட்டத்தில் யுத்தத்தால் பாதிக்கப்பட்ட மக்களுக்கான மீளெழுச்சித் திட்டங்கள் எதுவும் இல்லாமை கவலையளிக்கும் விடயமாகும்.

வரவு செலவுத் திட்டத்தில் அரசாங்க ஊழியர்களுக்கு 10 வீதம் சம்பள உயர்வு வழங்கப்பட்டிருப்பதுடன் ஓய்வூதியம் பெறுபவர்களுக்கும் கொடுப்பனவு உயர்த்தப்பட்டுள்ளது. இது வரவேற்கத்தக்க நடவடிக்கையாகும். ஆனாலும் நாட்டில் 65 இலட்சமாகவுள்ள தனியார்துறை ஊழியர்களுக்கு சம்பள உயர்வுக்காக பரிந்துரைகள் எதனையும் அரசாங்கம் மேற்கொள்ளவில்லை. அத்துடன் தனியார்துறை ஊழியர்களுக்கு சலுகைகள் எதனையும் அரசாங்கம் வழங்கவில்லை.

வாழ்க்கைச் செலவு மலைபோல் அதிகரித்துள்ள இன்றைய நிலையில் அத்தியாவசியப் பொருட்களை கொள்வனவு செய்வதற்குக் கூட பெருந்தொகை நிதியினை செலவிட வேண்டிய நிலை காணப்படுகின்றது. இந்த நிலையில் தனியார்துறை ஊழியர்களுக்கு சம்பள உயர்வுக்கான பரிந்துரை வழங்கப்படாமை அவர்களை நட்டாற்றில் விடும் செயலாகும். அரசாங்கத்தின் இத்தகைய நடவடிக்கையினால் தனியார்துறை ஊழியர்கள் பெரும் ஏமாற்றமடைந்துள்ளனர்.

வடக்கு, கிழக்கில் பாதிக்கப்பட்டுள்ள விதவைகள் மற்றும் அங்கவீனர்களுக்கு இந்த வரவு செலவுத் திட்டத்தில் என்ன நிவாரணம் வழங்கப்பட்டுள்ளது. விதவைகளின் வாழ்வாதாரத்தை மேம்படுத்துவதற்கோ அல்லது அவர்களுக்கு சுயதொழில்களை வழங்குவதற்கோ இந்த வரவு செலவுத் திட்டத்தில் எத்தகைய திட்டங்களும் இல்லை.

வடக்கு, கிழக்கில் பாதிக்கப்பட்ட பெண்கள் தொடர்ந்தும் வாழ்க்கை வெறுத்த நிலையில் வாழ்ந்து வருகின்றனர். இவர்களுக்கு சுயதொழில் முயற்சிகளை ஆரம்பிக்கும் வகையில் திட்டங்களை அரசாங்கம் அமுல்படுத்த வேண்டும். வடக்கு, கிழக்கு மாகாணங்களில் யுத்தத்தின் பின்னர் வாழ்வாதாரத்தை கட்டியெழுப்புவதற்கு வேலைவாய்ப்பு என்பது அப்பகுதி மக்களுக்கு மிகவும் அவசியமாக வுள்ளது. இத்தகைய வேலைவாய்ப்புக்களை வழங்குவதற்கு எத்தகைய திட்டங்களும் அரசாங்கத்தின் வரவு செலவுத்திட்டத்தில் இல்லை.

**தொண்டர் ஆசிரியர்கள் போராட்டம்**

வன்னியில் தொண்டர் ஆசிரியர்கள் போராட்டம் நடத்தி வருகின்றனர். இரு வாரங்களுக்கு முன்னரும் தமக்கு நிரந்தர நியமனம் வழங்குமாறு கோரி இவர்கள் போராட்டம் நடத்தியிருந்தனர். இதனையடுத்து அமைச்சரவைப் பத்திரம் சமர்ப்பிக்கப்பட்டு நிரந்தர நியமனம் வழங்க நடவடிக்கை எடுக்கப்படும் என உறுதியளிக்கப்பட்டிருந்தது. ஆனாலும் இன்று வரை இதற்கான அமைச்சரவைப் பத்திரம் சமர்ப்பிக்கப்படவில்லை. இதனால் வெறுப்படைந்துள்ள அவர்கள் சாகும் வரை உண்ணாவிரதப் போராட்டத்தில் குதிப்பதற்கு எண்ணியுள்ளனர்.

இதேபோல் வடக்கு, கிழக்கில் பெரும் கஷ்டங்களுக்கு மத்தியில் பட்டப்படிப்பினை மேற்கொண்டுவிட்டு வேலைவாய்ப்பு இல்லாத நிலையில் வாழ்வதா, சாவதா? என்று சிந்தித்தவாறு ஆயிரக்கணக்கான பட்டதாரிகள் வாழ்ந்து வருகின்றனர். இவர்களுக்கு உரிய வேலைவாய்ப்புக்களை வழங்குவதற்கு எதுவித நடவடிக்கையினையும் அரசாங்கம் எடுக்கவில்லை. கிழக்கு மாகாணத்திலும் பட்டதாரிகள் போராட்டங்களை நடத்தவுள்ளதாக அறிவித்துள்ளனர்.

யுத்தத்தின் போது இடம்பெயர்ந்த மக்கள் முழுமையாக இன்னமும் மீளக்குடியேற்றப்படவில்லை. இவர்களில் ஒரு தொகுதியினர் இன்னமும் முகாம்களிலேயே இருந்து வருகின்றனர். மீள் குடியேற்றப்பட்ட மக்களுக்கும் முழுமையாக அடிப்படை வசதிகள் மேற்கொள்ளப்படவில்லை. இடம்பெயர்ந்த மக்களுக்கு 50 ஆயிரம் வீடுகளை அமைத்துக் கொடுப்பதற்கு இந்தியா முன்வந்துள்ளது. கடந்த ஒன்றரை வருடங்களுக்கு முன்னர் இதற்கான இணக்கத்தினை இந்தியா தெரிவித்திருந்த போதிலும் இதுவரை ஆயிரம் வீடுகள் மட்டுமே அமைக்கப்பட்டுள்ளன. ஏனைய 49 ஆயிரம் வீடுகளும் எப்போது அமைக்கப்படும். அதுவரை இடம்பெயர்ந்து மீளக்குடியேறிய மக்கள் எங்கு வாழ்வது?

யாழ்ப்பாணம், வலிகாமம் வடக்குப் பகுதியில் இன்னமும் மீள்குடியேற்றம் முழுமை பெறவில்லை. அதி பாதுகாப்பு வலயமாக இருந்த இப்பகுதியில் மீளக்குடியேற பல பகுதிகளில் இன்னமும் படையினர் அனுமதிக்கவில்லை. இந்தப் பகுதியில் இன்னமும் 26 ஆயிரத்துக்கும் மேற்பட்டோர் மீள்குடியேற வேண்டியுள்ளது. ஆனால், இதற்கு படையினர் அனுமதி வழங்குவதாக இல்லை.

யாழ்ப்பாணத்தின் பொன்னாலை பகுதியிலிருந்து வெளியேறிய மக்களை மீளக்குடியேற்றும் விடயத்தில் அரசாங்கம் இழுத்தடிப்புக்களை செய்து வருகின்றது. இங்கிருந்து இடம்பெயர்ந்த மக்கள் தொடர்ந்தும் முகாம்களிலும் உறவினர், நண்பர்கள் வீடுகளிலும் அல்லற்படுகின்றனர். வலிகாமம் மேற்கு பிரதேசத்திலுள்ள சல்லியான், கல்விளான், பொன்னாலை மேற்கு, திருவடிநிலை ஆகிய நான்கு கிராமங்களில் சுமார் 500 குடும்பத்தவர்கள் பரம்பரை பரம்பரையாக வாழ்ந்து வந்தனர் என தனது அறிக்கையில் குறிப்பிட்டுள்ளார். (அ-2)

# பல்கலையில் பொலிஸ் காவலரண்கள் மாணவர்களே தீர்மானிக்க வேண்டும்

## உயர்கல்வி அமைச்சின் செயலாளர்

(கொழும்பு)

பல்கலைக்கழகங்களில் பொலிஸ் நிலையங்களை அமைப்பதா? இல்லையா? என்பதை மாணவர்களே தீர்மானிக்க வேண்டும் என உயர்கல்வி அமைச்சின் செயலாளர் டாக்டர் சுனில் நவரத்ன தெரிவித்தார்.

ஒரு சிறு மாணவர் குழுவினரால் பல்கலைக்கழகங்களில் குழப்பங்கள் தோற்றுவிக்கப்படுகின்றன. இதனால் ஏனைய மாணவர்களின் கல்வி நடவடிக்கைகள் பாதிக்கப்படுகின்றன. இதற்கு இடமளிக்க முடியாது.

எனவே, பல்கலைக்கழகங்களில் குழப்பங்களை ஏற்படுத்துவதைத் தவிர்த்துக் கொள்வதா? அல்லது சுமுகமான சூழ்நிலையை ஏற்படுத்துவதா? என்ற தீர்மானத்திலேயே பொலிஸ் காவலரண்கள் அமைப்பது தொடர்பிலான கேள்விக்குத் தீர்வு காண முடியும்.

நாட்டில் நடைமுறையில் உள்ள சட்டம், ஒழுங்கு பல்கலைக்கழகங்களிலும் கடைப்பிடிக்கப்பட வேண்டும். அதனை மீற முடியாது. பல்கலைக்கழகம் தனியொரு உலகமல்ல. அதுவும் நாட்டுடன் தொடர்புபட்டது என்றும் அவர் தெரிவித்தார். (அ-2)


# UNIVERSITY OF JAFFNA
# BID NOTICE

The Chairman, University Procurement Committee, University of Jaffna will receive sealed bids from the qualified contractors for the following works.

| Work / Service Details | Security Deposit (Rs) | Non-refundable deposit (Rs) | Approximate direct cost of the work (Rs. in million) | Minimum ICTAD Grade |
|---|---|---|---|---|
| Supplying and fixing Floor Tiles at the Dept.of Pathology, Faculty of Medicine, University of Jaffna. | 35,000 | 500.00 | 3.5 | C8 (Buildings) |

Bid forms may be obtained from the ***Deputy Registrar/ Capital Works & Planning Unit University of Jaffna*** upon producing valid registration book and receipt for the cash payment for the above bid fee at the Shroff's Counter, University of Jaffna till ***02.12.2011.***

Perfected bid should be sealed and marked with the job and the name of the work on the top left hand corner of the envelop and sent by registered post to reach the Registrar, University of Jaffna P.Box.57, Thirunelvely, Jaffna or could be deposited in the bid box kept at Registrar's Office, University of Jaffna.

Bids will be accepted till ***2.30p.m on 12.12.2011*** and open immediately thereafter.

Bidders or their accredited representatives could be present at the time of opening of bids.

Bid forms may be inspected by the Bidders free of charge at the Capital Works & Planning Unit of this University during office hours, if necessary.

**P.O.Box 57,**
**Thirunelvely,**
**Jaffna.**
**25.11.2011**

(அ/5049)

**Registrar**
**University of Jaffna.**

# ஐக்கிய நாடுகள் சபை, மனித உரிமை பேரவையின் ஆதரவுடனேயே பயங்கரவாதத்தை தோற்கடித்தோம்

## அமைச்சர் மைத்திரிபால சிறிசேன தெரிவிப்பு

(கொழும்பு)

புலி பயங்கரவாதத்தை தோற்கடிப்பதற்கு நாம் நடவடிக்கைகளை மேற்கொண்ட வேளை பல்வேறான சவால்களுக்கு முகம் கொடுத்தோம்.உலக நாடுகளுடன் நாம் சண்டை பிடித்துக் கொள்ளவில்லை.ஐ.நா. மற்றும் மனிதவுரிமை பேரவையின் ஆதரவுடனேயே புலி பயங்கரவாதத்தை நாம் தோற்கடித்தோம் என்று சுகாதார அமைச்சர் மைத்திரிபால சிறிசேன தெரிவித்தார்.

பாராளுமன்றில் நேற்று முன்தினம் நடைபெற்ற வரவு செலவு திட்டம் மீதான விவாதத்தில் கலந்து கொண்டு உரையாற்றும் போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அமைச்சர் தொடர்ந்து உரையாற்றுகையில்,உலகத்தின் முன்னிலையில் தன்னிறைவான நாடாக இலங்கை எழுந்து நிற்பதற்கே ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ தலைமையிலான அரசாங்கம் நடவடிக்கை எடுத்து வருகின்றது.

மேற்குலக நாடுகளுடன் மட்டுமன்றி வேறு எந்தவொரு நாட்டுடனும் நாம் சண்டை பிடித்துக் கொள்ளவில்லை.சர்வதேசத்துடன் அந்நியோன்னியமாக நண்பர்களாகவே இருக்கின்றோம்.அதனால்தான் பயங்கரவாதத்தை தோற்கடித்த வேளையில் உலக நாடுகள் எங்களுக்கு உதவின.

புலிப் பயங்கரவாதத்தை தோற்கடிப்பதற்காக நாம் நடவடிக்கைகளை மேற்கொண்ட வேளையில் பாரிய சவால்களை முகம் கொடுத்தோம்.சில சக்திகள் எமக்கு எதிராகவே செயற்பட்டன. எனினும் ஐ.நா மற்றும் மனித உரிமை பேரவையின் ஆதரவுடனேயே நாம் பயங்கரவாதத்தை வெற்றி கொண்டோம்.

அமெரிக்கா,எகிப்து,இத்தாலிமற்றும் மேற்குலக நாடுகளில் மக்கள் வீதிக்கு இறங்கியுள்ளனர். விலையேற்றம்,உணவு பொருட்களின் விலையுயர்வு ,தொழில்வாய்ப்புக்களை கோரியே மக்கள் வீதிக்கு இறங்கியுள்ளனர்.

மத்திய கிழக்கு நாடுகளில் யுத்த பின்புலனே இருக்கின்றது.அரசியல் ஸ்திரத்தன்மை எந்த நாட்டில் இருக்கிறது.ஜனாதிபதி தலைமையிலான ஆளும் மக்கள் சுதந்திர முன்னணி அரசாங்கத்திடம் மட்டுமே அரசியல் ஸ்திரத்தன்மை இருக்கின்றது.

அபிவிருத்தியை கொழும்பில் இருந்து கொண்டு தேடினால் கிடைக்காது கொழும்புக்கு வெளியேயும் வடக்கு, கிழக்குக்கும் சென்று பார்க்கும் போது எதிர்க்கட்சியினருக்கு நாம் அழைப்பு விடுக்கின்றோம்.

ஐ.தே.க அபிவிருத்தி பணிகளில் ஈடுபட்டிருந்தால் 2004 ஆம் ஆண்டுக்கு தேர்தலில் ஐ.தே.க. ஏன் தோல்வி கண்டது.நாம் அபிவிருத்தியை புரட்டிக்கொண்டு முன்னோக்கி செல்வதனைப் பொறுத்துக்கொள்ள முடியாததன் காரணத்தினலேயே ஐ.தே.க. பொய்களை அடுக்கி கொண்டே போகின்றது.

இலங்கை உலக பொருளாதாரத்துடன் இணைந்துள்ள நாடாகும்.உலக பொருளாதாரத்தில் பாதிப்பு ஏற்படும்.அதிலிருந்து எம்மால் தனித்து நிற்க முடியாது.சர்வதேச சவால்களுக்கு முகம் கொடுத்தே நாம் செயற்படுகின்றோம் என்றார்.

(அ-2)

## அப்பியாசக்கொப்பிகள் வழங்கும் நிகழ்வு

துணுக்காய் கல்வி வலயத்தில் உள்ள பாடசாலைகளில் கல்வி பயிலும் மாணவர்களின் கல்வி செயற்பாட்டுக்கு உதவும் வகையில் ஜனாதிபதி செயலகம் கிளிநொச்சிக் கிளை நிலையத்தினால் ஒட்டுசுட்டான் கோட்ட பாடசாலைகளுக்கு அப்பியாசக் கொப்பிகள் வழங்கப்பட்டுள்ளன.

இதில் 15 ஆயிரம் அப்பியாசக்கொப்பிகள் மாணவர்களுக்கு வழங்கப்பட்டுள்ளன .மேலும் ஒரு தொகுதி அப்பியாசக் கொப்பிகள் எதிர்வரும் 3 ஆம் தவணை விடுமுறைக்கு முன்னர் வழங்கப்படவுள்ளதாக ஜனாதிபதி செயலக கிளிநொச்சிக் கிளை அதிகாரி தெரிவித்துள்ளார். (அ-3-15)

# பல்கலைக்கழக விரிவுரையாளர்கள் உயர்கல்வி அமைச்சரிடம் முறைப்பாடு

(கொழும்பு)

அரசாங்கத்தினால் தாம் ஏமாற்றப்பட்டுள்ளதாக பல்கலைக்கழக விரிவுரையாளர்கள் முறைப்பாடு செய்துள்ளனர்.ஜனாதிபதி மகிந்த ராஜா பக்ஷ மற்றும் உயர் கல்வி அமைச்சர் எஸ்.பி. திஸாநாயக்க ஆகியோரிடம் எழுத்து மூலம் முறைப்பாடு செய்யப்பட் டுள்ளது.

சம்பள உயர்வு தொடர்பில் வழங்கப்பட்ட வாக்குறுதிகள் எதுவும் நிறைவேற்றப்படவில்லை என சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.வரவு செலவு திட்டத்தில் அரசாங்கம் எம்மை முட்டாள்களாக்கிவிட்டது என பல்கலைக்கழக விரிவுரையாளர்கள் குற்றம் சுமர்த்தி உள்ளனர்.இது தொடர்பில் தொழிற்சங்க நடவடிக்கை எடுக்க திட்டமிடப்பட்டுள்ளதாக குறிப்பிட்டுள்ளனர்.

நாட்டின் சகல பல்கலைக்கழக விரிவுரையாளர்களுடனும் பேச்சுவார்த்தை நடத்த திட்டமிட்டுள்ளதாக தெரிவித்துள்ளனர்.

பல்கலைக்கழக விரிவுரையாளர்களின் அடிப்படை சம்பளத்தை 20 வீதத்தினால் உயர்த்துவது என அரசாங்கம் இணங்கியிருந்ததாக குறிப்பிடப்படுகின்றது.

பல்கலைக்கழக வெளியிலான பயிற்சி நெறிகள் மற்றும் பாதுகாப்பு ஏற்பாடுகளுக்காக பாரியளவில் பணம் செலவிடப்படுகின்ற போதிலும் விரிவுரையாளர்களின் நியாயமான கோரிக்கைகள் நிறைவேற்றப்படவில்லை என குற்றம் சுமத்தப்பட்டுள்ளது. (அ-2)

# தமிழர் புனர்வாழ்வுக்கழகத்தை சேர்ந்த ஐவருக்கு பிடியாணை

(கொழும்பு)

தமிழர் புனர்வாழ்வுக்கழக முக்கியஸ்தர்கள் ஐவருக்கு கொழும்பு உயர்நீதிமன்றம் பிடியாணை பிறப்பித்துள்ளது.

தமிழ் மக்களுக்கு நல்வாழ்க்கை ஒன்றை ஏற்படுத்தி கொடுத்தல் மற்றும் தமிழர் பிரதேசங்களை அபிவிருத்தி செய்தல் ஆகியவற்றை முன்னிலைப்படுத்தி தமிழர் புனர்வாழ்வுக்கழகம் வெளிநாடுகளிலிருந்து பெரும் தொகை பணத்தை பெற்றுக் கொண்டு அதனை விடுதலை புலிகளுக்கு வழங்கியுள்ளதாக அரசாங்க தரப்பில் குற்றம் சாட்டப்பட்டிருந்தது.

அது தொடர்பாக கொழும்பு உயர்நீதி மன்றத்தில் நடைபெற்று வந்த வழக்கிலேயே தமிழர் புனர்வாழ்வு கழகத்தின் முக்கியஸ்தர்கள் ஐவருக்கு பிடியாணை பிறப்பிக் கப்பட்டுள்ளது.அதன்படி காந்திலிங்கம் பிரேம் ரெஜி,கதிரேசு கணேசலிங்கம், பாலசுப்பிரமணியம் ஸ்ரீறிஸ்கந்தராசா, கோமலியன் பிரபாகரன்,துரைராசா பிரியதர்ஷன் ஆகியோருக்கு எதிராகவே மேற்படி பிடியாணை பிறப்பிக்கப்பட்டுள்ளது.

பயங்காரவாதிகளுக்கு நிதி சேரிக்க உடந்தையாக இருந்ததாக அவர்கள் மீது சட்டமா அதிபரினால் குற்றம் சாட்டப்பட்டுள்ளது. (அ-2)

# பருவப் பெயர்ச்சி காலநிலை; அனைத்து பகுதிகளிலும் மழை

(கொழும்பு)

நாட்டில் நிலவுகின்ற பருவப்பெயர்ச்சி காலநிலை காரணமாக வடக்கு,கிழக்கு, வடமத்திய மற்றும் ஊவா மாகாணங்களில் அதிக மழை பெய்யும் என காலநிலை அவதான நிலையம் தெரிவித்துள்ளது.இரவுவேளைகளில் நாட்டின் ஏனைய பிரதேசங்களிலும் மழை பெய்யும் என தெரிவிக்கப்பட்டுள்ளது. இதற்கிடையில் மட்டக்களப்பில் பெய்து வரும் கடும் மழை காரணமாக 30 குடும்பங்கள் இடம்பெயர்ந்துள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது.

மேலும் மட்டக்களப்பில் பிரதான போக்குவரத்து பாதைகளும் மழை நீரில் மூழ்கியுள்ளதால் வீதிகளில் போக்குவரத்திற்கு கடற்படையினரின் இயந்திரப் படகுகளும் ஏனைய தோணி வகைகளும் பயன்படுத்தப்பட்டு வருகின்றன.

இது தொடர்பாக மட்டக்களப்பு வானிலை அவதானிப்பு நிலையம் கருத்துத் தெரிவிக்கையில், தற்போது பெய்து வருவது முதலாவது பருவகால மழையெனவும் இரண்டாவது பருவகால மழை இன்னும் ஆரம்பிக்கப் படவில்லையென வானிலை அவதானிப்பு நிலையத்தின் உதவிப் பொறுப்பதிகாரி தெரிவித்துள்ளார். (அ-2-9)

# துமிந்த சில்வாவுக்கு ஏற்பட்ட காயங்கள் குறித்து அறிக்கை சமர்ப்பிக்க உத்தரவு

(கொழும்பு)

கொலன்னாவையில் இடம்பெற்ற துப்பாக்கிச் சூட்டில் பாராளுமன்ற உறுப்பினர் துமிந்த சில்வாவுக்கு ஏற்பட்டுள்ள காயங்கள் தொடர்பான அறிக்கையை சமர்ப்பிக்குமாறு ஸ்ரீ ஜயவர்த்தனபுர வைத்தியசாலையின் பணிப்பாளருக்கு கொழும்பு நீதிவான் நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது.

துமிந்த சில்வா சார்பில் நீதிமன்றில் ஆஜரான ஜனாதிபதி சட்டத்தரணி ஹேமந்த வர்ணகுலசூரிய தாக்கல் செய்த நகர்த்தல் பிரேரணையொன்றை ஆராய்ந்த பின்னரே நீதிமன்றம் இந்த உத்தரவை பிறப்பித்துள்ளது.

குறித்த சம்பவத்தில் பாரத லக்ஸ்மன் பிரேமச்சந்திர உள்ளிட்ட நான்கு பேர் உயிரிழந்துள்ளதாகவும் மேலும் சிலர் காயமடைந்ததாகவும் நகர்த்தல் பிரேரணையை தாக்கல் செய்த சட்டத்தரணி சுட்டிக்காட்டினார்.

எனினும் விசாரணைகளை மேற்கொள்ளும் அதிகாரிகள் பாராளுமன்ற உறுப்பினர் துமிந்த சில்வாவுக்கு ஏற்பட்டுள்ள காயங்கள் தொடர்பாக இதுவரை விசாரணை நடத்தவில்லை எனவும் சட்டத்தரணி தெரிவித்துள்ளார்.

இந்தச் சம்பத்தை அடுத்து துமிந்த சில்வா தொடர்பில் பல்வேறு வதந்திகள் பரவி வருவதால் அவருக்கு காயம் ஏற்பட்ட விதம் தொடர்பாக நீதிமன்றில் அறிக்கை தாக்கல் செய்யப்பட வேண்டும் எனவும் சட்டத்தரணி கூறியுள்ளார்.

இந்த வாதங்களை கவனத்திற் கொண்ட கொழும்பு மேலதிக நீதிவான் பிரசன்ன டி அல்விஸ் துமிந்த சில்வாவிற்கு சிகிச்சையளித்த ஸ்ரீ ஜயவர்த்தனபுர வைத்தியசாலையின் வைத்திய அதிகாரிகளின் அறிக்கைகள் உள்ளிட்ட அனைத்து அறிக்கைகளையும் உள்ளடக்கிய அறிக்கையொன்றை நீதிமன்றத்தில் தாக்கல் செய்யுமாறு உத்தரவு பிறப்பித்துள்ளார். (அ-2)

# குறை செயற்பாடுடைய தொழில்களுக்கு புத்துயிர் அளிக்க திட்டம்-ரம்புக்வெல

(கொழும்பு)



குறைந்த செயற்பாடுடைய தொழில் முயற்சிகள் மற்றும் குறை பயன்பாட்டுடைய சொத்துக்களுக்கு புத்துயிர் அளிக்கும் சட்டத்தில் குறிப்பிட்டுள்ள தொழில் முயற்சிகளுக்கான புதிய அதிகாரிகளை நியமிப்பதற்கு அமைச்சரவை அங்கீகாரம் வழங்கியுள்ளது.

இதற்கமைய, பெலவத்த சீனி தொழிற்சாலைக்காக அம்பாந்தோட்டை மாவட்ட செயலாளரும் செவனகல சீனி தொழிற்சாலைக்காக மொனராகலை மாவட்ட செயலாளரும் நியமிக்கப்பட்டுள்ளதாக அமைச்சரவை பேச்சாளர் அமைச்சர் கெஹெலிய ரம்புக்வெல தெரிவித்தார்.

இந்தச்சட்டத்தின் கீழ் பொறுப்பேற்கப்பட்டுள்ள ஏனைய நிறுவனங்களுக்கான அதிகாரிகளும் விரைவில் நியமிக்கப்படுவார்கள் என அமைச்சர் கூறியுள்ளார்.

அந்த நிறுவனங்களுடன் தொடர்புடைய அனைத்து துறைகளையும் மேற்பார்வை செய்வதற்காக அமைச்சர் பிரியதர்ஷன யாப்பாவின் தலைமையிலான அமைச்சரவை உப குழுவும் அதற்கு ஒத்துழைப்பு வழங்குவதற்காக அதிகாரிகள் உபகுழுவும் நியமிக்கப்பட்டுள்ளன.

அமைச்சரவை தீர்மானங்களை அறிவிக்கும் செய்தியாளர் மாநாட்டில் அமைச்சர் அறிவித்துள்ளார். (அ-2)

# நாடு செல்லும் போக்கை அறியமுடியவில்லை-சஜித்

(கொழும்பு)

இந்த நாட்டின் நீதி, குழியில் விழுந்துள்ளதாக ஐக்கிய தேசியக் கட்சியின் இணைப் பிரதித் தலைவர் சஜித் பிரேமதாச தெரிவித்துள்ளார்.

நாடு தற்போது எதை நோக்கி சென்று கொண்டிருக்கிறது என்பதை அறிந்து கொள்ள முடியாதுள்ளதாக அவர் தெரிவித்துள்ளார்.

பாரத லக்ஸ்மன் கொலை தொடர்பிலான சந்தேகநபரை கைது செய்யுமாறு நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளபோதும் அதனை செயற்படுத்த முடியாத நிலைக்கு நாடு தள்ளப்பட்டுள்ளதை அவதானிக்க முடிவதாக அவர் குறிப்பிட்டுள்ளார்.

தங்களுடைய உரிமைகளை காக்க பொது மக்கள் எழுச்சி பெற வேண்டிய காலம் ஏற்பட்டுள்ளதாக அவர் கூறியுள்ளார். (அ-2)

# இறைவருகை இன்னிசை வழிபாடு

(யாழ்ப்பாணம்)

வன்னி மறைமாவட்ட அமெரிக்கன் சிலோன் மிஷன் திருச்சபையின் வருடாந்த இறைவருகை இன்னிசை வழிபாடு எதிர் வரும் டிசெம்பர் மாதம் 3 ஆம் திகதி சனிக்கிழமை காலை 9 மணிக்கு கிளிநொச்சி மத்திய கல்லூரி மண்டபத்தில் மறைமாவட்டத் தலைவர் அருட்திரு டி.எஸ்.குகனேஸ்வரன் தலைமையில் நடைபெறவுள்ளது.

இந்நிகழ்வில் பிரதம விருந்தினராக கிளிநொச்சி மாவட்ட அரசாங்க அதிபர் திருமதி ரூபவதி கேதீஸ்வரன், சிறப்பு விருந்தினராக திருச்சபை தலைவர் அருட்திரு அ.ஜெயக்குமாரன் கலந்து சிறப்பிக்கவுள்ளனர்.

இந்நாளிற்கான இறை செய்தியினை அருட்கலாநிதி எஸ்.ஜெபநேசன் வழங்கவுள்ளார்.

இவ் வழிபாட்டிற்கு மன்னார், முல்லைத்தீவு, வவுனியா, கிளிநொச்சி பகுதிகளின் மிஷன் திருச்சபைகள் பங்குபற்ற உள்ளதாக மறைமாவட்ட செயலாளர் அருட்திரு டி.எஸ். மதியாபரணம் அறிவித்துள்ளார். (அ)

# கஞ்சா வைத்திருந்த இராணுவவீரர் நீதிமன்றில் ஆஜர்படுத்தப்பட்டார்

(கொழும்பு)

885 கிராம் கஞ்சா வைத்திருந்த இராணுவ வீரர் ஒருவரை தனமல்விலை பொலிஸார் கைது செய்து நீதிமன்றில் ஆஜர்படுத்தியுள்ளனர்.

885 கி.கஞ்சாவை பொதி செய்து தன் வசம் வைத்திருந்த இராணுவச் சிப்பாய் ஒருவர் பயணித்த வாகனத்தை தனமல்விலை பொலிஸார் சோதனையிட்டபோது மேற்படி சந்தேக நபரிடம் கஞ்சா பொருள் இருப்பது கண்டுபிடிக்கப்பட்டது.

பாணந்துறையைச் சேர்ந்த மேற்படி இராணுவ வீரர் வெல்லவாய இராணுவ முகாமில் கடமையாற்றியவர் என்றும் நீண்ட நாட்களாக இவ்வாறு வேலைகளில் ஈடுபட்டவர் என விசாரணையில் தெரியவந்துள்ளதாக தனமல்விலை பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

இந்நபரை நேற்று முன்தினம் வெல்லவாய நீதிவான் நீதிமன்றில் ஆஜர்படுத்தியுள்ளனர்.

இது பற்றிய மேலதிக விசாரணைகளை தனமல்விலை பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர் என்பது குறிப்பிடத்தக்கது. (அ-2)

## போலி கடவுச் சீட்டுடன் 4 இலங்கையர்கள் கைது

(கொழும்பு)

போலிக் கடவுச்சீட்டுக்களோடு பாரிஸ் செல்ல முற்பட்ட 4 இலங்கையர்கள் இந்தியாவில் கைது செய்யப்பட்டுள்ளனர்.

இந்தியாவின் இந்திரா காந்தி சர்வதேச வானூர்தி நிலையத்தில் வைத்து இவர்கள் கைது செய்யப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

இவர்களுக்கு ஐதராபாத்தில் வைத்து குறித்த கடவுச் சீட்டுக்கள் வழங்கப்பட்டுள்ளன. இது குறித்து தொடர்ந்தும் விசாரணைகள் இடம்பெற்று வருவதாகத் தெரிவிக்கப்படுகின்றது. (அ-2-9)



ஜனாதிபதியின் பிறந்த தினத்தினையொட்டி மீசாலை விக்னேஸ்வரா மகா வித்தியாலயத்தில் மரம் நடுகைத்திட்டம் இடம்பெற்றது. இந் நிகழ்வில் பாடசாலை அதிபர் த.அம்பலவாணர் மரம் ஒன்றை நடுவதைப் படத்தில் காணலாம்.

(படம்: சாவகச்சேரி செய்தியாளர்)

# பியர் கிராம மக்களின் காணி பிரச்சினைக்கு தீர்வு கிடைத்தது

(கொழும்பு)

வன்னி மாவட்ட அபிவிருத்தி குழுவின் தலைவரும் கைத்தொழில் வணிகத்துறை அமைச்சருமான றிசாத் பதியுதீன் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவுடன் நடத்திய பேச்சுவார்த்தையினையடுத்து தலைமன்னார் பியர் கிராம மக்களின் காணிப்பிரச்சினைக்கு தீர்வு கிடைத்துள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது.

இச்சம்பவம் தொடர்பாக மேலும் தெரிய வருவதாவது, 1990 ஆம் ஆண்டு வடக்கில் இருந்து வெளியேற்றப்பட்ட மக்களில் தலைமன்னார் பியர் மக்களும் உள்ளடங்குவர். இந்த நிலையில் மீண்டும் இவர்கள் தமது கிராமத்தில் மீள்குடியேற சென்று தாம் ஏற்கனவே கொள்வனவு செய்த காணியினை துப்புரவு செய்து அதில் கொட்கை இட்டு இம்முறை வாழ்வதற்கு சென்றபோது பொலிஸார் இம்மக்களை இக்காணியில் உட்புகுவதற்கு தடையினை ஏற்படுத்தியமை குறித்து இம்மக்கள் அமைச்சர் றிசாத் பதியுதீனின் கவனத்திற்கு கொண்டு வந்திருந்தனர்.

இதனையடுத்து அப்பிரதேசத்திற்கு விஜயம் செய்த அமைச்சர் றிசாத் பதியுதீன், நிலைமைகளை ஆராய்ந்து பின்னர் ஜனாதிபதியினை சந்தித்து நிலையினை விளக்கப்படுத்தியிருந்தார்.

இந்த நிலையில் இங்கு மீள்குடியேறியுள்ள 500 இற்கும் மேற்பட்ட மக்களை அவர்கள் தற்போது துப்புரவு செய்துள்ள காணியிலேயே மீள்குடியமர்த்துவதற்கு தேவையான காணியினை வழங்குமாறு ஜனாதிபதி தமக்கு பணிப்புரை வழங்கியுள்ளதாக காணி சீர்திருத்த ஆணைக்குழுவின் பணிப்பாளர் சட்டத்தரணி நிமல் புஞ்சிஹேவா அமைச்சர் றிசாத் பதியுதீனிடம் தெரிவித்துள்ளார்.

அத்தோடு இம்மக்களுக்கான காணியினை வன்னி மாவட்ட அபிவிருத்தி குழுவின் தலைவர் றிசாத் பதியுதீன் ஊடாக மக்களுக்கு பகிர்ந்தளிப்பதற்கு உரிய நடவடிக்கையினை எடுக்கவுள்ளதாகவும் தற்போது பொலிஸில் செய்யப்பட்டுள்ள முறைப்பாட்டை நீக்கி கொள்ளவுள்ளதாகவும் ஆணைக்குழு பணிப்பாளர் மேலும் கூறினார். (அ)

# அமெ. இலங்கையில் மேற்கொள்ளவிருந்த பயிர்ச்செய்கை திட்டம் கைவிடப்பட்டது

(கொழும்பு)

அமெரிக்க நிறுவனமொன்று இலங்கையில் மேற்கொள்ளவிருந்த பாரிய பயிர்ச் செய்கைத் திட்டத்தை சூழலியலாளர்களின் போராட்டத்தை அடுத்து கைவிட்டுள்ளது.

இலங்கையில் உள்ள சோமாவதி தேசியப் பூங்காவில் அமெரிக்காவின் டோல் என்ற நிறுவனம் பாரியளவில் வாழைப் பயிர்ச் செய்கையை மேற்கொள்ளவிருந்தது.

இதற்காக பாரிய முதலீட்டையும் அந்த நிறுவனம் மேற்கொள்ளவிருந்தது. எனினும் இந்த முதலீடு காரணமாக யானைகள் மற்றும் ஏனைய இயற்கைப் பயிர்களுக்கு பாதிப்பு ஏற்படும் என்று சூழலியலாளர்கள் சுட்டிக் காட்டியிருந்தனர்.

இதனையடுத்து அமெரிக்க நிறுவனம் தமது திட்டத்தை கைவிட்டுள்ளதாக அவுஸ்திரேலிய வானொலி தமது செய்திக்குறிப்பில் தெரிவித்துள்ளது. (அ-2)

# வரவு செலவுத்திட்டம் தனியார் துறையை உதாசீனம் செய்துள்ளது

## இரண்டாவது வாசிப்பின்போது கிரியெல்ல

(கொழும்பு)

வெளிநாட்டு முதலீட்டாளர்களை கவர்வதற்கு எந்த நடவடிக்கைகளையும் எடுக்கவில்லை என ஐக்கிய தேசியக் கட்சியின் பாராளுமன்ற உறுப்பினர் லக்ஷ்மன் கிரியெல்ல தெரிவித்துள்ளார்.

வரவு செலவுத் திட்டம் மீதான இரண்டாம் வாசிப்பின் மூன்றாம் நாள் விவாதத்தில் கலந்து கொண்ட போது அவர் மேற்கண்டவாறு குறிப்பிட்டுள்ளார்.

அரசாங்கத்தின் இந்த வரவு செலவுத் திட்டம் தனியார் துறையை உதாசீனம் செய்த வரவு செலவுத்திட்டமாக கருதப்பட வேண்டுமென அவர் குறிப்பிட்டுள்ளார். வெளிநாட்டு முதலீட்டாளர்களை அழைப்பதற்கு அரசாங்கம் எவ்வித முனைப்பும் காட்டவில்லை என அவர் தெரிவித்துள்ளார்.

இதேவேளை, சர்வதேச பொருளாதார சூழ்நிலையை கருத்திற்கொண்டே இந்த வரவு செலவுத்திட்டம் தயாரிக்கப்பட்டுள்ளது என அமைச்சர் மைத்திரிபால சிறிசேன தெரிவித்துள்ளார்.

சகல நாடுகளுடனும் பரஸ்பர உறவுகளை ஏற்படுத்திக் கொள்வதே அரசாங்கத்தின் நோக்கம் என அவர் குறிப்பிட்டுள்ளார். (அ-2)

# நுளம்புகளை ஒழிக்க சூழல் பாதுகாப்பு திட்டம்

டெங்கு நுளம்புகளை ஒழித்துக் கட்டும் நடவடிக்கையின் ஓர் அம்சமாக சுற்றுப்புறச் சூழலை சுத்தமாக வைத்திருப்பது தொடர்பிலும் அதனை உறுதி செய்யும் வகையிலும் சோதனை நடவடிக்கைகளில் கொழும்பு மாநகரசபையினர், வைத்தியர்கள் ஆகியோர் பொலிஸார், படையினருடன் இணைந்து செயற்பட்டு வருகின்றனர்.


இதன் அடிப்படையில் கொழும்பில் டெங்கு நுளம்புகள் காணப்படுவதாகச் சந்தேகிக்கப்படும், கிராண்ட்பாஸ் பகுதிக்கு நேற்றைய தினம் விஜயம் செய்த குழுவினர் நிறுவனங்கள் மற்றும் வீடுகளுக்கு விஜயம் செய்து அவற்றைப் பார்வையிட்டதுடன் டெங்கு நுளம்புகள் பரவும் வகையில் சூழலை வைத்திருக்க கூடாது எனவும் கேட்டுக் கொண்டனர்.

அத்துடன் டெங்கு நுளம்புகளைக் கட்டுப்படுத்துவது, அவை பரவாமல் தடுப்பது, அதன்போது மேற்கொள்ள வேண்டிய நடவடிக்கைகள் என்பவை குறித்தும் விளக்கமளித்தனர்.

மேலும் டெங்கு நுளம்புகள் பரவும் வகையில் சூழலை வைத்திருந்தோருக்கு எதிராக நடவடிக்கைகளும் மேற்கொள்ளப்பட்டன.

இக் குழுவில் மூன்று வைத்தியர்கள், இரண்டு பரிசோதகர்கள், பொலிஸார், படையினர் என பலரும் அடங்கியுள்ளனர். (அ-2)

# வரவு செலவுத்திட்ட வாசிப்பின் போது எதிர்த்தரப்பினர் தாக்கப்பட்டனர்



## ரணில் கடிதம்

(கொழும்பு)

வரவு செலவுத்திட்டம் சமர்ப்பிக்கப்பட்ட சந்தர்ப்பத்திலும் அதற்கு முன்னரும் இடம்பெற்ற சம்பவங்கள் குறித்து விளக்கும் வகையில் எதிர்க்கட்சி தலைவர் ரணில் விக்ரமசிங்க பொது நலவாய நாடுகளின் பாராளுமன்ற சங்கத்தின் பொதுச் செயலாளர் கலாநிதி விலியம் எப்.ஷிஜாவுக்கு கடிதம் ஒன்றை அனுப்பிவைத்துள்ளார்.

அதில் உள்ள விடயங்களை ஆராய்ந்து உரிய தரப்பினர் மற்றும் நிறுவனங்களின் கவனத்திற்கு கொண்டுவருமாறு எதிர்க்கட்சி தலைவர் வேண்டுகோள் விடுத்துள்ளார்.

வரவு செலவுத்திட்டம் சமர்ப்பிக்கப்பட்ட நாளில் வெளிப்புற நுழைவாயிலில் பாதுகாப்புத் தரப்பினர்களைப் பயன்படுத்தி எதிர்க்கட்சி பாராளுமன்ற உறுப்பினர்களை சோதனைக்கு உட்படுத்த அரசாங்கம் நடவடிக்கை எடுத்ததாகவும் இதன்போது அவர்களிடம் இருந்த ஆவணங்கள் சில கைப்பற்றப்பட்டதாகவும் ரணில் விக்ரமசிங்க தெரிவித்துள்ளார்.

இவ்வாறு கைப்பற்றப்பட்ட எந்தவொரு ஆவணமும் பாதுகாப்பிற்கு அச்சுறுத்தலாக அமையவில்லை எனவும் ரணில் விக்ரமசிங்க அக்கடிதத்தில் குறிப்பிட்டுள்ளார்.

வரவு செலவுத்திட்டம் வாசிக்கப்படும் போது எதிர்க்கட்சி பாராளுமன்ற உறுப்பினர்கள் சிலரை ஆளும்கட்சி உறுப்பினர்கள் தாக்கியதாகவும் அவர் மேலும் குறிப்பிட்டுள்ளார். (அ-2)

# நாடு எதிர்நோக்கும் மிகப்பெரிய சவால் நிறைவேற்று அதிகாரமுறைமையே

## மாதுலுவே சோபிததேரர்

நாட்டு மக்கள் எதிர்நோக்கி வரும் மிகப் பெரிய சவால் நிறைவேற்று அதிகார ஜனாதிபதிமுறைமையே என மாதுலுவே சோபித தேரர் தெரிவித்துள்ளார்.

நீதியை நிலை நாட்டுவதில் இன,மத பேதங்களை பார்க்க வேண்டிய அவசியமில்லை என அவர் குறிப்பிட்டுள்ளார்.

நாட்டின் சகல மக்களுக்கும் சுயாதீனமான முறையில் நீதி அமுல்படுத்தப்பட வேண்டும்.

பொலிஸ் சேவையில் உயர் பதவி முதல் கடை நிலை வரையில் அரசியல் தலையீட்டுடன் கூடிய நியமனங்களே மேற்கொள்ளப்படுகின்றன. தகவல்களை அறிந்து கொள்ளும் உரிமை முடக்கப்பட்டுள்ளது. போதைப் பொருள் கடத்தல்காரர்கள்,பாலியல் வன்முறைச்சம்பவங்களில் ஈடுபட்டவர்களுக்கு தண்டனைகளிலிருந்து விலக்கு அளிக்கப்பட்டுள்ளது.

இவ்வாறான குற்றச் செயல்களுடன் ஒப்பீடு செய்யும் போது முன்னாள் இராணுவத் தளபதி சரத் பொன்சேகா குற்றச் செயல்களில் ஈடுபட்டதாக கருத முடியாது என அவர் குறிப்பிட்டுள்ளார். (அ-2)

# கிழக்கு மாகாண முதலமைச்சர் பிரி. உயர்ஸ்தானிகருடன் சந்திப்பு

பிரித்தானிய உயர்ஸ்தானிகர் ஜோன் றென்கின்,கிழக்கு மாகாண முதலமைச்சர் சிவநேசதுரை சந்திரகாந்தன் ஆகியோருக்கிடையில் சந்திப்பொன்று இடம்பெற்றுள்ளது.

திருகோணமலை முதலமைச்சர் செயலகத்தில் இடம்பெற்ற இந்த சந்திப்பானது, சிநேகபூர்வகலந்துரையாடலாக அமைந்திருந்ததாக கிழக்கு மாகாண முதலமைச்சர் அலுவலகம் அறிவித்துள்ளது.

இந்த சந்திப்பின் போது கிழக்கு மாகாணத்தின் தற்போதைய நிலைமை, அபிவிருத்தி முன்னெடுப்புக்கள் மற்றும் 2012 ஆம் ஆண்டில் நடைமுறைப்படுத்தப்படவுள்ள அபிவிருத்தித் திட்டங்கள் மற்றும் பாதுகாப்பு தொடர்பாகவும் விரிவாக கலந்துரையாடப்பட்டுள்ளது.

கிழக்கு மாகாணத்தில் இருக்கின்ற விதவைகளின் வாழ்வாதார மேம்பாடு மற்றும் சிறுவர் கல்வி அபிவிருத்தி என்பன தொடர்பாகவும் எதிர்காலத்தில் கிழக்கு மாகாணத்தில் உதவிகள் வழங்குவது தொடர்பாகவும் உயர்ஸ்தானிகர் அவதானம் செலுத்தியுள்ளார்.(அ-2)

# பொன்சேகாவிற்கு பொதுமன்னிப்பு வழங்கி விடுதலை செய்யுங்கள்

## அமெரிக்கா கோரிக்கை

சிறையில் அடைக்கப்பட்டுள்ள முன்னாள் இராணுவ தளபதி சரத் பொன்சேகா விடுதலை செய்யப்படாவிட்டால் ஐக்கிய நாடுகளின் மனித உரிமைகள் ஆணைக்குழு இலங்கைக்கு எதிரான நடவடிக்கைகளை மேற்கொள்ளும். இந்த அச்சுறுத்தலை அமெரிக்கா விடுத்துள்ளதாக தெஜலன்ட் செய்தித்தாள் தெரிவித்துள்ளது.

சரத் பொன்சேகாவை அமெரிக்கா அரசியல் கைதியாகவே கருதுகிறது.

இந்த நிலையில் வெள்ளைக்கொடி வழக்கில் சரத் பொன்சேகாவுக்கு இலங்கையின் கொழும்பு மேல் நீதிமன்றம் கடந்த 3 வருட சிறைத்தண்டனை விதித்தது.

இதனையடுத்து அமெரிக்க இராஜதந்திரி ஒருவருக்கும் இலங்கையின் உயர்தர அமைச்சர் ஒருவருக்கும் இடையில் இடம்பெற்ற சந்திப்பின் போது அமெரிக்கா இந்த எச்சரிக்கையை விடுத்துள்ளது.

தமது நாடு இலங்கையில் நடத்திய ஆய்வு ஒன்றில் சரத் பொன்சேகா விடுவிக்கப்பட வேண்டும் என்றே பெரும்பாலான பொது மக்கள் விரும்புவதாக இச் சந்திப்பின்போது அமெரிக்க இராஜதந்திரி குறிப்பிட்டுள்ளார்.

சரத் பொன்சேகாவுக்கு இலங்கை அரசாங்கம் பொதுமன்னிப்பை வழங்கவேண்டும். இல்லையேல் ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் ஆணைக்குழுவில் இலங்கைக்கு எதிராக அமெரிக்கா பிரேரணையை கொண்டு வரும் என்றும் அமெரிக்க இராஜதந்திரி எச்சரித்துள்ளார்.

இலங்கையின் உயர் அமைச்சருடன் அமெரிக்க தூதர் பற்றீசியா புட்டினீஸ் இந்த சந்திப்பை நடத்த ஏற்பாடாகியிருந்தது.

எனினும் கடைசி நேரத்தில் அவரின் பிரதிநிதி ஒருவரே ,ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியை பிரதிநிதித்துவப்படுத்தும் இலங்கையின் உயர் அமைச்சரை சந்தித்துள்ளதாக தகவல்கள் வெளியாகியுள்ளன.

இதேவேளை, அரசாங்கத்துக்கும் தமிழ்த் தேசியக் கூட்டமைப்புக்கும் இடையிலான பேச்சுவார்த்தை தொடர்பில் கருத்துரைத்த அமெரிக்க இராஜதந்திரி இந்த பேச்சுவார்த்தையில் அரசாங்கத்தின் நகர்வு குறித்து தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு திருப்தி கொள்ளவில்லை என்று குறிப்பிட்டுள்ளார். (அ-2)

# பிரகீத் வெளிநாட்டில் வசிப்பது குறித்து விரிவான விசாரணை

(கொழும்பு)

சுயாதீன ஊடகவியாளரும் கேலிச்சித்திரக்காரருமான பிரகீத் எக்னெலிகொட வெளிநாடொன்றில் வசித்து வருகின்றார் என்ற செய்தியின் உண்மைத் தன்மை தொடர்பில் இராஜதந்திர ரீதியில் தீவிர விசாரணைகள் முன்னெடுக்கப்பட்டு வருகின்றன.

இந்நிலையில் அவர் தொடர்பான உண்மைத் தகவல் விரைவில் வெளியிடப்படும் என்று அரசாங்கத்தின் பேச்சாளரும் ஊடகத்துறை அமைச்சருமான கெஹலிய ரம்புக்வெல தெரிவித்துள்ளார்.

எக்னெலிகொடவின் வெளிநாட்டுப் பயணம் தொடர்பில் முன்னாள் நீதியரசரும் அரசாங்கத்தின் ஆலோசகருமான மொஹான் பீரிஸ் தெரிவித்த கருத்துக்கு அரசாங்கம் பொறுப்புவாய்ந்த நடவடிக்கையினை முன்னெடுக்க வேண்டிய சூழ்நிலையில் உள்ளதால் இது தொடர்பான விசாரணைகள் தீவிரமாக்கப்பட்டுள்ளன என்றும் அமைச்சர் குறிப்பிட்டார்.

அமைச்சரவையின் தீர்மானங்களை அறிவிக்கும் வாராந்த ஊடகவியலாளர் மாநாடு அரசாங்க தகவல் திணைக்களத்தில் இடம்பெற்றது. இதன் போது எக்னெலிகொட தொடர்பில் ஊடகவியலாளர் ஒருவர் எழுப்பிய கேள்விக்கு பதிலளிக்கையிலேயே அமைச்சர் மேற்கண்டவாறு குறிப்பிட்டார். (அ-2)

# விண்ணப்பம் கோரல்

(முல்லைத்தீவு)

முல்லைத்தீவு மாவட்டத்திற்கு தமிழ் மற்றும் முஸ்லிம் விவாகப் பதிவாளர்களுக்கான விண்ணப்பங்களை பதிவாளர் நாயகம் திணைக்களம் கோரியுள்ளது.

இதில் தமிழ் விண்ணப்பதாரிகளுக்குரிய விண்ணப்ப தகைமைகளாக,

பிறப்பு மற்றும் இறப்பு பதிவு செய்கின்ற பிரிவுக்குள் நிரந்தர முகவரியை உடையவராகவும் 30 வயதிற்கு குறையாமலும் 60 வயதிற்குட்பட்ட விவாகம் செய்த ஆண், பெண் இருபாலாரும் விண்ணப்பிக்க முடியும்.

முஸ்லிம் விண்ணப்பதாரிகள் அதே தகைமையை பெற்றிருப்பதோடு இப்பதவிக்கு ஆண்கள் மட்டும் விண்ணப்பிக்க வேண்டும்.

விண்ணப்பதாரிகள் விண்ணப்பப்படிவங்களையும் கல்வி மற்றும் ஏனைய தகைமைகளையும் உரிய மாவட்டச் செயலகம், பிரதேச செயலர் அலுவலகம், கிராம அலுவலர் அலுவலகம் போன்ற இடங்களில் பெற்றுக் கொள்ளலாம்.

தமிழ் விண்ணப்பதாரிகள் தமது விண்ணப்பப்படிவங்களை எதிர்வரும் டிசெம்பர் 27 ஆம் திகதிக்கும் முஸ்லிம் விண்ணப்பதாரிகள் டிசெம்பர் 29 ஆம் திகதிக்கும் முன்னர், பதிவாளர் நாயகம், திணைக்களம், இல..234/ ஏ3, டென்சில் கொப்பேகடுவ மாவத்தை பத்தரமுல்லை என்னும் முகவரிக்கு பதிவுத்தபாலில் அனுப்பி வைக்க வேண்டும்.

---

அரசாங்க, அரசாங்க அங்கீகாரம் பெற்ற தனியார் பாடசாலைகளில் ஆசிரியர்களை 2011/2012 ஆம் ஆண்டில் இலங்கைப் பல்கலைக்கழகங்களுக்கு அனுமதிப்பதற்காக கல்வி அமைச்சினால் விண்ணப்பங்கள் கோரப்பட்டுள்ளன.

இதற்கமைய 2011/2012 ஆம் கல்வியாண்டில் ஆங்கிலத்தை ஒரு பாடமாகக் கொண்ட 1.கலைப்பட்ட பாடநெறி (II) விஞ்ஞானப் பாடநெறி ஆகியபாடநெறிகளைத் தொடர்வதற்கு இலங்கைப் பல்கலைக்கழகங்களுக்கு அனுமதிப்பதற்காக பொது ஆங்கிலம் /கலை(ஆங்கிலப் பாடத்துடன் கலை) தகைமைப் பரீட்சையில் சித்தியடைந்துள்ள அரச மற்றும் அரசாங்க அங்கீகாரம் பெற்ற தனியார் பாடசாலைகளில் கடமையாற்றும் ஆசியரிர்களும் விண்ணப்பிக்க முடியும்.

விண்ணப்பதாரிகளின் விண்ணப்ப தகைமைகளாக,

✷ 2007 ஆம் வருடத்தில் அல்லது அதற்குப் பின்னர் நடத்தப்பட்ட பொது விஞ்ஞான/கலை(ஆங்கிலப் பாடத்துடன்) தகைமை வெளிவாரிப் பரீட்சையில் சித்தியடைந்திருத்தல் வேண்டும்.

✷ விண்ணப்பப்பத்திரம் ஏற்றுக்கொள்ளும் இறுதி நாளன்று ஆசிரியராக 5 வருட சேவையைப் பூர்த்தி செய்திருக்க வேண்டியதுடன் நியமனம் நிரந்தரமாக்கப்பட்டதாக இருக்க வேண்டும்.

✷ ஆசிரியர் கல்லூரி, கல்வியற்கல்லூரி , பல்கலைக்கழகம் என்பவற்றிலோ தேசிய கல்வி நிறுவகத்தின் பாடநெறிகளையோ தொடர்வதற்காகப் பதிவு செய்யாதவராக இருக்க வேண்டும்.

✷ அத்துடன் விண்ணப்பதாரிகள் கற்கை விடுமுறை உரிமை கொண்டவர்களாவும் இருத்தல் வேண்டும்.

✷ பூர்த்தி செய்யப்பட்ட விண்ணப்பங்களை எதிர்வரும் டிசெம்பர் மாதம் 16 ஆம் திகதிக்கு முன்னர் கல்விப்பணிப்பாளர், மனிதவள அபிவிருத்திக்கிளை,கல்வி அமைச்சு, இசுறுபாய பத்தரமுல்லை எனும் முகவரிக்கு அனுப்பிவைக்க வேண்டும்.

இவ்விண்ணப்பங்கள் கோரல் தொடர்பான மேலதிக விபரங்களை வலம்புரி அலுவலகத்திலோ, நேற்றையதினம் வெளியாகிய வர்த்தமானிப் பத்திரிகையிலோ பார்வையிடலாம். (அ)

# காணி இல்லாதவர்களுக்கு காணி வழங்க நடவடிக்கை

## ஜனாதிபதி தெரிவிப்பு

சொந்தக் காணிகள் இல்லாத மேலும் ஐயாயிரம் குடும்பங்களுக்கு காணிகளை பெற்றுக்கொடுக்க அரசாங்கம் நடவடிக்கை எடுத்துள்ளது.

இந்த காணிகளுக்கான உறுதிப் பத்திரங்கள் அடுத்த மாதம் முதலாம் திகதி வழங்கப்படவுள்ளன. இது தொடர்பான நிகழ்வு ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ தலைமையில் அலரிமாளிகையில் நடைபெறவுள்ளது.

காணி வசதிகள் இன்றி வாழ்ந்து வந்த ஐயாயிரம் குடும்பங்கள் இதற்காக நாடளாவிய ரீதியில் தெரிவு செய்யப்பட்டுள்ளன. இவர்களில் காணிகளுக்கான சட்டபூர்வ ஆவணங்கள் இல்லாதிருந்தவர்களும் அடங்குவதாக தெரிவிக்கப்படுகிறது.

இதனைத் தவிர பல்வேறு அபிவிருத்திப் பணிகளுக்காக வழங்கப்பட்டிருந்த அரச காணிகளில் நீண்டகாலம் வாழ்ந்துவந்தவர்களுக்கும் காணி உறுதிப்பத்திரங்களை விநியோகிக்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. (அ-2)

# சாதாரணத்திலிருந்து மிக சாதாரணத்திற்கு



ஆன்மீகம் 07

எனவே, எது நிதர்சன உண்மை, எது மாயை என்பதற்கு இடையே ஒரு பாகுபாட்டினை உருவாக்குவது பற்றி அல்ல இது. உங்களுக்கு எது நடந்து கொண்டிருக்கிறதோ, உங்களுக்கு எது நடந்து கொண்டிருந்தாலும் அது ஒரு பொருட்டில்லை. உங்கள் வாகனத்தை நேராகச் செலுத்துங்கள். போகும்போது மாயை என்பது நடந்தாலும்சரி, வேகத்தைத் தணித்து வையுங்கள். நிதர்சன உண்மை நடந்தாலும் சரி, வேகத்தைத் தணித்தே வையுங்கள். அதுதான் உங்கள் வேலை. மற்றவற்றை நான் பார்த்துக் கொள்கிறேன். மாயை, நிதர்சன உண்மை, கடவுள், சாத்தான் எது நடந்தாலும் சரி, உங்களைத் தணித்து வையுங்கள். அதைப் பொருட்படுத்த வேண்டாம். "ஓ! இதுதான் நிதர்சன உண்மை" என்று எண்ணிக் கொண்டிருக்க வேண்டாம். "இதுதான் மாயை" என்று சிந்தித்துக் கொண்டிருக்க வேண்டாம். உங்கள் வழியில் நீங்கள் நேராகச் சென்று கொண்டிருங்கள். ஒவ்வொன்றையும "இதுதான் அது, அதுதான் இது" என்று நீங்கள் பாகுபடுத்திப்பார்க்க முயற்சித்தால், இது ஒரு முடிவில்லாத சர்க்கசாகி விடும். அது உங்களை எங்கேயும் சென்று சேர்க்காது. மற்றவர்களுக்கு முன்னால் சாமர்த்தியசாலியாக வேண்டுமானால் காட்டும். ஆனால், பிரபஞ்சம் உங்களை ஒரு முட்டாளாகத்தான் பார்க்கும் ஏனென்றால். அதன் கதவுகள் உங்களுக்குத் திறக்காது.

மக்களிடம் நீங்கள் எவ்வளவு சாமர்த்தியமாக இருக்கிறீர்கள் என்பது ஒரு பொருட்டே அல்ல. சமூகத்தில் நீங்கள் எவ்வளவ் சாமர்த்தியசாலி என்பதும் ஒரு பொருட்டான விடயமே அல்ல. பிரபஞ்சம் உங்களுக்கான கதவைத் திறக்காது என்பது மிகவும் முக்கியமான விடயம். அதாவது எது நடந்தாலும் நீங்கள் முட்டாள் என்பதைப் பாருங்கள். ஒன்றுமில்லாத் தன்மையை நீங்கள் செய்து காட்ட முடியாது. இல்லையா? ஏதோ ஒன்றைச் செய்து காட்ட முடியும். ஆனால், ஒன்றுமில்லாத் தன்மையை உங்களால் செய்து காட்ட முடியாது. யாராவது ஒருவராக நீங்கள் இருக்க முடியும். ஆனால், யாருமில்லாதவராக நீங்கள் இருக்க முடியாது. "நான் யாரும் இல்லை" என்று நீங்கள் சொல்வதுகூட, நான் யாரோ ஒருவன் என்பதன் சிறு வெளிப்பாடுதான்.

இதை உங்களால் செய்து பார்க்க முடியாது. நீங்கள் மிகவும் சோர்வடைந்து இருக்கும்போது வெறுமனே அமர்ந்திருங்கள், அப்போது அது நடக்கும். உங்கள் முயற்சியே சோர்வடைவதை நோக்கி இருக்க வேண்டும். அல்லது உங்கள் முயற்சியை தாண்டிச் செல்வதற்கான புத்திசாலித்தனம் உங்களுக்குத் தேவை.

தற்சமயம் எது நடந்து கொண்டிருந்தாலும் அதிலிருந்து வெளி வருவதற்குத்தான் எப்போதுமே நீங்கள் முயற்சித்துக் கொண்டிருக்கிறீர்கள். மலையில் பயணம் செய்து கொண்டிருக்கிறீர்கள். உங்கள் முயற்சியெல்லாம் மலையை விட்டு சீக்கிரம் வெளியே வருவதுதான். ஒரு சமதளத்தில் ஒரு வாகனத்தை ஓட்டிச் சென்று கொண்டிருக்கிறீர்கள். இப்போது உங்கள் முயற்சியெல்லாம் உடனடியாக சமதளத்தை விட்டு வேறு எங்கேனும் செல்வதைப் பற்றித்தான். எப்போதுமே உங்கள் கவனம் தற்போதிலிருந்து வேறு ஒன்றிற்கு மாறுவதிலேயே இருக்கிறது.. அது எவ்வளவு அழகானதாக இருந்தாலும் அதைவிட்டு வெகு சீக்கிரத்தில் வெளியேவர விரும்புகிறீர்கள். உங்களுடைய நோக்கம் எப்பொழுதுமே அப்படித்தான் இருக்கிறது.

கடவுளின் மடியில் இருந்தாலும் கூட நீங்கள் அதிலிருந்து எவ்வளவு சீக்கிரம் வெளியேற முடியுமோ அதை விட்டுவர முயற்சிக்கிறீர்கள். தொடர்ந்து அதைத்தான் செய்து கொண்டிருக்கிறீர்கள். தொடர்ந்து இப்படியே நீங்கள் செய்து கொண்டிருந்தால், உச்சபட்ச முட்டாள் தனத்தை சென்றடைவீர்கள். அங்கே நீங்கள் சாமர்த்தியசாலியாக இருக்க முயற்சிக்கத் தேவையில்லை. அந்த முயற்சியை ஏற்கனவே விட்டு விட்டீர்கள். பிறகு உங்கள் வாழ்க்கையே விடுதலையாக இருக்கிறது. இந்த வாழ்க்கை முற்றிலும் ஒரு விடுதலையாக இருக்கும் பொழுது பிரபஞ்சமே உங்களுக்காக திறந்து கொள்கிறது. அங்கே மூடிக்கொ[illegible] கதவுகளே கிடையாது. எல்லாமே உங்களுக்காகத் திறந்திருக்கிறது. படைப்பும், படைத்தவரும் உங்களுக்குக் கிடைப்பவராகிறார்கள். ஏனென்றால், இது முழுமையான விடுதலை நிலைக்கு வந்திருக்கிறது.

(தொடரும்)

சத்குரு ஜக்கி வாசு தேவ்

# எம்.ஏ.நுஃமானின் காவியங்கள்

## ஓர் அறிமுகம்

01

"நம் காவிய மரபுகள் எப்படியிருந்தாலும் அவைகளை அப்படியே தூக்கி வைத்துவிட்டு நவீன வாழ்வின் கதையை யதார்த்தமாகவோ, குறியீடாகவோ செய்யுளில் வடித்துக் காட்டிய மூவர்களுள் நீயும் ஒருவன். மூத்தவர் மகாகவி அடுத்தது நீயும் முருகையனும்."

என நீலாவணன் காவியங்கள் (நன்னூல் பதிப்பகம், கொழும்பு-2010) என்ற நூலுக்கு சண்முகம் சிவலிங்கம் எழுதிய அணிந்துரையில் குறிப்பிட்டுள்ளார். இக்கூற்று இன்னும் அகலிக்கப்பட வேண்டியது. ஈழத்தில் நவீன காவியங்களை எழுதியோர் வரிசையில் கவிஞர் எம்.ஏ.நுஃமானும் மிக முக்கியமானவராகின்றார். அவரது காவியங்கள் பற்றிய அறிமுகத்தை வழங்குவதாகவே இக்கட்டுரை அமைகின்றது.

தமிழ் இலக்கிய வரலாற்றில் காவியங்களுக்கு தனித்துவமானதோர் இடமுண்டு. சோழர்காலம் 'காவிய காலம்' என்றே பெயர் பெற்றிருக்கின்றது. நிலப்பிரபுத்துவ சமூகத்தின் ஓர் இலக்கிய வடிவமாகத் திகழ்ந்த காவியங்கள் இன்றைய காலகட்டத்தில் தோன்றுவதற்கு வாய்ப்பில்லை. எனவேதான் இன்றைய காலகட்டத்தில் தோன்றும் காவியங்கள் போன்றதோர் இலக்கியம், நவீன காவியங்கள் என பேசப்படுகின்றது. ஆனால், இதற்குள்ளும் பல கருத்து வேறுபாடுகள் உண்டு. நவீன காவிய வடிவத்தின் முன்னுதாரணமாக பாரதியாரின் பாஞ்சாலி சபதத்தையும் குயிற் பாட்டையும் குறிப்பிடுவர்.

"எளிய பதங்கள் எளிய நடை எளிதில் அறிந்து கொள்ளக்கூடிய சந்தம், பொதுசனங்கள் விரும்பும் மெட்டு, இவற்றினை உடைய காவியம் ஒன்று தற்காலத்திலே செய்து தருவோன் நமது தாய்மொழிக்குப் புதிய உயிர் தருவோன் ஆகிறான்."

என பாரதி குறிப்பிடுகின்றான். பாரதி பாடிய காவியங்களைப் பின்பற்றி பல காவியங்கள் தமிழகத்தில் பல்வேறு கவிஞர்களால் பாடப்பட்டுள்ளன.

இவ்வகையான காவியங்களை நெடுங்கவிதை, கதைப்பாடல், குறுங்காவியம் என்றும் விமர்சகர்கள் குறிப்பிடுவர். இது பற்றி நவீன தமிழ் காவியங்கள் என்ற கட்டுரையில் எம்.ஏ நுஃமான் (திறனாய்வுக் கட்டுரைகள் அன்னம், சிவகங்கை 1985) விரிவாகக் குறிப்பிடுகின்றார். அக்கட்டுரையில் எம்.ஏ. நுஃமான் பின்வரும் முடிவுக்கு வருகின்றார்.

".... நெடுங்கவிதை, கதைப்பாடல், குறுங்காவியம், கவிதைக்கதை போன்ற சொற்றொடர்கள் இத்தகைய இலக்கிய வடிவத்தைக் குறிக்க போதுமானவையல்ல. என்பது வெளிப்படை. நவீன காவியம் என்ற பெயரால் அழைப்பதே பொருத்தமானதாகத் தோன்றுகிறது. செய்யுள் நடையில் அமைந்திருப்பதும் கதை கூறும் இயல்பு கொண்டிருப்பதும் பழைய காவியங்களுக்கும் இவற்றுக்கும் இடையே உள்ள பொதுப்பண்புகள் ஆகும். ஆகவேதான் இவை காவியம் எனப்படுகின்றன. ஆயினும் உள்ளடக்கத்திலும் உத்தி முறையிலும் உருவப் பரப்பிலும் பழையவற்றிலிருந்து இவை பெரிதும் வேறுபடுகின்றன. ஆகவேதான் இவை நவீன காவியம் எனப்படுகின்றன."

இந்தப் பின்னணியோடு ஈழத்தின் காவிய மரபு பற்றி சிந்திப்போம். கண்ணகி வழக்குரையே ஈழத்தில் தோன்றிய குறிப்பிடத்தக்கதோர் காவியமாகும். அதுபோன்று காவியம் என்ற பெயரில் மழைக்காவியம், பிள்ளைக்காவியம், கல்லோயாக் காவியம் போன்றனவும் வாய்மொழி இலக்கிய மரபில் வழங்குகின்றன. ஆனால், 1950 களில் இருந்து ஈழத்திலும் ஒரு நவீன காவிய மரபு உருவாகின்றது. பேராசிரியர் கணபதிப்பிள்ளை முதல் பல்வேறு கவிஞர்கள் இத்துறையில் ஈடுபாடு காட்டினர்.

மகாகவி, முருகையன், நீலாவணன் நுஃமான் முதலானோர், இந் நவீன காவிய மரபுக்கு புதிய பரிமாணம் கொடுத்தவர்கள். இக்கட்டுரையின் அறிமுகத்தில் குறிப்பிடப்பட்டுள்ள சண்முகம் சிவலிங்கத்தின் கூற்று, நுஃமானையும் சேர்த்ததாக அமைய வேண்டும். ஈழத்தின் நவீன காவிய மரபுக்கு அந்தளவிற்கான முக்கியத்துவத்தை நுஃமான் வழங்கியிருக்கிறார். அதற்கு அவரது தாத்தாமாரும் பேரர்களும் என்ற தொகுதி ஆதாரமாகும். மகாகவியின் 'கல்லழகி', 'சடங்கு', 'கண்மணியாள் காதை', 'ஒரு சாதாரண மனிதரது சரித்திரம்','கந்தப்ப சபதம்', 'தகனம் ஆகியவற்றுக்கும் முருகையனின் 'நெடும்பகல்', 'ஆதிபகவன்' ஆகியவற்றுக்கும் நீலாவணனின் 'பட்டமரம்', 'வுடமீன்', 'வேளாண்மை' முதலானவற்றுக்குமுள்ள முக்கியத்துவம் நுஃமானின் 'உலகப்பரப்பின் ஒவ்வொரு கணமும்','அதிமானிடன்', 'கோயிலின் வெளியே', 'நிலம் என்னும் நல்லாள்', "தாத்தாமாரும் பேரர்களும்" முதலான படைப்புக்களுக்கும் உண்டு. மகாகவி, முருகையன், நீலாவணன் முதலானோரின் மேற்கூறிய படைப்புக்கள் நவீன காவியங்கள் எனின் நுஃமானின் மேற்கூறிய படைப்புக்களும் நவீன காவியங்களே. 1960 இன் பின்னர் ஈழத்தில் எழுந்த காவியங்கள் நவீன வாழ்க்கை பற்றி பேசுவனவாகவே அமைந்திருந்தன. அவை உருவத்திலும் உள்ளடக்கத்திலும் நவீன தன்மையையே பெற்றிருந்தன. நாவல், சிறுகதை, முதலான இலக்கியங்களின் உத்திமுறையும் கலைநுட்பங்களும் இவற்றிற்குப் பெரிதும் பயன்பட்டன. இத்தகைய பண்புகள் கொண்டனவாகவே நுஃமானின் காவியங்களும் அமைந்திருந்தன.

"கொழும்பில் நடைபெற்ற சர்வதேச தமிழ் எழுத்தாளர் மாநாட்டில் சமர்ப்பிக்கப்பட்ட ஆய்வுக் கட்டுரை"

றமீஸ் அப்துல்லாஹ்
மொழித்துறை, தென்கிழக்குப் பல்கலைக்கழகம்

(தொடரும்)

# வாழையில் பீடைகளும் முகாமைத்துவமும்



பேராசிரியர் கு.மிகுந்தன்
விவசாய உயிரியல்துறை
விவசாய பீடம்
யாழ்.பல்கலைக்கழகம்

16-X

**வாழையில் பற்றீரியா வாடல் நோய்**


வாழையில் வாடல் நோயானது பொதுவாக பூஞ்சணங்களால் ஏற்படுத்தப்படுகின்றது. நுண்ணங்கிகளின் பெருக்கத்தினால் வாழையில் வேரிலிருந்து மேல் நோக்கி நீரைக் கடத்தும் கலன்கட்டுக்கள் அடைக்கப்படுவதனால் வாடல் ஏற்படுகின்றது. இங்கே பூஞ்சணங்களைப் போன்று பக்றீரியாக்களும் வாழையில் வாடல் நோய் ஏற்படக் காரணமாயுள்ளன. ஆதலால் பூஞ்சணங்களாலும் பக்றீரியாவினாலும் ஏற்படும் வாடல் நோய்களை வேறு பிரித்தறியும் வழிவகைகளை நாமும் தெரிந்து கொள்வதன் மூலம் இந்நோய்களை முகாமைப்படுத்த முடியும்.

**வாடலை ஏற்படுத்தும் பக்றீரியா**

வாழையில் தாவரத்தின் நில மேற்பகுதிகளூடாகவே பக்றீரியா தொற்றுதலை ஏற்படுத்தும். அதிலும் குறிப்பாக வாழையில் ஏற்படும் காயங்களுக்கூடாகவே பக்றீரியா வாழையினுள் உட்புகும் வாய்ப்பினை பெற்று விடுகின்றது. இது பொதுவாகவே தாவரங்களில் ஏற்படும் பக்றீரியா நோய்களின் தொற்றுதலுக்கு பொதுவான காரணமாக இருக்கின்ற போதிலும் தாவர பாகங்களிலேற்படும் சேதத்தினூடாக பக்றீரியா விரைந்து உட்செல்வது வாடலின் தன்மையை தீவிரப்படுத்தி விட வாய்ப்பதிகம் என்றே கருதலாம்.

பொதுவான வாடலின் அறிகுறிகள் பியூசேரியம் பூஞ்சணத்தினால் ஏற்படுத்தப்படும் வாடல் நோய் போன்று இருப்பினும் இரண்டையும் வேறு பிரித்தறிய முடியும். பக்றீரியா வாடலின் ஆரம்ப நிலையில் வாழையின் நடுப்பகுதி இலையில் இலைக் காம்புக்குரிய பகுதி மஞ்சள் நிறமாக மாற்றமடையும். இதனைக் தொடர்ந்து இலையின் நடுப்பகுதி குலைந்து விழும் நிலையை அடையும். இவ்வறிகுறியை அவதானித்த ஒரு கிழமைக்குள் வாழையின் ஏனைய இலைகளும் வாடலுக்கான அறிகுறிகளை காண்பிக்கும். அதனது தொடர்ச்சியாக வாழையின் குருத்தினை தவிர்ந்த

# இனியொரு பசுமைப் புரட்சிக்கு...




ஏனைய இலைகள் வாடலுக்கான அறிகுறிகளைக் காண்பித்து நோய்கள் முற்றிய நிலையில் நடு குருத்திலையும் சோர்வுற்று வாடி நிலை குலைந்துவிடும்.

இந்நிலையில் வாழையின் இலைப் பகுதியனைத்தும் வாடலுக்குள்ளாகி முழுமையாக வாழை இறந்துவிடும். வாழைத் தோட்டத்தில் இது பாரிய இழப்பை ஏற்படுத்திவிடும். ஒரு நிலையில் வாழையில் இலைகளனைத்தும் வாடி தொங்கி கொண்டிருப்பதனை அவதானிக்கலாம்.

நோயுற்ற வாழையின் தண்டுப் பகுதியை குறுக்காக வெட்டி அவதானித்தால் அதிலுள்ள கலன்கட்டுகள் நிறம் மாற்றமடைந்திருப்பதனை காணலாம். வழமைக்கு மாறாக தண்டினது நிறம் மெல்லிய மஞ்சளிலிருந்து கருமையானதாகவும் அல்லது கடும் மண்ணிறமாகவும் காணப்படும். இப்பகுதியில் சிவப்பு நிற புள்ளிகளும் இருக்கும்.

நோயுற்ற வாழையின் இழையங்கள் மெல்லிய வெள்ளை நிறமானதாகவும் இன்னும் அதிலிருந்து ஊதா மற்றும் கபில நிறத்திலான தாவரச்சாறு வழிவதையும் காணலாம்.

இத்தாவர சாற்றினூடாக பக்றீரியா வித்திகள் வெளியேறி நீருடன் எடுத்துச் செல்லப்பட்டு இன்னொரு வாழையில் தொற்றினை ஏற்படுத்தும். இங்கே அவதானிக்க வேண்டியது யாதெனில் இன்னொரு வாழையில் காயங்கள் ஏற்பட்டிருந்தால் மட்டுமே பக்றீரியாவுக்கு இலகுவாக உள்ளே சென்று நோயை உருவாக்க வாய்ப்பிருக்கும்.

மாறாக காயங்கள் என எதுவும் இல்லையெனில் பக்றீரியா தொற்று ஏற்படுவதற்கான சாத்தியக்கூறு அரிதாகவே இருக்கும்.

ஆனால் காயங்கள் வாழையில் ஏற்படுத்துவதற்கு பல அனுகூலமான வழிகள் உண்டு. எப்படியென்றா யோசிக்கின்றீர்கள்.


வாருங்கள் அவை எவை என பார்ப்போம். வாழையில் காயங்கள் ஏற்படுத்துவதற்கு அதில் பீடைகளாக இருக்கின்ற வாழைக்கிழங்கு மற்றும் தண்டு நீள்மூஞ்சி வண்டுகள் இவற்றுடன் விலாங்குப்புழு என்பன வற்றினால் ஏற்படுத்தப்படுகின்ற சேதங்களுக்கூடாக பக்றீரியா உட்செல்ல வழி கிடைக்கின்றது.

இவற்றுடன் வாழைத் தோட்டத்தினுள் செய்யப்படும் பயிர்ச்செய்கை நடைமுறைகளும் இப்பக்றீரியாவுக்கு சாதகமாகி விடுகின்றது. குறிப்பிட்டு நோக்கினால் வாழைக்குட்டிகளை பிரித்தெடுக்கும் போது நிலத்தடியில் இருக்கின்ற கிழங்கினை வெட்டுவதும் வாழையை சுற்றி கிடங்கெடுத்து கொத்தி சாறும் போது கிழங்கு மற்றும் வேர் பகுதியில் மண் வெட்டியினால் ஏற்படுத்தப்படுகின்ற காயங்களும் இவற்றுடன் குலையை வெட்டிய பின்பு அந்த வாழை வெட்டிச் சரிக்கப்படும் போதும் ஏற்படுகின்ற காயங்கள் இலகுவில் பக்றீரியா உட்செல்ல வழிசெய்து விடும். எமது தவிர்க்க இயலாத செய்கை மூலம் பக்றீரியா உட்செல்வதற்கு உந்துதலாக இருப்பதினை தவிர்ப்பது கடினமாயினும் நோயுற்ற வாழையிலிருந்து பக்றீரியா பரவுவதை அவற்றை இனங்கண்டு அழிப்பதன் மூலம் ஓரளவுக்கு கட்டுப்படுத்தலாம்.

பக்றீரியாவை கட்டுப்படுத்துவதற்கான சிறந்த இரசாயனங்கள் என்று எதுவுமில்லை. ஸ்ரெப்ரோமைசின் சல்பேற்று பக்றீரியா நாசினியாக இருப்பதனால் இப்பக்றீரியாவை இரசாயன ரீதியில் கட்டுப்படுத்துவது கடினம். இப் பக்றீரியா மற்றும் நோய் பற்றிய விபரங்களை எம் இனிய உறவுகள் தெரிந்து வைப்பது சாலச் சிறந்தது.

நோய்கண்ட பாத்தியை தனிமைப் படுத்துவதும் அதனூடாக நீரோடாது மண்ணினால் புருவம் கட்டலாம். சுத்தமான பயிர்ச்செய்கையும் நீள்மூஞ்சி வண்டுகள், விலாங்குப் புழுக்களை கட்டுப் படுத்துவது அவசியம். (தொடரும்)

## கூட்டமைப்பின் குற்றச்சாட்டை நிராகரிக்கிறார் முரளிதரன்



(கொழும்பு)

வடக்கில் இராணுவ ஆட்சி நடைபெறுவதாக தமிழ்த் தேசியக்கூட்டமைப்பு தெரிவிக்கும் குற்றச்சாட்டில் எதுவித உண்மையுமில்லை. அங்கு இராணுவ ஆட்சி நடக்குமானால் தமிழ்த்தேசியக்கூட்டமைப்பு தேர்தலில் போட்டியிடவோ, வெற்றிபெறவோ முடிந்திருக்காது என பிரதியமைச்சர் விநாயகமூர்த்தி முரளிதரன் தெரிவித்தார்.

வரவு- செலவுத்திட்ட மூன்றாம் நாள் விவாதத்தின் போது தமிழ்த் தேசியக்கூட்டமைப்பு எம்.பி.சுரேஸ் பிரேமச்சந்திரன் தெரிவித்த சில குற்றச்சாட்டுக்களுக்கு பதிலளிக்கையிலேயே அவர் மேற்கண்டவாறு கூறினார். பிரதியமைச்சர் முரளிதரன் மேலும் கூறியதாவது,

சுரேஸ் பிரேமச்சந்திரன் எம்.பி சபையில் பல கருத்துக்களை கூறினார். கொக்குசான் குளத்தில் சிங்களக்குடியேற்றம் இடம்பெற்றுள்ளதாகவும் தெரிவித்தார். ஆனால் தமிழ்த்தேசியக்கூட்டமைப்பு ஆதரவு வழங்கும். ஐக்கிய தேசியக் கட்சி ஆட்சியிலே இங்கு குடியேற்றம் நடைபெற்றது.

எமது அரசாங்கம் அங்கு குடியேற்றம் மேற்கொள்வில்லை. எனினும் ஏற்கனவே குடியேறிய மக்களை இப்பொழுது வெளியேற்ற முடியாது.

வடக்கில் இராணுவ ஆட்சி நடைபெறுவதால் தமிழ்த்தேசியக்கூட்டமைப்பு குற்றஞ் சாட்டினாலும் இராணுவமே அங்கு பல சேவைகளை செய்து வருகின்றது.

சுரேஸ். எம்.பி.யின் குற்றச்சாட்டை முழுமையாக நிராகரிக்கின்றேன் என்றார் பிரதியமைச்சர் விநாயகமூர்த்தி முரளிதரன். (அ-2)

## ஜோதிடர்களின் ஆலோசனையுடன் அமைச்சரவையில் மாற்றம்

(கொழும்பு)

வாக்கிய பஞ்சாங்கப்படி எதிர்வரும் டிசெம்பர் மாதம் 20 ஆம் திகதி நிகழவுள்ள சனிமாற்றம், இலங்கை ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவிற்கு பாதிப்பை ஏற்படுத்தும் என தெரிவித்துள்ள ஜோதிடர்களின் ஆலோசனைக்கமைய அமைச்சரவையை மாற்றியமைக்கவுள்ளதாக ஆங்கில இணையமொன்று செய்தி வெளியிட்டுள்ளது.

நிகழவுள்ள சனி மாற்றத்தினால் அடுத்த ஆண்டின் தொடக்க மாதங்களில் இலங்கை ஜனாதிபதிக்கு பாதிப்பை ஏற்படுத்தும் என்று ஜோதிடர்கள் பலர் ஆலோசனை கூறியுள்ளனர். இதனால் அமைச்சரவையை மாற்றியமைக்குமாறும் அவர்கள் ஆலோசனை கூறியுள்ளனர். வரவு- செலவுத்திட்ட விவாதங்கள் முடிந்த பின்னர், டிசெம்பர் 23 ஆம் திகதி அமைச்சரவையை மாற்றியமைப்பது குறித்து ஆலோசிக்குமாறு ஜோதிடர்கள் ஜனாதிபதியிடம் தெரிவித்துள்ளனர்.

இந்த அமைச்சரவை மாற்றத்தின் போது சமல் ராஜபக்ஷ பிரதமராவும் நிமல் சிறிபால டிசில்வா சபாநாயகராகவும் நியமிக்கப்படவுள்ளனர்.

பொருளாதார அபிவிருத்தி அமைச்சர் பதவியில் இருந்து பசில் ராஜபக்ஷவை நீக்கிவிட்டு அவருக்கு அனைத்துலக உறவுகளில் தொடர்புபட்ட அமைச்சு ஒன்று வழங்கப்படவுள்ளது.

மகிந்தானந்த அளுத்கமகே இளைஞர் விவகார அமைச்சராகவும் அவரது பிரதி அமைச்சராக நாமல் ராஜபக்சவும் நியமிக்கப்படவுள்ளனர்.

டலஸ் அழகப்பெரும ஊடகத்துறை அமைச்சராகவும் பொருளாதார விவகாரங்களை கவனிக்கும் மூத்த அமைச்சராக கலாநிதி சரத் அமுனுகம நியமிக்கப்பட்டுள்ளதாகவும் எல்லா அமைச்சர்களினது துறைகளும் முற்றாக மாற்றியமைக்கப்படவுள்ளதாகவும் அந்த இணையத்தளம் தகவல் வெளியிட்டுள்ளது. (அ-2)

# துறைமுக கொள்கலன் முனையத்தை கட்டுவதற்கு சீனாவுடன் பிரி.போட்டி

(கொழும்பு)

கொழும்பு தெற்குத் துறைமுக கொள்கலன் முனையத்தைக் கட்டுவதற்கு இரண்டு சீன நிறுவனங்களுடன் பிரித்தானிய நிறுவனம் ஒன்று போட்டியில் இறங்கியுள்ளது.

500 மில்லியன் டொலர் செலவில் இந்த கொள்கலன் முனையம் கட்டப்படவுள்ளது.

இந்தக் கட்டுமானப் பணிகளை மேற்கொள்வதற்கான ஒப்பந்தத்தை பெறுவதற்கு சீன துறைமுக பொறியியல் கூட்டுத்தாபனம், சீன அரசாங்க பொறியியல் கூட்டுத்தாபனம் மற்றும் பிரித்தானியாவின் அனைத்துலக பொஸ்காலிஸ் குழுமம் ஆகியன போட்டியிடுகின்றன.

அடுத்த மாதம் இந்தக் கட்டுமான ஒப்பந்தம் யாருக்கு வழங்கப்படும் என்று தீர்மானிக்கப்படும்.

அதையடுத்து அடுத்த ஆண்டு ஜனவரி மாதம் கட்டுமானப் பணிகள் தொடங்கும் என்றும் இலங்கை அதிகாரிகள் தகவல் வெளியிட்டுள்ளனர். (அ-2)

# ஹெட்ஜிங் உடன்படிக்கைக்காக பல மில்லியன் ரூபா செலுத்தப்பட்டது

## அமைச்சர் சுசில் தெரிவிப்பு



(கொழும்பு)

இலங்கை பெற்றோலிய கூட்டுத்தாபனம் ஹெட்ஜிங் உடன்படிக்கை வழக்கு தொடர்பில் 14 மில்லியன் ரூபாய்களை செலவிட்டுள்ளது. இது வெளிநாட்டுக்கு செல்லும் பயணப் பணமாக மாத்திரம் செலவிடப்பட்ட தொகையாகும் என்று இலங்கையின் எரிபொருள்துறை அமைச்சர் சுசில் பிரேமஜயந்த தெரிவித்துள்ளார்.

இலங்கையின் எரிபொருட்களின் விலைகளை கட்டுப்படுத்தும் முகமாக இலங்கை பெற்றோலியக் கூட்டுத்தாபனம் வெளிநாட்டு வங்கிகளுடன் ஹெட்ஜிங் உடன்படிக்கைகளை செய்து கொண்டது.

எனினும் பெற்றோலியக் கூட்டுத்தாபனத்தின் பிழையான அணுகுமுறை காரணமாக நட்டம் ஏற்படவே குறித்த வெளிநாட்டு வங்கிகளுக்கு பாரிய நிதிகளை பெற்றோலிய கூட்டுத்தாபனம் செலுத்த வேண்டியேற்பட்டது.

எனினும் நட்டத்தை காரணம் காட்டி பணம் செலுத்தலில் தாமதத்தை இலங்கை பெற்றோலிய கூட்டுத்தாபனம் கடைப்பிடித்ததன் காரணமாக குறித்த வங்கிகள் வழக்குகளை பதிவு செய்தன.

இந்நிலையில் குறித்த வழக்குகளுக்குச் சென்று வருவதற்காகவே 14 மில்லியன் ரூபாய்கள் செலவிடப்பட்டுள்ளதாக அமைச்சர் பிரேமஜயந்த குறிப்பிட்டுள்ளார்.

இதேவேளை, இந்த உடன்படிக்கை தொடர்பில் சிங்கப்பூரின் சிட்டி வங்கிக்கு 6,081,722.50 ரூபாவும் ஐக்கிய இராச்சியத்தின் ஸ்டேன்ட்டர்ட் வங்கிக்கு 7, 810, 671 ரூபாவும் செலவிடப்பட்டுள்ளதாக அமைச்சர் பிரேமஜயந்த தெரிவித்துள்ளார். (அ-2)

## பொதுக்கூட்டம்

(யாழ்ப்பாணம்)

உரும்பிராய் கிழக்கு கிராம அபிவிருத்திச் சங்கத்தின் வருடாந்தப் பொதுக்கூட்டமும் புதுவருட நிர்வாகிகள் தெரிவும் இன்று சனிக்கிழமை மாலை 4 மணிக்கு உரும்பிராய் கிழக்கு செல்லப்பா சனசமூக நிலைய மண்டபத்தில் சங்கத்தலைவர் த.பேரின்பநாயகம் தலைமையில் நடைபெறவுள்ளது.

மேற்படி கூட்டத்திற்கு கோப்பாய் பிரதேச செயலக கிராம அபிவிருத்தி உத்தியோகத்தரும் உரும்பிராய் கிழக்கு கிராம அலுவலரும் கலந்து கொள்ளவுள்ளதாகச் சங்கத் தலைவர் அறிவித்துள்ளார். (அ-2)



சாவகச்சேரி ஸ்ரீ பழனி சிக்கன கூட்டுறவு சங்க 10 அங்கத்தவர்களுக்கு சாவகச்சேரி மக்கள் வங்கி கிளையினரால் சுயதொழில் முயற்சி கடன் வழங்கும் நிகழ்வு டச்சு வீதியில் அமைந்துள்ள அகிலாண்டம் சனசமூக நிலையத்தில் அண்மையில் நடைபெற்றது. இதன்போது சாவகச்சேரி மக்கள் வங்கி முகாமையாளர் க.சண்முகலிங்கம் உரையாற்றுவதையும் அருகில் தலைவர் ம. விவேகானந்தன் அமர்ந்திருப்பதனையும் படத்தில் காணலாம். *(படம்:- சாவகச்சேரி செய்தியாளர்)*

# 2011.11 26 இன்றைய நாளின் முன்னைய பதிவுகள்

★ 1778-ஹவாயன் தீவுகளில் அமைந்துள்ள மாவுய் தீவில் இறங்கிய முதல் ஐரோப்பியன் கப்டன் ஜேம்ஸ் குக்.

★ 1842-நோட்ரெ டேம் பல்கலைக்கழகம் ஆரம்பிக்கப்பட்டது.

★ 1922-எகிப்திய மன்னன் துட்டன்காமுன் என்பவனின் கல்லறைக்குள் ஹவார்ட் கார்ட்டர் மற்றும் கார்னாவன் பிரபு ஆகியோர் சென்றனர். 3 ஆயிரம் ஆண்டுகளுக்குப் பின்னர் அதற்குள் சென்ற முதல் மனிதர்கள் இவர்களே.

★ 1941-பிரான்சிடமிருந்து லெபனான் ஒருதலைப்பட்சமாக விடுதலையைப் பிரகடனப் படுத்தியது.

★ 1941-இரண்டாம் உலகப் போர்: ஆறு ஜப்பானிய விமானங்கள், தொலைத்தொடர்புகள் அற்ற நிலையில் ஜப்பானின் இத்தோகபு குடாவிலிருந்து பேர்ள் துறைமுகத்தை தாக்கியழிக்கப் புறப்பட்டன.

★ 1942-நோர்வேயைச் சேர்ந்த 572 யூதர்கள் ஜேர்மனியர்களினால் போலந்தின் ஒஸ்விட்ச் நகரில் உள்ள யூத முகாமுக்கு நாடு கடத்தப்பட்டனர். இவர்களில் 25 பேரே தப்பினர்.

★ 1949-இந்தியாவின் அரசியலமைப் புச்சட்டம் நடைமுறைக்கு வந்தது.

★ 1950-மக்கள் சீனக் குடியரசின் படைகள் வட கொரியாவினுள் நுழைந்து தென்கொரியா மற்றும் அமெரிக்கப் படைகள் மீது பெரும் தாக்குதலைத் தொடுத்தன.

★ 1957-சாதியைப் பாதுகாக்கும் இந்திய அரசியல் சட்டப் பிரிவுகளைத் தீயிடும் போராட்டத்தை தந்தை பெரியார் ஆரம்பித்து வைத்தார்.

★ 1965-சகாரா பாலைவனத்தில் பிரான்ஸ் ஆஸ்டெரிக்ஸ்-1 என்ற தனது முதலாவது செய்மதியை விண்ணுக்கு அனுப்பியது.

★ 1983-லண்டன் ஹீத்ரோ விமான நிலைய பொதிகள் பாதுகாப்பு அறையில் இருந்து £26 மில்லியன் பெறுமதி யான 6ஆயிரத்து 800 தங்கப் பாளங்கள் களவாடப்பட்டன.

★ 2001-நேபாளத்தில் மன்னர் கயனேந்திரா அவசரகாலச் சட்டத்தை பிறப்பித்தார்.

★ 2002-இந்தியாவின் நாகாலாந்து மாநிலத்தில் தனிநாடு கோரும் அமைப்புக்களின் மீதான தடை நீக்கப்பட்டது.

### பிறப்புக்கள்

★ 1936-லலித் அத்துலத்முதலி, இலங்கைப் பாதுகாப்பு அமைச்சர் (இ.1993)

★ 1939-அப்துல்லா அகமது படாவி, மலேசியப் பிரதமர்

★ 1948-எலிசபெத் பிளாக்பர்ன், நோபல் பரிசு பெற்றவர்

★ 1948-வி.கே.பஞ்சமூர்த்தி, ஈழத்தின் நாதசுவரக் கலைஞர்

★ 1939-டினா டர்னர், அமெரிக்க ராக் அன்ரோல் இசைக் கலைஞர்

### இறப்பு

★ 2006-ஜி.வரலட்சுமி, தமிழ்த் திரைப்பட நடிகை



**1930- இலங்கையின் தமிழ்த் தலைவரான சேர் பொன்னம்பலம் இராமநாதனின் நினைவு தினம் (பி.1851)**

# இலங்கையை காப்பாற்றும் இந்தியாவின் இராஜதந்திரம்

இலங்கைத் தமிழர் தொடர்பான இந்தியாவின் அணுகுமுறை மீண்டும் வேதாளம் முருங்கை மரத்தில் ஏறிய கதையாகியுள்ளது. சில மாதங்களாக மறைமுகமாக இலங்கையைப் பாதுகாக்க இந்திய அரசு தற்போது நேரடியாகவே பாதுகாக்கத் தொடங்கியுள்ளது.

அவுஸ்திரேலிய பொதுநலவாய மாநாட்டில் இலங்கையைப் பாதுகாத்த விதமும் இந்திய இராணுவத் தளபதிகளின் இலங்கை வருகையும் அதனை வெட்ட வெளிச்சமாக்கியுள்ளது. இந்திய வெளியுறவுச் செயலாளர் மத்தாய் இந்தப் பாதுகாப்பு விடயத்தில் மிகுந்த தீவிரமுடையவராக இருக்கின்றார்.

இந்திய வெளிநாட்டுக் கொள்கையின் மூலோபாயம் இலங்கை அரசினைப் பாதுகாப்பதுதான். கால அரசியல் சூழ்நிலைகளை ஒட்டி இப்பாதுகாப்பு நேரடியாகவோ, மறைமுகமாகவோ மேற்கொள்ளப்படலாம். போரின் போது மறைமுகமாக பாதுகாத்த இந்திய அரசு,போரின் பின்னர் நேரடியாகப் பாதுகாத்தது. ஐ.நா. மனித உரிமை சபையில் மேற்கு நாடுகள் கொண்டு வந்த போர்க் குற்றப் பிரேரணை தோல்வி யடைவதற்கு இந்தியாவே காரணம். ஆனாலும் பின்னர் ஐ.நா. நிபுணர்குழு அறிக்கை, சனல்-4 வீடியோத்தொகுப்பு, ஜெயலலிதாவின் எழுச்சி, தமிழ்நாடு தமிழ் உணர்வாளர்களின் தீவிர காங்கிரஸ் எதிர்ப்பு பிரசாரம் என்பவற்றினால் நேரடியாகப் பாதுகாக்கும் முயற்சியை சற்று அடக்கி வாசித்தது.

இறுதியாக நடைபெற்ற ஐ.நா. மனித உரிமை சபைக் கூட்டத்தில் மௌனம் காத்தமை, ஐ.நா. பொதுக்கூட்ட சந்திப்பின் போது இனப்பிரச்சினையை நீங்களே பார்த்துக் கொள்ளுங்கள் என மன்மோகன் சிங் ஜனாதிபதி மகிந்தரிடம் கூறியமை என்பவையெல்லாம் இந்த அடக்கி வாசித்ததன் விளைவுதான்.

எனினும் சீனப்படைத் தளபதிகளின் இலங்கை வருகையும் கூட்டுப்பயிற்சி அழைப்பும் இந்த அடக்கி வாசித்தலை முடிவுக்குக் கெண்டு வந்தது. இனி சில காலங்களுக்கு நேரடிப் பாதுகாப்புத் தொடரலாம். தமிழ் நாட்டின் எழுச்சிகளே இதனைத் தீர்மானிக்கக் கூடியதாக இருக்கும். அவுஸ் திரேலிய பொதுநலவாய மாநாட்டில் இலங்கை மீது விழ இருந்த எறிகணைகளை கவசம் போல நின்று இந்தியா பாதுகாத்தது. இந்தியக் கவசம் இல்லையென்றால், அடுத்த மாநாட்டினை இலங்கையில் நடத்தும் வாய்ப்பு ஜனாதிபதிக்கு ஒருபோதும் கிட்டியிருக்காது. இலங்கைக்கு நெருக்கடியைக் கொடுக்கின்ற மனித உரிமை ஆணையாளர் பதவியும் உருவாக்கப்பட்டிருக்கும்.

மனித உரிமை விவகாரங்களை நாடுகளின் இறைமைக்கு அப்பாற்பட்ட சர்வதேச பொது விவகாரமாக மாற்ற இந்தியாவும் விரும்பவில்லை. தனது நாட்டில் தேசிய இனங்களின் போராட்டங் களையும், அடிநிலை சமூகங்களின் வர்க்க ரீதியான போராட்டங்களையும் கொடூரமாக ஒடுக்கும் அரசு இதனை எதிர்த்ததில் ஆச்சரியங்கள் ஒன்றும் இல்லைத்தான்.

போர்க்குற்ற விவகாரத்தில் ஐ. நா. நம்பகத்தன்மை கேள்விக்குள்ளானது போல, பொதுநலவாய நாடுகளின் நம்பகத்தன்மையும் கேள்விக்குள்ளாகியுள்ளது. மனித உரிமை அமைப்புக்கள்தான் மீண்டும் மணந்தளராத விக்ரமன் போல புதியபுதிய முயற்சிகளை மேற்கொள்கின்றன.

சனல்-4இன் இரண்டாவது வீடியோ, சித்திரவதைகளுக்கெதிரான கூட்டம் என அவற்றின் முயற்சிகள் தொடருகின்றன. வல்லரசுகளின் அரசியல் நலன்களுக்கு முன்னே மனித உரிமை அமைப்புக்கள் தொடர்ச்சியாகத் தோல்வியடைவதுதான் அவர்களைப் பொறுத்தவரை மிகப்பெரிய சோகம்.

இவற்றின் வற்புறுத்தல்களினால் மேற்குலகம் சற்று அழுத்தங்களைக் கொடுக்க முன்வந்தாலும் அவை இந்தியாவைத் தாண்டி வருகின்ற போது பலவீனமடைகின்றன. இதனால்தான் மேற்குலகின் அழுத்தங்கள் எந்தக் கால கட்டத்திலும் வன்மையான அழுத்தங்கள் என்ற நிலைக்கு மாறவில்லை. தென்னாசியாவில் இந்தியா தொடர்பான நலன்கள் அதிகளவில் மேற்குலகிற்கு இருப்பதே இதற்குக் காரணம்.

இந்தியாவின் பலவீனங்களும், மேற்குலகின் பலவீனங்களும் ஜனாதிபதிக்கு நன்றாகவே தெரியும். அவர் அதற்குத்தக்கதாக ஓடி காய்களை நகர்த்துகின்றார். பெரிய நாடுகள்போல நிலையான வெளிநாட்டுக் கொள்கையை அவர் பின்பற்றுவதில்லை. அந்த நேரத்திற்கேற்ற வெளிநாட்டுக் கொள்கையினையே பின்பற்றுகின்றார்.

சிறிலங்கா சுதந்திரக்கட்சி ஆட்சிக்காலத்தில் இலங்கை, சீனா,பாகிஸ்தானின் செல்வாக்கிற்கு உட்பட்டு விடும் என்ற அச்சமும், ஐக்கிய தேசியக்கட்சி ஆட்சிக்காலத்தில் மேற்குலகின் செல்வாக்கிற்கு உட்பட்டுவிடும் என்ற அச்சமும் இந்தியாவிற்கு உண்டு. எனினும் இரண்டு கட்டங்களிலும் வேறுவேறு தந்திரோபாயங்களைப் பின்பற்றுவதுதான் இந்தியாவின் வழக்கம். ஐக்கிய தேசியக்கட்சி ஆட்சிக் காலத்தில் அச்சுறுத்தல், தந்திரோ பாயத்தையும் சிறிலங்கா சதந்திரக்கட்சி ஆட்சிக்காலத்தில் சலுகை தந்திரோபாயத்தையும் பின்பற்றுவதே அணுகுமுறையாகவுள்ளது.



இந்தச் சலுகைகளின் அடிப்படையில் தான் சிறீமா- சாஸ்திரி ஒப்பந்தம், கச்சதீவு ஒப்பந்தம் என்பன கைச்சாத்திடப்பட்டன. இந்தப்போக்கு காங்கிரஸ் கட்சியின் காலத்திலேயே அதிகமாக நிலவுகிறது. இந்திரா காந்தி, ராஜீவ் காந்தி, சோனியா காந்தி எவரும் இதற்கு விதிவிலக்காக இருக்க வில்லை. ஏனைய கட்சியின் ஆட்சிக்காலத்தில் இலங்கையைப் பாதுகாப்பது மூலோபாயமாக இருந்தாலும் அவை அடக்கி வாசிக்க முயன்றன.

இந்த மரபுதான் தற்போதும் தொடர்கின்றது. இந்த செயற்பாட்டிற்கு ஒரு கருவி தேவை. அக்கருவியாக ஆரம்பத்தில் மலையக மக்கள் இருந்தனர். தற்போது வட-கிழக்கு மக்கள் இருக்கின்றனர். தனது நலனுக்காக இக்கருவிகளை விலையாகக் கொடுப்பதற்கும் இந்தியா ஒருபோதும் தயங்கியதில்லை.

இந்தக் கருவிகள்தான் பயன்படுத்துவதற்கு ஏற்றதாக இருக்க வேண்டும் என்பதிலும் அது கவனமாக உள்ளது. அதற்காக ஒரு பலவீனமான இனக்குழுவாக மாறுவதையே விரும்புகின்றது. மலையக மக்கள் இந்தியாவின் செயற்பாட்டினாலேயே பலவீனமான இனக்குழுவாக மாற்றப்பட்டனர். சிறீமா-சாஸ்திரி ஒப்பந்தத்தின்படி மலையக மக்களில் ஒரு பகுதியினர் நாடுகடத்தப்படா மல் இருந்திருந்தால், இன்று அவர்களது அரசியல் பலத்தினை நினைத்தே பார்த்திருக்க முடியாது.

இதைத்தான் மனோகணேசன் "மலையக மக்களை முழுமையாக இந்தியாவிற்கு கொண்டு சென்றிருக்க வேண்டும் அல்லது முழுமையாக இலங்கையில் விட்டிருக்க வேண்டும்; இருபிரிவாக விட்டதனால், இலங்கையில் மலையகமக்கள் பலவீனம டைந்துள்ளனர்." எனக் கூறியிருக்கின்றார்.

தற்போது இலங்கைத் தொழிலாளர் காங்கிரஸ் இந்தியாவின் செல்வாக்கினுள் இருப்பதனால், பலவீனமாக உள்ளது. வேறு வேறு அரசியல் இயக்கம் வளர்வதற்கு இந்தியா இடம் கொடுப்பதில்லை. எல்லா மலையகக் கட்சிகளும் மகிந்தரின் கூடாரத் தில் தொங்கிக் கொண்டிருப்பது போல இந்தியாவிலும் தொங்கிக் கொண்டிருக்கின்றன.

இதே நிலைக்குத்தான் வட-கிழக்கினையும் இந்தியா தயார்ப்படுத்துகின்றது. புலிகள் இருக்கும்வரை வட-கிழக்கு அரசியலில் இந்தியாவினால் கால் பதிக்க முடியவில்லை. தற்போது கூட்டமைப்பு இந்தியாவின் செல்வாக்கினுள் இருப்பதனால், அதற்கான முயற்சிகளை செய்கின்றது. அந்த முயற்சி இரண்டு வகைகளில் நடைபெறுகின்றது. ஒரு பக்கத்தில் தாயகம், தேசியம் , சுயநிர்ணயம் என்கிற கொள்கைகளைக் கைவிடுமாறு கூட்டமைப்பினூடகவும் ஏனைய தமிழ் கட்சிகளினூடாகவும் தூண்டுகிறது. புதுடில்லி மாநாட்டில் தேசியம், சுயநிர்ணயம் என்ற நிலைப்பாட்டிற்கு எதிராக கூட்டமைப்பு சென்றமைக்கு இந்தியாவின் செல்வாக்கே காரணம்.

தமிழ் அரசியலின் தொடர்ச்சி புலம்பெயர் நாடுகளில் இருப்பதனாலும் ஒப்பீட்டு ரீதியில் ஜனநாயகவெளி அங்கு அதிகமாக இருப்பதனாலும் தமிழ்த்தேசியத்திற்கான அரசியற் செயற்பாடு அங்குதான் அதிகமாக இருக்கின்றது. அதனை மழுங்கடித்து கையகப்படுத்துவதற்காகவே கூட்டமைப்பின் அமெரிக்கப் பயணமும் இடம்பெற்றது.

தமிழ்த் தேசியத்திற்கான அடித்தளம் வலுவாக இருப்பதனால், இந்தியக் கொள்கைகளை தமிழ் மக்களிடம் விற்க கூட்டமைப்பினரால் முடியவில்லை. அத னால் இரட்டை வேடம் போட முயற்சிக்கின்றனர். தமிழ் மக்கள் மத்தியில் தேசியம், சுயநிர்ணயம் என்பவற்றுக்காக போராடப் போவதாக வீர வசனம் பேசுகின்றனர். ஆனால், நடைமுறையில் இந்தியக் கொள்கைகளைப் பின்பற்றுகின்றனர். தமிழ் நாட்டில் ஜெயலலிதாவின் ஆரம்பகட்ட எழுச்சியுடன் தமிழ் உணர்வாளர்களின் கை சற்று ஓங்கி இருந்தது. காங்கிரஸ்கட்சி தமிழ் நாட்டில் மோசமாக வீழ்ச்சியடைந்தமைக்கும் தமிழ் உணர்வாளர்கள் தான் காரணம். அண்மையில் நடைபெற்ற உள்ளூராட்சி சபைத் தேர்தலில் 5 வீத மான வாக்குகளே காங்கிரஸ் கட்சிக்கு கிடைத்தது. காங்கிரஸ் தலைமைக்கு இது கவலையாக இருந்தாலும் இலங்கை அரசினைப் பாதுகாப்பதற்காக தமிழ் நாட்டை இழப்பதற்கும் தயாராக இருக்கின்றது. தற்போது ஜெயலலிதாவுக்கு எதிராக வழக்கு முடுக்கி விடப்பட்டதால், அவரும் அடக்கி வாசிக்கின்றார். தமிழ் நாட்டு முன்னேறிய பிரிவினர் மத்தியில் போராட்டத்தை தங்களினால் பாதுகாக்க முடியவில்லையே என்ற கவலையும் குற்ற உணர்வும் இருக்கின்றது. இது தமிழ் நாட்டில் ஒரு தமிழ்த்தேசியம் வளர்வதற்கான சூழலையும் உருவாக்கியுள்ளது. முன்னேறிய பிரிவினர் தாங்களாகவே இது தொடர்பாக பல கலந்துரையாடல்களை நடத்திவருகின்றனர்.

இந்திய அரசாங்கம் இலங்கையில் தமிழ்த் தேசிய அரசியலை பலவீனப்படுத்தி விட்டால், தமிழ் நாட்டிலும் அது பலவீனப் பட்டுவிடும் என நினைத்து காய்களை நகர்த்துகின்றது.

மறுபக்கத்தில் வட-கிழக்கில் தமிழ் மக்கள் ஒரு பலவீனமான இனக்குழுவாக மாற்றமடைவதையும் இந்தியா ஊக்குவிக்கின்றது. மலையக மக்களைப் போன்ற நிலையை உருவாக்குவதுதான் அதன் இலக்கு. இதுவிடயத்தில் அரசாங்கம் மேற்கொள்ளும் அனைத்து ஆக்கரமிப்புக்களுக்கும் இந்தியாவின் அனுசரணை இருக்கின்றது.

போருக்குப் பின்னர் சிங்களக் குடியேற்றம் இடம்பெறுகின்றபோதும் அபிவிருத்தித் திட்டங்கள் என்ற பெயரில் தமிழ் மக்களின் நிலங்கள் பறிக்கப்படுகின்றபோதும் இந்தியா எந்த ஒரு கண்டனத்தையும் தெரிவிக்க வில்லை. சம்பூர் மக்களின் வெளியேற்றம் இந்திய அனல்மின் நிலையத்தைச் சாட்டியே மேற்கொள்ளப்படுகின்றது. இந்த வெளியேற்றம் பற்றி இந்தியா வாய் திறக்கவே இல்லை.

வட-கிழக்கின் அனைத்து மாவட்டங்களிலும் 30 வீத சிங்களக் குடியேற்றத்தை மேற்கொள்ளல் என்ற இலக்கினை நோக்கி அரசாங்கம் செயற்படுகின்றது. அதற்கேற்ற வகையில் புதிய உதவி அரசாங்க செயலாளர் பிரிவுகளை உருவாக்குகின்றது. அரசாங்க அதிபர்களை இடமாற்றம் செய்கின்றது.

கிழக்கில் இன வீதாசாரத்தை மாற்ற இலங்கை அரசிற்கு 60 வருடம் சென்றது. வடக்கின் வீதாசாரத்தை 15 வருடங்களுக்குள் மாற்றிவிடுவர்கள் போலத் தெரிகின்றது எனச் சம்பந்தன் கூறுகின்றார். அவரது சொந்த மாவட்டமான திருகோணமலையின் குடியேற்றத்தை நிறுத்த இதுவரை அவர் என்னதான் செய்தார் என்பது அவருக்குத்தான் வெளிச்சம். குறைந்த பட்சம் ஒரு ஆவண வடிவிலாவது அவற்றை வெளியில் கொண்டு வந்தாரா? பேசுபொருள் ஆக்கினாரா? தனது காலத்தோடு முழுத் திருகோணமலை மாவட்டமும் தமிழ் மக்களிடமிருந்து போய்விடும் என்பதை அறிவாரா?

ஒரு கட்சி சுயாதீனமாக இருந்து கொண்டு இந்தியாவுடன் நட்புறவைப் பேணுவது என்பது வேறு. இந்தியாவின் செல்வாக்கினுள் கரைந்து விடுவது என்பது வேறு. இதுவிடயத்தில் சுயாதீனமாக இருப்பது எப்படி என்பது பற்றியும் மக்களின் வாக்குப் பலத்தினை பேரம்பேசும் அரசியலாக மாற்றுவது எப்படி என்பது பற்றியும் கூட்டமைப்பினர் மனோ கணேசனிடம் கற்றுக்கொள்வது நல்லது.

**நன்றி-பொங்குதமிழ்**

# பெண்களுக்கான உரிமைகள் உறுதிப்படுத்தப்பட வேண்டும்

## மாலைதீவில் நவநீதம்பிள்ளை



(மாலே)

மாலைதீவில் பெண்கள் உரிமைகள் உறுதிப்படுத்தப்பட வேண்டுமென ஐக்கிய நாடுகளின் மனித உரிமைப் பேரவை ஆணையாளர் நவநீதம்பிள்ளை தெரிவித்துள்ளார்.

மாலைதீவில் திருமண பந்தத்திற்கு புறம்பான முறையில் பாலியல் உறவில் ஈடுபடும் பெண்களுக்கு கடுமையான தண்டனை விதிக்கப்படுவதாகக் குற்றம் சுமத்தியுள்ளார். இவ்வாறான நடவடிக்கைகள் மனிதாபிமானதல்ல என அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

ஜனநாயக நாடொன்றில் பெண்களுக்கு எதிராக இவ்வா்றான அடக்குமுறைச் சட்டங்கள் நடைமுறைப்படுத்தக்கூடாது என அவர் வலியுறுத்தியுள்ளார்.

இந்தச் சட்டம் தொடர்பில் பொது விவாதம் நடத்தப்பட வேண்டுமென தாம் கருதுவதாகக் குறிப்பிட்டுள்ளார். மாலைதீவில் கடமையாற்றி வரும் வெளிநாட்டு தொழிலாளர்களுக்கான வசதிகள் மேம்படுத்தப்பட வேண்டுமென அவர் மேலும் கோரியுள்ளார்.

3 இலட்சம் சனத்தொகையைக் கொண்ட இஸ்லாமிய நாடான மாலைதீவில் வேறும் மத வழிபாடுகளில் ஈடுபடுவது தடைசெய்யப்பட்டுள்ளது.

திருமணத்திற்கு புறம்பாக பாலியல் உறவில் ஈடுபடும் பெண்களுக்கு 30 கசையடிகள் வழங்கப்படுகின்றன். நவநீதம்பிள்ளை மூன்று நாட்கள் விஜயமொன்றை மேற்கொண்டு மாலைதீவு சென்றிருந்தமை குறிப்பிடத்தக்கது. (அ-2)

# சில அரசியல்வாதிகள் புலிகளுக்கு நிகரான கொள்கையுடையவர்கள்

## கோத்தபாய தெரிவிப்பு



(கொழும்பு)

நாட்டில் இனவாதத்தை தூண்டுவதற்கு சிலர் முயற்சிப்பதாக பாதுகாப்புச் செயலாளர் கோத்தப்பாய ராஜபக்ஷ தெரிவித்துள்ளார்.

குறுகிய அரசியல் நோக்கங்களுக்காக சிலரினால் மேற்கொள்ளப்பட்டுவரும் இந்த முயற்சிகளுக்கு தெரிந்தோ அல்லது தெரியாமலோ சில நாடுகளும் ஒத்துழைப்பு வழங்குகின்றன.

கடுமையான போராட்டங்களுக்கு மத்தியில் நாட்டில் அமைதி நிலைநாட்டப்பட்டுள்ள போதிலும் நாட்டின் நன்மதிப்பிற்கு களங்கம் ஏற்படக்கூடிய வகையில் விடுதலைப்புலிகளுக்கு ஆதரவானவர்கள் செயற்படுகின்றனர்.

லக்ஸ்மன் கதிர்காமர் சர்வதேச கல்வி நிலையத்தில் நடைபெற்ற தேசிய நல்லிணக்க மாநாட்டின் ஆரம்ப நிகழ்வில் கலந்து கொண்ட போது பாதுகாப்புச் செயலாளர் இதனைக் குறிப்பிட்டுள்ளார்.

சில அரசியல்வாதிகள் புலிகளுக்கு நிகரான கொள்கைகளையும் கோட்பாடுகளையும் பின்பற்றி வருகின்றனர். இவர்களினால் அரசாங்கத்திற்கு எதிராக எவ்வித அடிப்படையுமின்றி குற்றச்சாட்டுக்கள் முன்வைக்கப்படுகின்றன.

இலங்கை சுயாதீனமான முறையில் நடவடிக்கைகளை மேற்கொள்ளும் எனவும் வெளிநாடுகளின் ஆலோசனைகள் அவசியமில்லை எனவும் அவர் குறிப்பிட்டுள்ளார். (அ-2)

# பொன்சேகாவிற்கு சிறைத் தண்டனை அளித்த நீதிபதிக்கு பதவி உயர்வு

முன்னாள் இராணுவத் தளபதி சரத் பொன்சேகா சிறைச்சாலைக்குள் உண்ணாவிரதப் போராட்டமொன்றுக்கு தயாராகி வருவதாக செய்திகள் கசிந்துள்ளன.

தனது நோய்க்குச் சிகிச்சை பெற்றுக் கொள்வதற்கான வாய்ப்பை சிறைச்சாலை நிர்வாகம் மறுத்துள்ளமையைக் கண்டித்தே அவர் உண்ணாவிரதம் இருக்க முடிவு செய்துள்ளார். நேற்று முன்தினம் தொடக்கம் அவர் உண்ணாவிரதத்தில் குதிக்க முடிவு செய்திருந்த போதும் சிறைச்சாலை அதிகாரிகளின் வேண்டுகோள் காரணமாக அதனைப் பிற்போட்டுள்ளதாக அறியக் கிடைத்துள்ளது.

ஆயினும் எதிர்வரும் நாட்களில் அவர் முன்னறிவிப்பின்றி உண்ணாவிரதப் போராட்டமொன்றில் குதிக்கும் சாத்தியம் இருப்பதாக அவருக்கு நெருக்கமான வட்டாரங்களிலிருந்து தெரிய வந்துள்ளது.

சரத் பொன்சேகாவிற்கு மூன்று வருட சிறைத் தண்டனை அளித்த நீதிபதிக்கு பதவி உயர்வு அளிக்கப்பட்டுள்ளது.

வெள்ளைக்கொடி விவகாரம் தொடர் பான வழக்கில் முன்னாள் இராணுவத் தளபதி சரத் பொன்சேகாவிற்கு மூன்று வருட சிறைத் தண்டனை விதிக்கப்பட்டது. அத்தீர்ப்பை வழங்கிய நீதிபதி தீபாலி விஜேசுந்தாவின் புதல்வியின் திருமணத்திலும் ஜனாதிபதி கலந்து கொண்டிருந்தார்.

அவ்வாறான நிலையில் தற்போது உயர் நீதிமன்ற நீதிபதியாக கடமையாற்றிய தீபாலி விஜேசுந்தரவை மேன்முறையீட்டு நீதிமன்ற நீதிபதியாக ஜனாதிபதி நியமித்துள்ளார்.

அதற்கான அங்கீகாரத்தைப் பெறும் பொருட்டு அந்த நியமனம் தொடர்பான விடயம் பாராளுமன்ற நிலையியற்குழுவுக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளது.

இதற்கிடையே தனக்கு விதிக்கப்பட்டுள்ள தண்டனைக்கு எதிராக சரத் பொன்சேகா மேற்கொண்டுள்ள மேன்முறையீட்டு மனுவையும் தீபாலி விஜேசுந்தரவிடமே விசாரணைக்கு விட அரசாங்கம் தீர்மானித்துள்ளது. (அ-2)

# அரசிற்கு எதிரான போராட்டத்தில் கலந்துகொள்ள ரணில் கோரிக்கை

இலங்கை அரசாங்கத்திற்கு எதிரான போராட்டத்தில் கலந்து கொள்ளுமாறு ஐ.தே. கட்சியின் தலைவர் ரணில் விக்ரமசிங்க நேற்று முன்தினம் மீண்டும் கோரிக்கை விடுத்துள்ளார்.

கட்சி இன மற்றும் மத பேதங்களைக் களைந்து மக்கள் போராட்டத்தில் கலந்து கொள்ள வேண்டுமெனவும் சரத் பொன்சேகா விடுதலை செய்யப்பட வேண்டும், சிங்கள வர்த்தகர்கள் பாதுகாக்கப்பட வேண்டும், வாழ்க்கைச் செலவு குறைக்கப்பட வேண்டும், நீதியின்மை, சர்வாதிகாரம் போன்றன இல்லாதொழிக்கப்பட போன்ற கோரிக்கைகளை முன்வைத்து போராட்டத்தில் ஈடுபட இருப்பதாகவும் ரணில் தெரிவித்துள்ளார்.

எதிர்வரும் செவ்வாய்க்கிழமை கொழும்பு ஹைட் மைதானத்திலிருந்து போராட்டம் ஆரம்பமாகும் என அவர் குறிப்பிட்டுள்ளார். (அ-2)

# இரண்டாம் மொழி இறுதி பரீட்சை

தேசிய கல்வி நிறுவகத்தினால் நடத்தப்படும் ஆசிரியர்களுக்கான 2 ஆம் மொழி (ஆங்கிலம், சிங்களம்) கற்கை நெறிக்கான இறுதிப் பரீட்சை குறிப்பிட்டபடி இன்று சனிக்கிழமையும் நாளை ஞாயிற்றுக்கிழமையும் காலை 9 மணிக்கு யாழ். மத்திய கல்லூரியில் நடைபெறவுள்ளது.

பரீட்சைக்கு விண்ணப்பித்த அனைவரும் தவறாது பரீட்சைக்கு தோற்றுமாறும் எதிர்வரும் 2012 ஆம் ஆண்டில் இரண்டாம் மொழிகளுக்கான விண்ணப்பத் திகதி முடிவுற்று இருப்பினும் அதற்கான விண்ணப்பங்களை அன்றைய தினமும் கையளிக்க முடியும் என தேசிய கல்வி நிறுவக யாழ். மாவட்ட இணைப்பாளர் தணிகாசலம்பிள்ளை அறிவித்துள்ளார். தேசிய கல்வி நிறுவகத்தினால் நடத்தப்படும் ஆசிரியர்களுக்கான (ஆங்கிலம், சிங்களம்) 2 ஆம் மொழி கற்கை நெறிக்கான இறுதிப் பரீட்சை குறிப்பிட்டபடி இன்று சனிக்கிழமையும் நாளை ஞாயிற்றுக்கிழமையும் காலை 9 மணிக்கு யாழ். மத்திய கல்லூரியில் நடைபெறவுள்ளது.

பரீட்சைக்கு விண்ணப்பித்த அனைவரும் தவறாது பரீட்சைக்கு தோற்றுமாறு தேசிய கல்வியியற் கல்லூரி நிறுவக யாழ். மாவட்ட இணைப்பாளர் தணிகாசலம்பிள்ளை அறிவித்துள்ளார். (அ)

# உலக நாடுகள் ஈழக்கோட்பாட்டுக்காக குரல் கொடுக்கக்கூடாது- ஜி.எல்.பீரிஸ்



(கொழும்பு)

சில நாடுகள் தொடர்ந்தும் தமிழீழ விடுதலைப் புலிகளுடன் தொடர்புகளைப் பேணி வருவதாக வெளிவிவகார அமைச்சர் ஜி.எல். பீரிஸ் தெரிவித்துள்ளார்.


குற்றச்செயல்களுக்கு தண்டனை வழங்கப்பட வேண்டுமென வலியுறுத்தும் உலக நாடுகள் ஈழக்கோட்பாட்டாளர்களுக்காக குரல் கொடுக்கக் கூடாது என அவர் வலியுறுத்தியுள்ளார்.

அரசாங்கம் மேற்கொண்டுவரும் நல்லிணக்க நடவடிக்கைகளுக்கு மேற்குலக நாடுகள் ஒத்துழைப்புவழங்க வேண்டுமெனகுறிப்பிட்டுள்ளார். உண்மையைக் கண்டறியும் ஆணைக்குழு உள்ளிட்ட சகல விடயங்கள் குறித்தும் உலக நாடுகளுடன் பேச்சுவார்த்தை நடத்தத்தயார் என அவர் அறிவித்துள்ளார்.

வெளிச்சக்திகளின் அழுத்தங்கள் நல்லிணக்க நடவடிக்கைகளை பாதிக்கும் என அவர் சுட்டிக்காட்டியுள்ளார். நல்லிணக்கம் மற்றும் சர்வதேச சமூகம் தொனிப்பொருளில் உரையாற்றிய போது அவர் இதனைக் குறிப்பிட்டுள்ளார்.

சில நாடுகள் தமிழீழ விடுதலைப் புலிகளுக்கு தொடர்ந்தும் உதவிகளை வழங்கி வருவதாகக் குற்றம் சுமத்தியுள்ளார். குற்றச்செயல்களுக்கு தண்டனை விதிப்பது குறித்து சில நாடுகள் பின்பற்றும் கொள்கைகள் ஆச்சரியமளிப்பதாகக் குறிப்பிட்டுள்ளார்.


தமிழ் புலம்பெயர் மக்களை தனிமைப்படுத்த வேண்டுமென அரசாங்கம் கருதவில்லை என அவர் சுட்டிக்காட்டியுள்ளார். (அ-2)



நீர்வேலி கலை பண்பாட்டு மன்றத்தினால் நடத்தப்பட்ட கலை பண்பாட்டுப் பெருவிழா நீர்வேலி அரசகேசரிப் பிள்ளையார் கோவில் முன்றலில் நடைபெற்றது. இதன்போது நீர்வேலிக் கிராமத்தின் உயர்விற்காக உழைத்த அறுவர் நீர்வைக் குரிசில் விருது வழங்கி கௌரவிக்கப்பட்டனர். அவர்களைப் படத்திற் காணலாம்.

# விலையுயர்வை கண்டித்து தமிழ்நாடு முழுவதும் கண்டன ஆர்ப்பாட்டம்

## வைகோ அழைப்பு



(சென்னை)

பால்விலை உயர்வு, பஸ் கட்டண உயர்வை திரும்ப பெறக் கோரி தமிழகம் முழுவதும் ம.தி.மு.க நாளை மறுதினம் திங்கட்கிழமை ஆர்ப்பாட்டம் ஒன்றை நடத்தவுள்ளனர். இது தொடர்பாக ம.தி.மு.க பொதுச்செயலாளர் வைகோ வெளியிட்டுள்ள அறிக்கையில், தமிழகத்தில் வரலாறு காணாத அளவுக்கு பேருந்து கட்டணம், பால் விலையை தமிழக அரசு உயர்த்தி உள்ளது. எவ்வித முன் அறிவிப்பும் இன்றி நடைமுறைப்படுத்தப்பட் டுள்ளதாக இந்த கட்டண உயர்வால் நடுத்தர அடித்தட்டு மக்கள் பெரும் அதிர்ச்சி அடைந்துள்ளனர். அவர்களுடைய மாத வருவாயில் பெரும் பகுதியை பறித்து கொள்கின்ற வகையில் இந்த விலை உயர்வு அமைந்து இருக்கின்றது.

இந்தநிலையில் மின் கட்டணத்தையும் வரலாறுகாணாத அளவுக்கு உயர்த்த போவதாக அரசு எச்சரிக்கை விடுத்துள்ளது.


தமிழக அரசு உடனடியாக இந்த விலை உயர்வை திரும்ப பெற வேண்டும் என்பதை வலியுறுத்தி அனைத்து மாவட்ட தலைநகரங்களிலும் கண்டன ஆர்ப்பாட்டம் நடைபெறும்.

சென்னையில் 29 ஆம் திகதியன்று மாவட்டச்செயலாளர் அலுவலகம் முன்ப ஆர்ப்பாட்டம் நடைபெறும். இவ்வாறு அவர் வெளியிட்ட அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

(அ-2)

# அ.தி.மு.க ஆட்சியில் மக்களுக்கு பல்வேறு பிரச்சினைகள்

## விஜயகாந்த் தெரிவிப்பு



(சென்னை)

அ.தி.மு.க ஆட்சியை பற்றி ஆறு மர்தம் கருத்து தெரிவிக்கமாட்டேன் என்றேன். அதற்குள்ளாக மக்கள் பாதிக்கப்படும் அளவிற்கு பல்வேறு பிரச்சினைகள் ஏற்படுத்தி என்னை பேச வைத்து விட்டனர். ஆட்சிக்கு எதிராக பேசினால் என்னை சிறையில் போடுவர். நான் எதற்கும் தயாராகத்தான் இருக்கின்றேன். நான் வேட்டியை மடித்து கட்டி இறங்கும் பாத்திரம் என்பதால் மக்கள் பிரச்சினைக்காக தொடர்ந்து போராடுவேன் என தே.மு.தி.க தலைவர் விஜயகாந்த் கூறினார்.

பால் விலை, பஸ் கட்டண உயர்வை கண்டித்து தே.மு.தி.க சார்பில் மாநிலம் முழுவதும் நேற்று முன்தினம் உண்ணாவிரதப் போராட்டம் இடம்பெற்றது.

சென்னை கோயம்பேடு தே.மு.தி.க தலைமை அலுவலகத்தில் நடந்த உண்ணாவிரதத்தின் முடிவில் அக்கட்சித் தலைவர் விஜயகாந்த் உரையாற்றுகையில், நம்மை பயன்படுத்தி ஆட்சிக்கு வந்தவர்கள் நம்மை ஏளனம் செய்கின்றனரே என்ற கோபம் எமது கட்சியினர் மத்தியில் இருக்கிறது. இன்று வெற்றி மமதையில் பேசுபவர்கள் கடந்த ஆட்சியில் நடந்த 12 இடைத்தேர்தலில் வெற்றி பெற்றனரா என்பதை எண்ணி பார்க்க வேண்டும். இப்போது அமைச்சர்களாக இருப்பவர்களாலும் கடந்த ஆட்சியில் வெற்றி பெற முடியவில்லை. உள்ளாட்சித் தேர்தலில் தே.மு. தி.க படுதோல்வி அடைந்ததாக கூறுகின்ற னர். அப்படி இருந்தால் எப்படி 11 சதவீத வாக்குகளை பெற்றிருக்க முடியும்.

இந்த ஆட்சியைப் பற்றி ஆறு மாதம் கருத்து தெரிவிக்கமாட்டேன் என்றேன். ஆனால் அதற்குள் மக்கள் பாதிக்கப்படும் அளவிற்கு பல்வேறு பிரச்சினைகள் ஏற்படுத்தி என்னை பேச வைத்துவிட்டனர். ஆட்சிக்கு எதிராக பேசினால் என்னை சிறையில் போடுவர். நான் எதற்கும் தயாராகத்தான் இருக்கின்றேன். பால்விலை உயர்ந்து விட்டால் இனி செத்தவனுக்கும் தண்ணீர்தான் ஊற்ற வேண்டும்.

இரண்டு ஆட்சிகளுமே மக்களுக்காக எந்த நல்ல திட்டங்களையும் செயற்படுத்தவில்லை. தி.மு.க, அ.தி.மு.கவை அழிக்க மக்கள் சபதம் எடுக்க வேண்டும் . பிரச்சினைகளுக்கு எதிராக போராட மக்களும் தயாராக இருக்க வேண்டும். என்னிடம் ஆட்சியைக் கொடுத்தால் சரித்திரத்தில் பேசும் அளவிற்கு நான் ஆட்சி செய்வேன். தே.மு.தி.க தொண்டர்சிறை செல்லவும் தயாராக இருக்க வேண்டும் என்றார். காலை முதல் உண்ணாவிரதம் இருந்த விஜயகாந்த் மாலையில் உரையாற்றி உண்ணாவிரதத்தை முடித்தார்.

விஜயகாந்த் உரையாற்றியபின் பேசியவர்கள் பொதுவாக உண்ணாவிரதம் முடி[illegible]தும் வழக்கமாக மோர் கொடுப்பார்கள். தற்போது பால் விலை உயர்ந்துவிட்ட காரணத்தால் எலுமிச்சை பழச்சாறு குடித்து கப்டன் உண்ணாவிரதத்தை முடிப்பார்கள் என்றார். அப்போது ஒரு சிறுமியை அழைத்து அந்த சிறுமியிடம் எலுமிச்சை பழச்சாறு கொடுத்து அனுப்பினார்கள். விஜயகாந்த் அதனை பருகி உண்ணாவிரதத்தை முடித்தார். (அ-2)

# ஏழுமலையான் உண்டியலில் 162 வைரக்கற்கள் இருந்தன

(நகரி)

திருப்பதி ஏழுமலையான் கோவில் உண்டியலில் காணிக்கையாக 162 வைரக்கற்கள் இருந்தன. திருப்பதி ஏழுமலையான் கோவில் உண்டியல் காணிக்கை பணம் எண்ணப்பட்டது.

இதில் மூலஸ்தானம் அருகில் உள்ள உண்டியலில் பக்தர் ஒருவர் விலைமதிப்பற்ற வைரக்கற்களைக் காணிக்கையாக செலுத்தியிருந்தார். ஒரு பையில் கட்டி அந்த வைரக்கற்கள் காணிக்கையாக செலுத்தப்பட்டிருந்தன. அந்த பையில் 162 வைரக்கற்கள் இருந்தன. இந்த வைரத்தின் தரம் குறித்த குறிப்புகளும் அந்த பையில் எழுதிப் போடப்பட்டிருந்தது.

இந்த கற்கள் 72 வகையைச் சேர்ந்தவை. இந்த வைரக்கற்களின் மதிப்பு கோடிக் கணக்கில் இருக்கும் என்று அதிகாரிகள் தெரிவித்தனர். இந்த வைரக் கற்களை காணிக்கை செலுத்திய பக்தரின் விபரம் எதுவும் தெரியவில்லை.

இது குறித்து தேவஸ்தான நிர்வாக அதிகாரி ஸ்ரீநிவாசராஜு தெரிவிக்கையில், திருப்பதி ஏழுமலையானுக்கு செய்யப்படும் ஆபரணங்களில் இந்த வைரக்கற்கள் பதிக்கப்படும் என்றார்.

மேலும் அவர் கூறுகையில், மும்பையில் கட்டப்பட்டுள்ள ஏழும்லையான் கோவில் வருகிற முதலாம் திகதி திறக்கப்படும் என்றார். 3 மாடி கொண்ட இந்த கட்டடத்தில் ஒரு தளத்தில் கோவிலும் மற்ற 2 தளத்தில் தகவல் மையம் மற்றும் விற்பனை நிலையம், அர்ச்சகர் விடுதிகள் இருக்கும்.

(அ-2)

# வெளிநாடு செல்லும் பெண்களை பாதுகாக்க சட்டத்தில் மாற்றம்

(புதுடில்லி)

வளைகுடா நாடுகளில் பணிக்குச் செல்லும் இந்தியப் பெண்கள் பல்வேறு சிரமங்களுக்கு ஆளாவதைத் தடுக்கும் நோக்கில் உரிய சட்டங்களில் சில மாற்றங்களைச் செய்திருப்பதாக வெளிநாடு வாழ் இந்தியர்களுக்கான அமைச்சர் வயலார் ரவி மாநிலங்களவையில் நேற்று முன்தினம் குறிப்பிட்டார்.

அவர் மேலும் கூறியதாவது, வளைகுடா நாடுகளுக்குச் செல்லும் பெண்களைக் காக்க பல்வேறு நடவடிக்கைகளை மத்திய அரசு எடுத்துள்ளது. குறிப்பாக அங்கு வேலைக்குச் செல்லும் பெண்களின் வயது 30 இற்கும் குறையாமல் இருக்கவேண்டும் என்று விதிக்கப்பட்டுள்ளது.

மேலும் பணிக்கான ஒப்பந்தம் அந்தந்த நாடுகளில் உள்ள இந்தியத் தூதரகங்களால் அங்கீகரிக்கப்பட்ட வேண்டும் என்பதை க[illegible]டாயமாக்கி உள்ளோம். முன் கட்டணத்துடன் கூடிய கைத்தொலைபேசியை பணிப்பெண்ணிடம் அவரை வேலைக்கு வைத்திருப்பவர் தர வேண்டும் என்று ஆலோசனை வழங்கப்பட்டுள்ளது.

இந்தியப் பணிப்பெண்ணை வேலைக்கு அமர்த்தும் ஒருவர் பிணைத் தொகையை ரூ 1.3 இலட்சத்தை இந்தியத் தூதரகத்தில் அந்தப் பெண்ணின் சார்பில் செலுத்த வேண்டும் என அவர் குறிப்பிட்டார். (அ-2)

# ராகுல்காந்தி கற்பனையான குற்றச்சாட்டுகளை கூறுகிறார்

## பகுஜன் சமாஜ் கட்சி மாநிலத்தலைவர்



(லக்னோ)

உத்தரப்பிரதேசத்தில் சுற்றுப்பயணம் மேற்கொண்டுள்ள ராகுல்காந்தி அங்கு நடக்கும் பொதுக்கூட்டம், பேரணிகளில் மாயாவதி அரசுக்கு எதிராக குற்றச்சாட்டுக்களை கூறி வருகிறார்.


இதற்கு பதில் அளித்து பகுஜன் சமாஜ் கட்சியின் மாநில தலைவர் சுவாமி பிரசாத் மௌரியா ஒரு அறிக்கை வெளியிட்டுள்ளார். அதில் கூறப்பட்டு இருப்பதாவது,

மாநில அரசுக்கு எதிராக ராகுல்காந்தி கற்பனையான குற்றச்சாட்டுக்களை சுமத்தி வருகிறார். உண்மை நிலையை புரியாமல் அவர் பேசி வருகிறார். அவரால் இந்தி மொழி வாசிக்கவோ, எழுதவோ முடியாது. அவரது உதவியாளர்களுக்கு கணனி தொடர்பாக ஆழ்ந்த அறிவு கிடையாது. அதனால்தான் மாநிலம் குறித்து அவரிடம் இருக்கும் சரியான புள்ளிவிபரங்களை அவரால் தெரிந்து கொள்ள முடியவில்லை.

மாநிலத்தில் 40 ஆண்டுகள் ஆட்சி புரிந்த காங்கிரஸ் மக்களுக்கு எதுவும் செய்யவில்லை. இதனால்தான் கடந்த 20 ஆண்டுகளாக காங்கிரசை மக்கள் ஓரங்கட்டி வைத்துள்ளனர். மாநிலத்தை அதிக காலம் ஆட்சி செய்த காங்கிரஸ் பின்தங்கிய மற்றும் ஏழை மக்களின் முன்னேற்றத்துக்காக என்ன செய்தது? தெரு முனை பிரசாரங்கள் நடத்துவதன் மூலம் மட்டுமே உண்மை நிலைவரத்தை கண்டறிய முடியாது.

இன்று விலை உயர்வு காரணமாக சாதாரண மக்கள் மிகவும் கஷ்டப்படுகின்றனர். விலைவாசி உயர்வை கட்டுப்படுத்த ராகுல் ஏதாவது செய்ய வேண்டும். அதை அவர் செய்வாரா? இவ்வாறு அறிக்கையில் கூறப்பட்டுள்ளது.

(அ-2)



டில்லியில் இந்திய மத்திய அமைச்சரும் தேசியவாத காங்கிரஸ் கட்சியின் தலைவருமான சரத்பவார் நேற்று முன்தினம் தாக்கப்பட்டதை கண்டித்து மும்பையில் ஆர்ப்பாட்டம் செய்த அக்கட்சித் தொண்டர்களைப் படத்தில் காணலாம்

# படைவீரர்களுக்கு அறிவிக்கப்பட்ட உறுதிமொழியை அரசு நிறைவேற்றவில்லை

## வரவு செலவுத்திட்டம் குறித்து விஜித ஹேரத்

(கொழும்பு)

2011 ஆம் ஆண்டின் வரவுசெலவுத்திட்டத்தின் மூலம் படைவீரர்களுக்கு அறிவிக்கப்பட்ட உறுதிமொழியை அரசாங்கம் நிறைவேற்றவில்லை என்று ஜே.வி.பி குற்றம் சுமத்தியுள்ளது என ஜே.வி.பி.யின் பிரசார செயலாளர் விஜித ஹேரத் இந்தக் குற்றச்சாட்டை சுமத்தியுள்ளார்.

2011 ஆம் ஆண்டின் வரவுசெலவத் திட்டத்தில் அரசாங்கம் படைவீரர்களின் மூன்றாவது பிள்ளைக்கு ஒரு இலட்சம் ரூபா வழங்கப்படும் என்று அறிவித்திருந்தது. எனினும் எந்த ஒரு படைவீரருக்கும் அந்த பணம் கிடைக்கவில்லை என்று விஜித ஹேரத் குறிப்பிட்டுள்ளார். இந்தநிலையில் அரசாங்கம் இந்தத்திட் டத்தை பொலிஸாரின் பிள்ளைகளுக்கும் விரிவுபடுத்தியுள்ளதாக குறிப்பிட்டுள்ளது என் றும் அவர் சுட்டிக்காட்டினார்.

இந்த உறுதிமொழிக்காக அரசாங்கம் 2011 ஆம் ஆண்டு ஆயிரத்து 200 மில்லியன் ரூபாவை ஒதுக்கீடு செய்திருந்தது. எனினும் அந்தப்பணம் படையினருக்கு வழங்கப்படவில்லை.

இது அரசாங்கத்தின் வரவுசெலவுத்திட்ட ஏமாற்றமாகும் என்று விஜித ஹேரத் தெரிவித்துள்ளார். 2011 ஆம் ஆண்டு வரவு செலவுத்திட்ட உரையின் போது ஜனாதிபதி இலங்கையின் வறுமைநிலை 7.6 ஆக உள்ளதாக குறிப் பிட்டிருந்தார்.

எனினும் 2012 ஆம் ஆண்டின் வரவு செலவுத்திட்ட உரையின்போது வறுமைநிலை 8.9 என்று குறிப்பிட்டுள்ளார். இது முரண்பாடான புள்ளிவிபரமாக அமைந்துள்ளது.

இதன்படி 2012 ஆம் ஆண்டின் வரவு செலவு திட்ட உரை, 2011ஆம் ஆண்டின் வரவு செலவுத் திட்ட உரையை பார்க்காமல் தயாரிக்கப்பட்டுள்ளமை தெரியவந்துள்ள தாக விஜித ஹேரத் சுட்டிக்காட்டியுள்ளார்.

இதேவேளை வரவுசெலவு திட்ட உரையின் போது ஜனாதிபதி உணவுப்பொருட்களின் விலைகள் குறைந்துள்ளதாக குறிப்பிட்டிருந்தார்.

எனினும் நிதியமைச்சின் அறிக்கையின் படி உணவுப்பொருட்களின் விலைகள் அதிகரித்துள்ளமையை நாடாளுமன்ற உறுப்பினர் சுனில் ஹந்துன்நெத்தி சுட்டிக்காட்டியுள்ளார்.

எனவே இதில் எதனை நம்புவது என்று தெரியவில்லை என்றும் அவர் கூறினார். (அ-2)

# ஆபாச இணையத்தளங்களை கண்டறிவதற்கு நடவடிக்கை

(கொழும்பு)

இலங்கையில் உள்நாட்டு ஆண்கள் மற்றும் பெண்கள் தோன்றும் ஆபாச இணையத்தளங்களைக் கண்டறிவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டு வருவதாக பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

இலங்கையின் கணனி அவசரகால பதிலளிப்பு அணி மற்றும் இலங்கைத் தகவல் தொழில் நுட்ப நிறுவனம் ஆகியவற்றின் உதவியை பொலிஸார் நாடியுள்ளதாக பொலிஸ் பெண்கள் மற்றும் சிறுவர் பாதுகாப்பு பணியகம்நேற்றுவியாழக்கிழமைநீதிமன்றத்தில் தெரி வித்துள்ளது.

ஆபாச இணையத்தளங்கள் பலவற்றை இலங்கை இணையத்தளம் தடைசெய்த போதிலும் இத்தகைய இணையத்தளங்களை இயக்குபவர்கள் பெரும்பாலும் வெளிநாடுகளில் இருந்து செயற்படுவதால் அவர்களைக் கண்டறிவதற்காக தொழில்நுட்பம் அவ்வாணைக்குழுவிடம் இல்லை என்று பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

இதனால்தான் இலங்கை கணனி அவசரகால பதிலளிப்பு அணி மற்றும் இலங்கைத் தகவல் தொழில்நுட்ப நிறுவனம் ஆகிய வற்றின் உதவியை நாடியுள்ளதாக பொலிஸ் பெண்கள் மற்றும் சிறுவர் பாதுகாப்பு பணியகம் தெரிவித்துள்ளனர்.

(அ-2)

# சிறைத்தண்டனை விதிக்கப்பட்ட பொன்சேகா எவ்வைத்தியசாலையில் சிகிச்சை பெறுவது?

## சட்டமா அதிபரிடம் ஆலோசனை

(கொழும்பு)

சிறைத்தண்டனை பெற்று வெலிக்கடை சிறைச்சாலையில் தடுத்து வைக்கப்பட்டுள்ள முன்னாள் இராணுவத்தளபதி சரத்பொன்சேகாவுக்கு சிகிச்சையளிப்பதற்காக அவரை தனியார் வைத்தியசாலைக்கு அழைத்து செல்லமுடியுமா என்பது குறித்து சட்டமா அதிபரிடம் வினவியுள்ளதாக சிறைச்சாலை ஆணையாளர் பீ.டப்ளியூ கொடிப்பிலி தெரிவித்துள்ளார்.

சரத் பொன்சேகா விளக்கமறியலில் கைதியாக இருந்த போதே முன்னர் தனியார் வைத்தியசாலைக்கு சிகிச்சைக்காக அழைத்துச் செல்லப்பட்டதாகவும் சிறைத்தண்டனை விதிக்கப்பட்டவர்கள் சட்டவிதிமுறைகளின் படி அரசாங்க வைத்தியசாலைகளுக்கே அழைத்துச் செல்லப்பட வேண்டும் எனவும் அவர் கூறியுள்ளார்.

எனினும் சட்டமா அதிபரின் ஆலோசனையின் அடிப்படையிலேயே இதில் மாற்றங்கள் ஏதும் நிகழலாம். இந்த நிலையில் சரத் பொன்சேகாவை தனியார் வைத்தியசாலைக்கு அழைத்துச் செல்ல முடியுமா, முடியாதா என்பது குறித்த சட்டமா அதிபரின் ஆலோசனை இன்று கிடைக்கலாம் எனவும் சிறைச்சாலை ஆணையாளர் மேலும் தெரிவித்துள்ளார்.

(அ-2)

# மும்மொழிக் கொள்கைக்கான ஆண்டு பிரகடனப்படுத்தப்பட்டது

## அமைச்சர் கெஹலிய

(கொழும்பு)

எதிர்வரும் 2012 ஆம் ஆண்டு மும்மொழிக் கொள்கைக்கான ஆண்டாக அரசாங்கத்தால் பிரகடனப்படுத்தப்படவுள்ளதாக அமைச்சரும் அமைச்சரவை பேச்சாளருமான கெஹலிய ரம்புக்வெல தெரிவித்தார்.

ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவினால் மும்மொழிக்கான இலங்கை என்ற பத்து வருட திட்டம் அமைச்சரவைக்கு முன்வைக்கப்பட்டுள்ளது.

இதன்போதே இதற்கு அமைச்சரவை அங்கீகாரம் கிடைத்துள்ளதாகவும் அமைச்சர் தெரிவித்தார். கொழும்பில் அரசாங்க தகவல் திணைக்களத்தில் நேற்று முன்தினம் இடம்பெற்ற அமைச்சரவை தீர்மானங்களை அறிவிக்கும் ஊடகவியலாளர் மாநாட்டில் கலந்து கொண்டு உரையாற்றுகையிலேயே அமைச்சர் கெஹலியரம்புக்வெல அதனைத் தெரிவித்தார்.

அமைச்சர் இங்கு தொடர்ந்து உரையாற்றுகையில், ஜனாதிபதி முன்வைத்த யோசனையில் 2012 தொடக்கம் 2021 வரையிலான பத்தாண்டு மும்மொழிக் கொள்கைத் திட் டத்தை முன்னெடுக்கவும் அதற்காக 2012 ஆம் ஆண்டை மும்மொழிக் கொள்கைக்கான ஆண்டாக பிரகடனப்படுத்தப்பட வேண்டுமென்றும் குறிப்பிடப்பட்டிருந்தது.

இதற்கு அமைச்சரவையின் அங்கீகாரம் கிடைக்கப்பெற்றது. மக்களை மும்மொழிகளை கற்பதற்கு ஊக்குவிப்பதன்மூலம் அவர்களிடையே புரிந்துணர்வு மற்றும் இன ஐக்கியத்தை ஏற்படுத்த முடியும்.

இலங்கையை ஆசியாவின் ஆச்சரியமிக்க நாடாக்கும் திட்டத்திற்கு இந்தப் பத்தாண்டுத்திட்டம் உந்துசக்தியாக அமையும்.

அத்தோடு இத்திட்டத்தின் ஊடாக மொழிகளை கற்பிக்கும் கலாசாரமொன்று நாட்டுக்குள் உருவாகும்.

இத்திட்டத்தை முன்னெடுப்பதற்காக ஜனாதிபதி செயலகத்தில் இணைப்புக்காரியாலயமொன்றை திறப்பதற்கும் அமைச்சரவையில் தீர்மானிக்கப்பட்டது. அத்தோடு இலங்கைத் தேயிலை உலகம் பூராகவும் பிரபல்யப்படுத்துவதற்காக அமைச்சர் மகிந்த சமரசிங்கவினால் முன்வைக்கப்பட்ட 5 வருட திட்டத்தை நடைமுறைப்படுத்தவும் அமைச்சரவை அங்கீகாரம் கிடைத்தது. (அ-2)


# முதலாம் ஆண்டு நினைவஞ்சலி

அமரர் பொன்னுத்துரை பாலச்சந்திரன்

(வர்த்தகர்)



பிறப்பு 22.07.1946

இறப்பு 26.11.2010

ஆலமர விழுதுகள் போல- ஐயா
அரவணைத்து நாமிருக்க
காலனவன் அழைத்தவுடன்
கனதூரம் போனதென்ன?
ஞாலமதில் தினம் நினைத்து
நாமிங்கு ஏங்குகின்றோம்.

சென்ஜோசெப் லேன்,
பத்தமேனி,
அச்சுவேலி.

தகவல்:-
குடும்பத்தினர்.

(6850)


# தொழிற்சங்க நடவடிக்கை குறித்து பல்கலை ஆசிரியர்சங்கம் மீளாய்வு

## பல்கலை ஆசிரியர் சங்கத்தின் அறிக்கையில் தகவல்

(யாழ்ப்பாணம்)

அரசாங்கத்துடன் செய்து கொள்ளப்பட்ட உடன்படிக்கையின் படி கல்வி நடவடிக்கைக்கு மொத்த தேசிய வருமானத்தில் 6வீதம் ஒதுக்கப்படவில்லை. எனவே நிறுத்திவைக்கப்பட்டுள்ள தொழிற்சங்க நடவடிக்கையை மீண்டும் ஆரம்பிப்பதற்கு இலங்கை பல்கலைக்கழக ஆசிரியர் சம்மேளனமானதுமீளாய்வு செய்யவுள்ளது என யாழ். பல்கலைக்கழக விஞ்ஞான ஆசிரியர் சங்க பொதுச்செயலாளர் கலாநிதி ஐங்கரன் அறிக்கை வெளியிட்டுள்ளார். அவ்வறிக்கையில் மேலும் குறிப்பிடப்பட்டிருப்பதாவது,

எமது சம்மேளனமானது கடந்த மே மாதம் 9 ஆம் திகதி முதல் தொழிற்சங்க நடவடிக்கையில் ஈடுபட்டது. இதன்போது பின்வரும் கோரிக்கைகள் முன்வைக்கப்பட்டன.

பல்கலைக்கழக ஆசிரியர்களின் சம்பளம் உயர்த்தப்படவேண்டும் எனவும் மொத்த தேசிய வருமானத்தில் 6 வீதமாவது உயர் கல்விக்கு ஒதுக்கப்பட வேண்டுமெனவும் கோரிக்கை முன்வைக்கப்பட்டது.

பின்னர் எமது போராட்டம் அரசுடன் செய்யப்பட்ட உடன்படிக்கை காரணமாகவும் மனித நேயத்தின் அடிப்படையிலும் பல்கலைக்கழக மாணவர்களின் நன்மை கருதி எமது தொழிற்சங்க நடவடிக்கை கைவிடப்பட்டது.

உடன்படிக்கையின் சதவீத அடிப்படை சம்பள உயர்வு இந்த ஆண்டுக்கான வரவு செலவு திட்ட அறிக்கையில் அரசாங்கம் ஒதுக்கவில்லை.

அத்துடன் உடன்படிக்கையில் கூறப்பட்டதன் படி மொத்தத்தேசிய வருமானத்ததில் 6வீதம் உயர்கல்விக்கு ஒதுக்கப்படவில்லை. மேலும் பல்கலை ஆசிரியர்களுக்கான வீடு, கடன் வசதி அவர்களின் மேலதிக சேவைக்கான கட்டண அதிகரிப்பு என்பனவற்றை மேற்கொள்ளவில்லை.

மிகவும் முக்கியமான பிரச்சினைகளில் ஒன்றாக பல்கலைக்கழகத்தின் சுயாதீன தன்மையை பாதிக்கும் நடவடிக்கைகள், அத்துடன் கூட்டத்துக்கு முரணானதும், ஏற்றுக் கொள்ள முடியாததுமான தலையீடுகளை இலங்கை பல்கலைக்கழகங்கள் எதிர் நோக்கியுள்ளன.

இதன் காரணமாக 21 ஆம் திகதி யூலை மாதம் நிறுத்திவைக்கப்பட்ட தொழிற்சங்க நடவடிக்கையை மீண்டும் ஆரம்பிப்பதற்கு பல்கலைக்கழக ஆசிரியர் சம்மேளனம் மீளாய்வு செய்கிறது என அவ் அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளது. (அ-2)

# தொல்பொருள் காட்சியகங்களுக்கு காவல்

(கொழும்பு)

தொல்பொருள் காட்சியகங்களின் பாதுகாப்புகளுக்காக பொலிஸாரை ஈடுபடுத்த பாதுகாப்பு செயலாளர் கோத்தபாய ராஜபக்ஷ பணித்துள்ளார்.

தேசிய உரிமைகளுக்கான அமைச்சின் செயலாளர் காந்தி விஜேதுங்க இதனை தெரிவித்துள்ளார்.

அமைச்சின் கோரிக்கைக்கு இணங்க பாதுகாப்பு செயலாளர் பொலிஸ்மா அதிபருக்கு இது தொடர்பில் அறிவுறுத்தியதாக அவர் குறிப்பிட்டுள்ளார்.

அண்மைக்காலமாக தொல்பொருள் காட்சியகங்களின் பல்வேறு பொருட்கள் காணாமல் போனதை தொடர்ந்து இந்த கோரிக்கை விடுக்கப்பட்டுள்ளது(அ-2)

# புலம்பெயர்ந்தோரால் பிரிட்டனில் மக்கள் தொகை அதிகரிப்பு

பிரிட்டனில் புலம்பெயர்ந்து வந்தவர்களின் எண்ணிக்கை அதிகரிப்பதால் மக்கள் தொகை இன்னும் 25 ஆண்டுகளில் 77 பில்லியனாகப் பெருகும் என தேசியப் புள்ளிவிபரவியல் துறை தகவல் வெளியிட்டுள்ளது.

இப்போது வந்து கொண்டிருக்கும் அதே எண்ணிக்கையில் புலம்பெயர்ந்தோர் இனியும் பிரிட்டனுக்குள் வந்து கொண்டிருந்தால் இன்னும் 16 பில்லியனாக மக்கள் தொகை உயரும்.பிறப்பு விகிதமும் வாழ்நாளும் பெருகுவதால் 2035 ஆம் ஆண்டு 6 இலட்சத்து 50 ஆயிரம் மக்களுக்கு பிரிட்டனில் குடியிருக்க இடம் கண்டுபிடிக்க வேண்டும் என்ற நிலை வந்துவிடும்.

இதனால் அதிகரிக்கப்போகும் எழுபது பில்லியன் மக்களுக்கு வீடு, போக்குவரத்து, கல்வி, உடல் நலம்,மின்சாரம்,தண்ணீர் போன்ற அனைத்து வசதிகளையும் அரசு வழங்க வேண்டும். இதற்கான ஏற்பாடுகளில் அரசு இறங்க வேண்டும்.எதிர்வரும் 2035 ஆம் ஆண்டு 77,746,000 ஆகும் மக்கள் தொகை 2060 ஆம் ஆண்டு 95 பில்லியனாகிவிடும். அப்போது ஐரோப்பாவின் மக்கள் தொகை மிகுந்த நாடான ஜேர்மனியைக் காட்டிலும் பிரிட்டன் மக்கள் தொகை அதிகமாக இருக்கும்.

ஆனால் பிரிட்டனின் நில அளவு ஜேர்மனியை விடக்குறைவு என்பது குறிப்பிடத்தக்கது. இனிவரும் நூறு ஆண்டுகளில் 137 பில்லியன் என்பது ஏறத்தாழ இரட்டிப்புத் தொகையாகும். கடந்த நூறு ஆண்டுகளில் மக்கள் தொகை 50 சதவீதமே உயர்ந்துள்ளது.புலம்பெயர்ந்தோராக வருபவர் ஒருவரைக் கூட பிரிட்டனுக்குள் அனுமதிக்கவில்லை என்றால் மக்கள் தொகையின் அளவு எழுபது பில்லியனாக உயராது. (அ-2)

# 17,000 பணியாளர்களை நீக்க நொக்கியா நிறுவனம் தீர்மானம்

செல்போன் தயாரிப்பில் உலகில் முன்னணி நிறுவனமாக நொக்கியா நிறுவனம் செயற்பட்டு வருகின்றது. இந்த நிறுவனம் ஐரோப்பிய நாடுகளின் சீமன்ஸ் நிறுவனத்துடன் கூட்டு சேர்ந்து செல்போனை தயாரித்து வருகின்றது. கடும் போட்டி காரணமாக சமீபகாலமாக இந்த நிறுவனம் நஷ்டத்தில் இயங்கி வருகின்றது. எரிக்சன் மற்றும் சீன நிறுவனம் ஹாவி ஆகியவை கடும் போட்டியாக உள்ளன. அவற்றை சமாளிக்க முடியாமல் நொக்கியா நிறுவனம் தவிக்கின்றது.

எனவே நஷ்டத்தை ஈடுகட்ட 17 ஆயிரம் ஊழியர்களை பணி நீக்கம் செய்வது என்று நோக்கியா நிறுவனம் முடிவு செய்தது. இந்த நிறுவனத்தில் மட்டும் 74 ஆயிரம் ஊழியர்கள் பணியாற்றி வருகின்றனர். அதில் 23 சதவீத ஊழியர்கள் நீக்கப்படுகின்றனர். இதன்மூலம் நிறுவனத்துக்கு ரூ.7 ஆயிரத்து 300 கோடி மிச்சமாகும். எனவே நிறுவனத்தை இலாபத்தில் செயற்படுத்த முடியும் என்று எதிர்பார்க்கின்றனர். மேலும் நொக்கியா, சீமன்ஸ் நிறுவனம் ஆகியவை தனித்தனியே பிரிந்து விடுவது என்றும் திட்டமிட்டுள்ளனர். (அ-2)



பிரான்ஸ் ஸ்ரராஸ்பர்க்கில் அந்நாட்டு ஜனாதிபதி நிக்கொலஸ் சர்கோசியை (இடது) இத்தாலியப் பிரதமர் மரியோ மோன்டி சந்தித்து கைலாகு வழங்குவதைப் படத்தில் காணலாம்.

# அமைதியான போராட்டத்தை நடத்துவதற்கான சட்டமசோதா மியன்மாரில் நிறைவேற்றம்

(யாங்கூன்)

அமைதியான முறையில் போராட்டங்களை நடத்துவதற்கு பொது மக்களுக்கு அனுமதி அளிக்கும் சட்டமசோதா, மியன்மார் நாடாளுமன்றத்தில் முதல்முறையாக நிறைவேற்றப்பட்டுள்ளது.

மியன்மாரில் கடந்த 50 ஆண்டுகளாக இராணுவ ஆட்சி இடம் பெற்றது. இராணுவ ஆட்சியில் அரசுக்கு எதிராக போராட்டம் நடத்தும் பொதுமக்கள் நசுக்கப்பட்டனர்.

சில ஆண்டுகளுக்கு முன் அரசுக்கு எதிராக காவிப் புரட்சி என்ற தலைப்பில் புதுத் துறவிகள் போராட்டம் நடத்தினர். இவர்கள் இராணுவ ஆட்சியாளர்களால் அடித்து விரட்டப்பட்டனர்.

மியன்மார் அரசின் இந்த போக்கை கண்டித்து சர்வதேச நாடுகள் மியன்மாரை தனிமைப்படுத்தும் நடவடிக்கைகளில் ஈடுபட்டன. இதனால் மியன்மார் அரசு பொருளாதார ரீதியாக பாதிக்கப்படும் சூழல் ஏற்பட்டது. இதைத் தொடர்ந்து சமீபத்தில் அங்கு தேர்தல் நடத்தப்பட்டது.

மக்களாட்சி ஏற்படுத்தப்பட்டதாக அறிவிக்கப்பட்டாலும் பாராளுமன்றுக்கு தேர்வு செய்யப்பட்டவர்களில் பெரும்பாலானோர் இராணுவ ஆதாரவாளர்கள்தான். பல உலகநாடுகள் மியன்மார் அரசு நடத்திய இந்த தேர்தலை ஏற்கவில்லை.

உலக நாடுகளின் நடவடிக்கைக்கு பயந்த மியன்மார் அரசு சிறிது சிறிதாக சீர்திருத்த நடவடிக்கைகளை ஆரம்பித்துள்ளது. இதன் ஒரு பகுதியாக போராட்டங்களை நடத்துவதற்கு பொதுமக்களுக்கு அனுமதி அளிக்கும் சட்டமசோதா நாடாளுமன்றில் நிறைவேற்றப்பட்டுள்ளது.

நாடாளுமன்ற உறுப்பினர் அயே மாவங் கூறியதாவது,

நாட்டில் சீர்திருத்த நடவடிக்கைகள் வேகமாக ஆரம்பிக்கப்பட்டுள்ளன. பொதுமக்களை போராட்டம் நடத்த அனுமதிக்கும் மசோதா நாடாளுமன்றில் நிறைவேற்றப்பட்டுள்ளது.

இதன்படி பொது மக்கள் அமைதியான முறையில் போராட்டங்களை நடத்தலாம். போராட்டம் நடத்துவதற்கு ஐந்து நாட்களுக்கு முன் அரசிடம் முறையாக அனுமதி பெற வேண்டும்.

போராட்டத்தின் போது கொடிகளை எடுத்துச் செல்லவும் அனுமதி உண்டு. அதேநேரத்தில் அரசு அலுவலகங்கள், பாடசாலைகள், மருத்துவமனைகளில் போராட்டம் நடத்த அனுமதி இல்லை. ஆனாலும் இந்த மசோதாவுக்கு ஜனாதிபதி தியென் சென்னிடம் இன்னும் ஒப்புதல் பெறவில்லை. அவர் கையெழுத்திட்டபின் இந்த மசோதா அமுலுக்கு வரும் என கூறினார்.

### ஹிலாரி பயணம்

மியன்மார் அரசின் சீர்திருத்த நடவடிக்கைகளை உலக நாடுகள் அங்கீகரிக்க தொடங்கியுள்ளதை அடுத்து அமெரிக்க வெளியுறவு அமைச்சர் ஹிலாரி அடுத்த வாரம் அங்கு சுற்றுப்பயணம் செய்யவுள்ளதாக அமெரிக்க வெள்ளை மாளிகை செய்தி தொடர்பாளர் அறிவித்துள்ளார். (அ-2)




# பாகிஸ்தானில் 2013 இல் தேர்தல் பிரதமர்-கிலானி அறிவிப்பு

(இஸ்லாமாபாத்)

'பாகிஸ்தானில் 2013 ஆம் ஆண்டு பொதுத்தேர்தல் நடைபெறும் என பிரதமர் யூசுப் ரசா கிலானி தெரிவித்துள்ளார்.

தேர்தல் நியாயமானதாகவும் வெளிப்படையாகவும் நடைபெறும் என்ற அவர், எதிர்க்கட்சிகள் குறிப்பிடுவது போல அரசுக்கு எந்தவிதமான அச்சுறுத்தலும் இல்லை என்றார்.

முன்னதாக பாகிஸ்தானில் இராணுவ புரட்சி ஏற்படக்கூடும் என்றும் அதை முறியடிக்க அமெரிக்காவின் உதவி தேவை என்றும் பாகிஸ்தான் தூதர் ஹுசைன் ஹக்கானி கேட்டுக் கொண்டதாக தகவல் வெளியானது.

இதையடுத்து எழுந்த நெருக்கடிகள் காரணமாக அவர் தூதர் பதவியை இராஜினாமா செய்தார். இந்த நிலையில் அரசுக்கு எந்தவிதமான அச்சுறுத்தலும் இல்லை என்று பிரதமர் தெரிவித்துள்ளது குறிப்பிடத்தக்கது. (அ-2)

# ஆஸ்துமா நோயாளர்களுக்கு புதிய கருவி கண்டுபிடிப்பு

காற்றில் பரவும் தூசு மற்றும் வளர்ப்பு பிராணிகளின் முடிகளால் ஏற்படும் ஒவ்வாமையில் ஆஸ்துமா நோயாளிகள் கடுமையாக அவதிப்படுகின்றனர். இன்கேலர், நெப்லைசர் போன்றவற்றை பயன்படுத்துகின்றனர். மூச்சுத்திணறல் அதிகரிக்கும் சமயங்களில் வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டு சிசிக்சை அளிக்கப்பட வேண்டியுள்ளது.

இவர்களுக்காக புதிய கருவியை லண்டன் வைத்தியர்கள் கண்டுபிடித்துள்ளனர். 6 ஐரோப்பிய நாடுகளில் இருந்து 7 வயது முதல் 70 வயது வரையிலான 282 ஆஸ்துமா நோயாளிகளிடம் இந்த கருவியை கொண்டு பரிசோதிக்கக்கப்பட்டது.

இந்தக் கருவியை ஆஸ்துமா நோயாளிகள் வைத்துக் கொண்டால் அவர்களை சுற்றியுள்ள காற்றை தூய்மையாக்கி அளிக்கின்றது. தூங்கும் போதும் பணிபுரியும் போதும் ஆஸ்துமா நோயாளிகளின் சுவாசத்தினுள் தூசி போன்ற ஒவ்வாமை பொருட்கள் நுழையாமல் இந்த கருவி தடுக்கின்றது. ஒரு ஆண்டு இந்த கருவியை பயன்படுத்த ரூ 2 இலட்சத்து 40 ஆயிரம் ரூபா செலவாகின்றது. (அ-2)

# வட,தென் கொரியா இடையே மோதல்; இரு கப்பல்கள் மூழ்கடிக்கப்பட்டன

(சியோல்)

எங்கள் கடல் எல்லைக்கு உட்பட்ட பகுதியில் ஒரு குண்டு வெடித்தால்கூட தென்கொரிய ஜனாதிபதி மாளிகையை தரைமட்டமாக்கி விடுவோம் என வடகொரியா எச்சரிக்கை விடுத்துள்ளது.

தென்கொரியாவுக்கும் வடகொரியாவுக்கும் இடையே பல ஆண்டுகளாக மோதல் இருந்து வருகிறது. கடந்தாண்டு நவம்பரில் யெயோன்பியோங் என்ற தீவில் வடகொரிய கடற்படை நடத்திய தாக்குதலில் தென்கொரிய கப்பல்கள் இரண்டு மூழ்கடிக்கப்பட்டன.

தென்கொரியாவைச் சேர்ந்த இரண்டு கட்டுமானத் தொழிலாளர்கள் உயிரிழந்தனர். இந்தச் சம்பவத்தை அடுத்து இருதரப்புக்கும் இடையேயான உறவு மேலும் மோசமடைந்தது. யெயோன்பியோங் தீவு சர்ச்சைக்குரிய பகுதியில் அமைந்திருப்பதாக கூறி இரு நாடுகளுமே அதற்கு உரிமை கொண்டாடி வருகின்றன.

இந்நிலையில் தாக்குதல் சம்பவத்தின் முதலாமாண்டு நினைவு தினத்தையொட்டி தென்கொரிய கடற்படையினர் யெயான்பியோங் தீவுப் பகுதியில் போர்ப் பயிற்சியில் ஈடுபட்டனர். போர்க்கப்பலில் இருந்து ஏவுகணைகள், ரொக்கெட் லாஞ்சர் ஆகியவற்றை ஏவி பயிற்சி மேற்கொண்டனர்.

இதற்கு வடகொரியா கடும் எதிர்ப்பு தெரிவித்துள்ளது.

வடகொரிய மக்கள் இராணுவத்தின் தலைமை கொமாண்டர் கூறுகையில், எங்கள் கடல் எல்லைக்கு உட்பட்ட பகுதியில் தென்கொரியா இராணுவத்தினரின் ஒரு குண்டாவது வந்து விழுமானால் அதை நாங்கள்பொறுத்துக் கொள்ள மாட்டோம். இதற்குப் பதிலடியாக தென்கொரியாவில் உள்ள ஜனாதிபதி மாளிகையை தரை மட்டமாக்குவோம். கடல் நெருப்பு என்ற பெயரில் எங்களின் தாக்குதல் மிகவும் தீவிரமாக இருக்கும் என்றார். இரு நாடுகளுக்கும் இடையே ஏற்பட் டுள்ள இந்த பிரச்சினையால் அந்த பகுதியில் போர் பதற்றம் ஏற்பட்டுள்ளது. (அ-2)

# லிபியாவிலிருந்து நாடு திரும்பிய இராணுவத்திற்கு பாராட்டு

லிபியாவிற்கு சுதந்திரம் பெற்றுத்தந்த பின்பு நாடு திரும்பிய கனடா வீரர்களுக்கு அரசு சார்பில் பாராட்டு விழா நடத்தப்பட்டது.

இந்த விழாவில் பிரதமர் ஸ்டீபன் ஹார்பர் தன் மனைவி லாரீன் ஹார்பருடன் கலந்து கொண்டார். கனடா பாதுகாப்புத்துறை அமைச்சர் பீட்டர் மெக்கே, வெளியுறவுத்துறை அமைச்சர் ஜான் பெயர்டு, லிபியாவுக்கான கனடா தூதுவர் சாண்ட்ரா மெக் கார்டெல் ஆகியோர் பாராட்டுரை நிகழ்த்தினர்.

லிபியாவின் வெற்றிக்குக் காரணமாய் இருந்து அங்கு சென்று திரும்பிய போர் விமானங்கள் வானத்தில் பறந்தன. இந்த விமான அணிவகுப்பு அங்கு வந்தவர்களை மகிழ்ச்சிக்கு உள்ளாக்கியது.

சிசி-17 குளோப்மாஸ்டர், சிசி-140 ஔரோரா, சிசி-130 ஜே ஹெர்குலிஸ், சிசி-130 ஹெர்குலிஸ் டேங்கர், சிசி-150 போலாரிஸ், ஏழு சிஎவ்-18 ஜெட் விமானங்கள் மற்றும் சிஎச்-124 கடலிரசு ஹெலிகொப்டர் ஆகியன இந்த விமான அணிவகுப்பில் கலந்து கொண்டன.

கடாபியின் இராணுவத்தை வீழ்த்த கனடா இராணுவம் முழு வேகத்துடன் போரிட்டது. இந்த இராணுவப்பணிக்கு தலைமை தாங்கிய லெப்டினட் கேணல் சார்லஸ் புச்சார்டுதான் மொத்த நேட்டோ படைகளையும் வழிநடத்தினார். இவருக்கு இவ்விழாவில் மெரிடோரியஸ் ஸெர்விஸ் கராஸ் என்ற விருது வழங்கி கௌரவித்தார். (அ-2)

நியாயம் இன்னதென்று அறிந்தும் அதை நீ செய்யாதிருப்பது கோழைத்தனமாகும்.

-கோன்பு தஸன்

வலம்புரி
T.P. 021 567 1530
Web: www.valampurii.com
e-mail: editor@valampurii.com

# செய் (து) வினையும் செயற்பாட்டு வினையும்

இலக்கணம் என்பது மொழிகளுக்கான சாந்து. சீமெந்துக் கட்டுமானத்தில் கற்களை இணைப்பதற்கு சாந்து எந்தளவு தூரம் பயன்படுகின்றதோ அதுபோன்று மொழி எனும் கட்டுமானத்தில் சொற்களை இணைக்கின்ற சாந்தாக இலக்கணம் அமைகின்றன.

எனவே, இலக்கணத்தை வழுவறாது கற்கும் போதே மொழியும் மொழிதலும் சிறப்பு பெறுகின்றன.

அவ்வகையில் தமிழ்மொழியில் செய்வினை, செயற்பாட்டுவினை என்ற இலக்கணப்பதங்கள் முக்கியமானவை.

மொழியில் செய்வினை, செயற்பாட்டுவினை போல எங்கள் வாழ்விலும் செய் (து) வினையும் செயற்பாட்டுவினையும் முக்கியத்துவமானவை.

செய்வினை என்று நாம் கூறுவது, முன்பு நாம் செய்தவினையையே. செயற்பாட்டு வினை என்பது எங்கள் செயலால் ஏற்படுவது.

உதாரணமாக வன்னிப் போரின்போது பொது மக்கள் வாழும் இடங்களில் குண்டுகளைப் போடுங்கள் என்று உத்தரவிட்டால் அது செயற்பாட்டுவினை.

இங்கு குண்டுகளை போட்டவரும் போடச் சொன்னவரும் செயற்பாட்டு வினைக்கு உட்பட்டவர்கள். செயற்பாட்டுவினை செய்தவரையும் செய்யவைத்தவரையும் நிம்மதியாக இருக்க விடாது.

சிலவேளைகளில் செய்யவைத்தவர் செய்தவரை தண்டிக்கும் சூழ்நிலையையும் ஏற்படுத்தும்.

செய்தவர் தண்டனையை அனுபவிக்கும் போது, அவர் செய்யவைத்தவரைத் தூற்றுவார். பகிரங்கப்படுத்துவார். இதுதான் சேர்ந்திருந்து வினைவிதைத்த இருவரையுமே அறுத்துக் கொட்டும்.

ஜப்பான் மீது அணுகுண்டுகளை வீசியவர் நீண்டகாலம் நினைவற்ற நிலையிலிருந்து உயிர் துறந்தார்.

மிகப்பெரும் கொடூரத்தை செய்யவேண்டியதாயிற்றே. மனிதர்களைப் படுகொலை செய்யும் பாவச்செயலை செய்துவிட்டேனே என்று அவருள் எழுந்த குற்ற உணர்வு ஐம்புலன்களின் செயற்பாடுகளையும் ஒடுக்கி இறுக்கிவிட, அவர் நினைவிழக்கும் நிலைக்குத் தள்ளப்பட்டார்.

இதைநாம் எழுதும்போது வன்னிப்போரில் அப்பாவித் தமிழ் மக்கள் படையினரால் கொல்லப்பட்டுள்ளனர் என்பதைக் கூறும் அளவுக்கு பாதுகாப்பு செயலரின் நிலைமை உள்ளது.

அட கடவுளே! பாதுகாப்புச் செயலர் இப்போது கூறுவதை வன்னியில் கடமையாற்றிய சில மருத்துவர்கள் அப்போது கூறியிருந்தனர். அதற்காக அவர்கள்பட்ட வேதனை போதுமென்றாயிற்று.

அந்த மருத்துவர்கள் உண்மை கூறிய வேளை, ‘இருக்கலாம்’ என்று ஒருவார்த்தையை அரசு முன்மொழிந்திருந்தால், சர்வதேச அழுத்தம் அத்தனையும் இலங்கைக்கு உதவிப் பொருளாகக் கொட்டியிருக்கும்.

என்ன செய்வது செயற்பாட்டு வினை விடாதாம். எங்குபோய் முடியும் என்பதை பொறுத்திருந்து பார்ப்போம்.

# முள்ளிவாய்க்கால் கிழக்கு மக்கள் கோம்பாவிலில் குடியேற்றம்

(முல்லைத்தீவு)

வவுனியா மெனிக்பாம் நலன்புரி நிலையத்தில் வலயம்-1, வலயம்-2 ஆகியவற்றில்தங்கியுள்ள இடம்பெயர்ந்த மக்களில் தெரிவு செய்யப்பட்ட 72 குடும்பங்கள் முல்லைத்தீவு மாவட்டத்தின் கோம்பாவில் பகுதியில் முதல்கட்டமாக நேற்று வெள்ளிக்கிழமை குடியேற்றப்பட்டுள்ளனர்.

முல்லைத்தீவு மாவட்டத்தின் கரைத்துறைப்பற்று பிரதேச செயலாளர் பிரிவில் முள்ளிவாய்க்கால் கிழக்கு கிராம அலுவலர் பிரிவைச்சேர்ந்த மக்களே கோம்பாவில் பகுதியில் நிர்மாணிக்கப்பட்ட இடைத்தங்கல் நலன்புரி நிலையத்தில் குடியேற்றப்பட்டுள்ளதாக அரசாங்க அதிபர் என்.வேதநாயகம் நேற்றுத் தெரிவித்தார்.

5 பஸ்களில் நேற்று முன்தினம் வியாழக்கிழமை அழைத்துவரப்பட்ட 72 குடும்பங்களைச்சேர்ந்த 229 உறுப்பினர்கள் புதுக்குடியிருப்பு பிரதேச செயலாளர் பிரிவில் உள்ள கைவேலி கணேசா வித்தியாலயத்தில் தங்க வைக்கப்பட்டு அவர்களுக்கான பதிவு நட்வடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டதாகவும் அவர் கூறினார்.

கோம்பாவில் பகுதியில் நிர்மாணிக்கப்பட்ட இடைத்தங்கல் நலன்புரிநிலையத்தில் இவர்களுக்கான தங்கும் இட வசதிகள், மலசல கூட வசதிகள் உள்ளிட்ட வசதிகள் ஏற்படுத்திக் கொடுக்கப்பட்டுள்ளன.

இவர்களுக்கு மூன்று நாட்களுக்கு சமைத்த உணவு வழங்கப்படுவதுடன் உணவுப் பொதிகளும் வழங்கப்படும் எனவும் முல்லைத்தீவு மாவட்ட அரசாங்க அதிபர் குறிப்பிட்டார்.

முல்லைத்தீவு மாவட்டத்தின் கரைத்துறைப்பற்று பிரதேச செயலாளர் பிரிவில் முள்ளிவாய்க்கால் கிழக்கு கிராம அலுவலர் பிரிவு உள்ளிட்ட சில பகுதிகளில் புதைக்கப்பட்ட கண்ணிவெடிகள் அகற்றும் நடவடிக்கைகளில் தாமதம் ஏற்பட்டுள்ளன. இந்த நிலையிலேயே அப்பகுதிகளைச் சேர்ந்த மக்களை கோம்பாவில் இடைத்தங்கல் முகாமில் தங்கவைப்பதற்கான நடவடிக்கைகள் முன்னெடுக்கப்பட்டுள்ளன.

இதேவேளை மெனிக்பாம் நலன்புரி நிலையத்தில் இடம்பெயர்ந்த நிலையில் தங்கியுள்ள புதுக்குடியிருப்பு மேற்கில் உள்ள முற்கோணப்பிரதேசத்தைச் சேர்ந்த மக்கள் நாளை மீள்குடியேற்றப்படவுள்ளனர். (எ-5)

## கலந்துரையாடல்

(யாழ்ப்பாணம்)

யாழ்.மாநகரசபையால் நடத்தப்படும் ஜே/78 கிராமசேவையாளர் பிரிவின் மக்கள் பங்கேற்புடனான கிராம அபிவிருத்தி திட்டமிடல் கூட்டம் இன்று சனிக்கிழமை பிற்பகல் 3 மணிக்கு அத்தியடி கனகசபை கலாசார மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

எனவே இக் கூட்டத்தில் பங்கு பற்றி தங்கள் பிரிவின் கிராம அபிவிருத்திக்கான ஒத்துழைப்பினை வழங்குமாறு யாழ். மாநகரசபை முதல்வர் திருமதி யோ.பற்குணராஜா அறிவித்துள்ளார். (ச)

# பாக். யுத்தக் கப்பல் இலங்கைக்கு வருகிறது

(கொழும்பு)

பாகிஸ்தான் கடற்படைக்குச் சொந்தமான சைப் (SAIF) என்னும் யுத்தக் கப்பல் இலங்கைக்கான நல்லெண்ண விஜயமொன்றை மேற்கொள்ளவுள்ளது,

பாகிஸ்தான் கடற்படையின் முன்னணி பாதுகாப்பு அரணாக பயன்படும் குறித்த கப்பல் இன்று இலங்கைக்கு வருகைதரவுள்ளது. இக்கப்பல் எதிர்வரும் 29ஆம் திகதிவரை இலங்கையில் தரித்திருக்கும் என பாகிஸ்தான் உயர் ஸ்தானிகராலயத்தினால் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இருநாட்டு கடற்படை வீரர்களும் தங்களது அனுபவங்களை பகிர்ந்து கொள்வதுடன் யுத்ததந்திரங்கள் பற்றியும் கலந்துரையாடவுள்ளதாக அறிவிக்கப்பட்டிருக்கின்றது.

சீனாவின் தயாரிப்பில் உருவாகிய சைப் கப்பலை கடந்த வருடம் பாகிஸ்தான் கடற்படை கொள்வனவு செய்திருந்தது. இக்கப்பலில் பல்வேறுபட்ட நவீன யுத்த உபகரணங்கள் பொருத்தப்பட்டுள்ளன.

இலங்கைக்கான நல்லெண்ண விஜயத்தினை முடித்துக்கொண்டு சைப் யுத்தக்கப்பல் மாலைதீவுக்கும் மலேசியாவுக்கும் விஜயம் மேற்கொள்ளவுள்ளமை குறிப்பிடத்தக்கது. (எ-1)

# புகலிடக் கோரிக்கையாளரின் விதிமுறைகளில் மாற்றம்

## அவுஸ். அரசு தெரிவிப்பு

(கொழும்பு)

படகு மூலம் அவுஸ்திரேலியாவுக்கு புகலிடம் கோரி வருவோரை, விமான மூலம் வருவோரைப் போன்று நடத்த அவுஸ்திரேலிய அரசாங்கம் தீர்மானித்துள்ளது.

இந் நடைமுறை அடுத்த வருடத்திலிருந்து நடைமுறைப்படுத்தப்படவுள்ளது. இதற்கமைய படகுகள் மூலம் வந்து அடைக்கலம் கோருவோர் அகதிகள் மீள்பார்வை மன்றத்திற்கு விண்ணப்பிக்க முடியும். முன்பு விமானம் மூலம் வந்து அடைக்கலம் கோருவோருக்கு மட்டுமே இந்த வசதி வழங்கப்பட்டது.

மேலும் ஏற்கெனவே படகு மூலம் வந்த 27 புகலிடம்கோருவோர் பிறிட்ஜிங் விசா வழங்கப்பட்டு அவுஸ்திரேலியாவில் தங்க அனுமதிக்கப்பட்டுள்ளனர் என குடிவரவு அமைச்சர் கிறிஸ் போவன் கூறினார்.

முன்னர் படகு மூலம் வருவோர் கப்பலிலேயே தடுத்து வைக்கப்படுவது கட்டாயமாக்கப்பட்டிருந்தது. பிறிட்ஜிங் விசா கப்பல் மூலம் வந்தவர்களுக்கு வழங்கப்படுவது இதுவே முதல் தடவையாகும்.

இந்தப் படகில் வந்தோர் சகலரும் தனியாகவே வந்திருந்தனர். இவர்களில் பெரும்பான்மையினர் இலங்கையர் அல்லது ஆப்கான் நாட்டவராக இருந்தனர்.

புகலிடம் கோரிவருவோரில் சமூகத்திற்கு ஆபத்தானவராக கணிக்கப்படுகின்றவர்கள் தொடர்ந்தும் தடுத்து வைக்கப்படுவரென அமைச்சர் கிறிஸ் போவின் கூறினார். இதுவரைபடகுமூலம் வந்தவர்கள் வித்தியாசமான விதிகளின் கீழ் விசாரிக்கப்பட்டு வந்தனர். (எ-1)

## பரிசளிப்பு விழா

வடமாகாணத்திலுள்ள 12 கல்வி வலயங்களில் மாகாண மட்டப் போட்டிகளில் பங்குபற்றி வெற்றியீட்டிய மாணவர்களிற்கான பரிசளிப்பு விழா இன்று சனிக்கிழமை காலை 8.30 மணிக்கு யாழ். கொக்குவில் இந்துக் கல்லூரியில் நடைபெறவுள்ளது. இப் பரிசளிப்பு நிகழ்வில் துணுக்காய் கல்வி வலயத்தில் நடைபெற்ற மாகாண மட்டப் போட்டிகளில் பங்குபற்றி வெற்றியீட்டிய மாணவர்களுக்கும் பரிசில்கள் வழங்கப்படவுள்ளன என துணுக்காய் வலயக் கல்விப் பணிப்பாளர் த. மேகநாதன் அறிவித்துள்ளார். (அ)

# சுவாமி விவேகானந்தரின் சிந்தனைத்துளிகள்

## இறைவனை மட்டுமே சார்ந்திரு



மனிதத்துணை அனைத்தையும் விட இறைவன் எல்லையற்ற பெருமையை உடையவனாகின்றான்.இறைவனிடம் நம்பிக்கைகொள். அவரையே எப்போதும் சார்ந்திரு.அப்போது நன்னெறியில் செல்வாய். எதனாலும் உன்னை வெல்லமுடியாது.

இறைவனது தொண்டர்களுக்குத் தொண்டு செய்பவர்கள் அவரது உத்தமத் தொண்டர்கள் என்று சாஸ்திரங்கள் கூறுகின்றன.

பொருளாதார மதிப்பு இருக்கின்ற மதமே வெற்றி பெறும் ஆயிரக்கணக்கான ஒரேவித மதப்பிரிவுகள் ஆதிக்கத்திற்கு பாடுபடலாம்.ஆனால்,பொருளாதாரப் பிரச்சனையைத் தீர்ப்பவர்களே ஆதிக்கத்தைப் பெறுகின்றனர்.

ஒரு இலட்சிய மதத்தின் நோக்கம் இவ்வுலக வாழ்விற்கும் உதவ வேண்டும்.மறுஉலகத்திற்கும் வழிகாட்ட வேண்டும்.அதே வேளையில் இறப்பையும் ஏற்க அது ஒருவனை ஆயத்தம் செய்யவும் வேண்டும்.

மதத்தைப்பற்றிக்கொண்டு சண்டையில் இறங்காதே,மதச்சண்டைகளும் வாதங்களும் அறிவின்மையின் அறிகுறி.தூய்மையும் அறிவும் வெளியேறி இதயம் வறளும் போது தான் சண்டைகள் தொடங்கும்.அதற்கு முன்னால் அல்ல.

# ஆயுள்வேத வைத்தியர்கள் ஆங்கில மருந்துகள் வழங்குவதை நிறுத்தவேண்டும்

## சுதேச வைத்தியசாலை பணிப்பாளர் அறிவிப்பு

ஆயுள்வேத வைத்தியர்கள் ஆங்கில மருந்து வகைகளை நோயாளர்களுக்கு வழங்குவதை தடுத்து நிறுத்துவதற்கு சமூக விழிப்புணர்வு ஏற்படுத்தப்பட வேண்டும். அவ்வைத்தியர்கள் தொடர்பான விபரங்களை சுதேச வைத்தியத் திணைக்களத்துக்கு அறியத்தருமாறு வடமாகாண சுதேசவைத்தியத் திணைக்கள பணிப்பாளர் அறிவித்துள்ளார்.

சுதேச வைத்தியர்கள் ஆங்கில மருந்து வகைகளை வழங்கி வைத்தியம் செய்வது தொடர்பாக வடமாகாண சுதேசவைத்திய திணைக்கள பணிப்பாளர் மேலும் தகவல் தெரிவிக்கையில்,

வடமாகாணத்தில் யாழ். மாவட்டத்தில் ஆயுள்வேதம் உட்பட சுதேச வைத்தியத்துறையை கற்றுத்தேர்ச்சி அடைந்த வைத்தியர்கள் நோயாளர்களுக்கு ஆங்கில மருந்து வகைகளை வழங்கி வைத்தியம் செய்யும் துர்ப்பாக்கிய நிலை காணப்படுகின்றது.

சுதேச வைத்தியர்கள் ஆங்கில மருந்துகளை பயன்படுத்துவது சட்டவிரோதம், தண்டனைக்குரிய குற்றமாகும்.

இத்தகைய சமூகவிரோதச் செயல்களில் ஈடுபடுபவர்களை பொதுமக்களும் சமூக நிறுவனங்களும் இனம்கண்டுகொள்ளவேண்டும். இவர்களின் செயல்முறை தொடர்பாகவும் இத்தகைய வைத்தியர்களை இனங்கண்டு கொள்வது தொடர்பாகவும் சமூக நிறுவனங்கள், பொதுசன அமைப்புக்கள் விழிப்புடன் செயற்பட வேண்டும்.

ஆயுள்வேதம் உள்ளிட்ட சுதேச வைத்தியத் துறையில் சக்திமிக்க மருந்து வகைகள் உள்ளன. அவற்றை உரிய முறையில் பயன்படுத்துவதன்மூலம் மூலிகைகளின் பெருமையை உணர்ந்து கொள்வதுடன் உடல் ஆரோக்கியத்தையும் பேணிக் கொள்ள முடியும்.

கற்றல் துறைசார் நிலையிலேயே தொழில் செய்ய வேண்டும். ஆங்கில மருந்து வழங்குவது கற்றல் துறைக்கும் தொழிலுக்கும் சம்பந்தம் இல்லாதது. இதனால் பொதுமக்களுக்கு பெரும் பாதிப்பு ஏற்படுவதுடன் உயிரிழப்பும் ஏற்படலாம்.

இந்த வகையில் புத்தூர் பகுதியில் 13 வயது மாணவி ஒருவர் உயிரிழந்ததாக கூறப்படுகின்றது. இது தொடர்பாக விசாரணைகள் நடைபெற்று வருகின்றன.

சுதேச வைத்தியர்கள் ஆங்கில மருந்து வகைகளை வழங்கி வைத்தியம் பெறுவதை சமூகம் ஏற்றுக் கொள்கின்ற துர்ப்பாக்கிய நிலை யாழ்.மாவட்டத்தில் பெருமளவில் காணப்படுகின்றது. இதனை சமூகம் ஏற்றுக் கொள்ளக்கூடாது.

நோயாளர்களின் உரிமைகள் பாதுகாக்கப்பட வேண்டும். நோயாளர்களும் சமூகமும் தங்களுக்கு வைத்தியம் செய்பவர்களின் தரம் என்ன? அவர்கள் பயன்படுத்தும் மருந்து வகைகள் எவை என்பது தொடர்பாக தெளிவாக தெரிந்து கொள்ள வேண்டும். (அ-2)

## வருடாந்த கலைவிழா

யாழ்.பாலர் கல்விக்கழக நிர்வாகத்தில் இயங்கும் 14 பாலர் பாடசாலைகள் இணைந்து நடத்தும் 45வது வருடாந்தக் கலைவிழா இன்று சனிக்கிழமை காலை 9 மணிக்கு இராமநாதன் வீதியில் அமைந்துள்ள சரஸ்வதி மண்டபத்தில் இடம்பெறவுள்ளது. கழகத்தலைவர் எஸ்.பி காசிநாதன் தலைமையில் இடம்பெறவுள்ள இந்நிகழ்வில் பிரதம விருந்தினராக யாழ்.வலய இளைப்பாறிய கல்விப் பணிப்பாளர் திருமதி அருளேஸ்வரி வேதநாயகமும் சிறப்பு விருந்தினராக யாழ்.வலய தமிழ்ப்பாட ஆசிரிய ஆலோசகர் திருமதி முகுந்தன் ஆகியோர் கலந்து சிறப்பிக்கவுள்ளனர். (அ-9)

# கஞ்சா வைத்திருந்த குற்றச்சாட்டின் பேரில் ஒருவருக்கு விளக்கமறியல்

(கிளிநொச்சி)

அனுமதிப்பத்திரம் இன்றி 2 கிராம் கஞ்சா வைத்திருந்த குற்றச்சாட்டின் பேரில் நபரொருவர் விலைக்கட்டுப்பாட்டு சபையால் கைது செய்யப்பட்டு நேற்றைய தினம் கிளிநொச்சி நீதி வான் நீதிமன்றில் ஆஜர்படுத்தப்பட்டார்.

வழக்கை விசாரித்த கிளிநொச்சி நீதிவான் நீதிமன்ற நீதிபதி பெ.சிவகுமார் குறித்த நபரை எதிர்வரும் டிசெம்பர் மாதம் 9 ஆம் திகதி வரை விளக்கமறியலில் வைக்குமாறு உத்தரவிட்டார். (அ-3)

# வடமாகாணத்தில் சமுதாய சீர்திருத்தப்பிரிவு ஆரம்பம்

(கொழும்பு)

வடமாகாணத்தில் முதன் முறையாக சமுதாய சீர்திருத்தப் பிரிவின் உத்தியோகபூர்வ பணிகள் சாவகச்சேரி நீதிவான் நீதிமன்றில் எதிர்வரும் டிசெம்பர் மாதம் முதல் ஆரம்பமாகவுள்ளன.

சாவகச்சேரி நீதிவான் நீதிமன்றின் ஓர் அங்கமாக சமுதாய சீர்திருத்தப் பிரிவு உதயமாவதன் மூலம் நீதிமன்றினால் சிறு குற்றங்களுக்காக தண்டம் விதிக்கப்பட்டு தண்டப்பணம் செலுத்த பணபலம் அற்றவர்கள் தங்கள் தண்டப்பணத்திற்கு சமமாக உடல் ரீதியான உழைப்பினை வழங்குவதன் மூலம் விடுதலையாவர்.

இதன் மூலம் தண்டப்பணம் செலுத்தத்தவறுபவர்கள் சிறைச்சாலை செல்வது தடுக்கப்படுகின்றமை ஓர் சிறப்பம்சமாகும்.

சாவகச்சேரி மாவட்ட நீதிபதி மாணிக்கவாசகர் கணேசராசாவின் அயராத முயற்சியினால் இப் பிரிவு சாவகச்சேரி நீதிவான் நீதிமன்றில் ஆரம்பிக்கப்படுவது குறிப்பிடத்தக்கதாகும்.

அத்துடன் சட்ட உதவி ஆணைக்குழு, சமுதாய சீர்திருத்தப்பிரிவு ஆகியன நீதிபதி மா.கணேசராசாவினால் ஆரம்பித்து வைக்கப்படுகின்றமை குறிப்பிடத்தக்கது. (அ-2)

# பல்கலையில் பொலிஸ்காவலரண் திட்டத்தை கைவிடவேண்டும்

## அல்லது போராட்டம் என்கிறது ஐ.தே.க

(கொழும்பு)

பல்கலைக்கழகங்களில் பொலிஸ் காவலரண்கள் அமைக்கும் திட்டத்தை உயர்கல்வி அமைச்சு கைவிடவேண்டும். இல்லாவிட்டால் நாட்டில் மாணவர்கள் போராட்டம் வெடிக்கும் என ஐக்கிய தேசியக் கட்சி எம்.பி ருவன் விஜேவர்த்தன தெரிவித்துள்ளார்.

நாட்டுக்குள் ஜனநாயகம் இல்லை. அதே போன்று பல்கலைக்கழகத்துக்குள்ளும் சுதந்திரமாக கல்வி கற்கும் நிலைமையை இல்லாதொழித்து மாணவர்களை அடக்குமுறைக்கு உள்ளாக்க அரசாங்கம் முயற்சிகளை மேற்கொண்டு வருகிறது. இது தொடருமானால் சிரியா, எகிப்து போன்ற நாடுகளைப் போல மாணவர்கள் வீதியில் இறங்குவார்கள் என்றும் அவர் தெரிவித்தார்.

எதிர்க்கட்சித் தலைவர் அலுவலகத்தில் நேற்று இடம்பெற்ற ஐக்கியதேசியக் கட்சியின் பல்கலைக்கழக மாணவர் முன்னணியின் ஊடகவியலாளர் மாநாட்டில் உரையாற்றும் போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார். (அ-2)

# வரவு செலவுத்திட்டம் குறித்த வாதப்பிரதிவாதங்கள்

(கொழும்பு)

வரவு செலவுத்திட்டத்தின் இரண்டாம் வாசிப்பு மீதான விவாதத்தின் மூன்றாம் நாளான நேற்று முன்தினம் ஐக்கிய தேசியக் கட்சியின் பாராளுமன்ற உறுப்பினர் லக்ஸ்மன் கிரியெல்ல விவாதத்தை ஆரம்பித்து வைத்தார்.

முதலீடுகளை ஈர்த்தெடுப்பதற்கான திட்டங்கள் எதுவும் அரசாங்கத்திடம் இல்லையென கிரியெல்ல இதன்போது தெரிவித்தார்.

இந்தக் கருத்துக்களுக்கு பதிலளித்த அமைச்சர் மைத்திரிபால சிறிசேன அமைச்சர்கள் கூட வியக்கும் அளவில் இம்முறை வரவு செலவுத்திட்டத்தின் மூலம் மக்களுக்கு நிவாரணம் வழங்கப்பட்டுள்ளதாகக் குறிப்பிட்டார்.

ஐக்கிய தேசியக் கட்சியின் பிரதித் தலைவர் கருஜயசூரியவும் வரவு செலவுத்திட்டத்தின் இரண்டாம் வாசிப்பு மீதான விவாதத்தில் கலந்து கொண்டு கருத்து வெளியிட்டார்.

இலங்கையில் ஜனநாயகம் ஸ்தாபிக்கப்படுமாயின் சர்வதேச ரீதியல் நற்பெயரை வெற்றி கொள்ள சந்தர்ப்பம் கிடைக்குமென அவர் குறிப்பிட்டார்.

ஆளும் கட்சியின் பிரதம கொறடா அமைச்சர் தினேஸ் குணவர்தன உரையாற்றுகையில், நாட்டில் அனைத்து இன மக்களுக்கும் இம்முறை வரவு செலவுத்திட்டத்தின் மூலம் நிவாரணம் கிடைத்துள்ளதாக தெரிவித்தார்.

இதேவேளை, ஐக்கிய தேசியக்கட்சியின் பாராளுமன்ற உறுப்பினர் கலாநிதி ஹர்ஷ டி சில்வா சபையில் கருத்து வெளியிட்டமையினால் சபையில் கடும் வாதப்பிரதிவாதங்கள் ஏற்பட்டன.

வரவு செலவுத்திட்டம் சமர்ப்பிக்கப்பட்டதை அடுத்த பங்குச் சந்தையில் வீழ்ச்சி ஏற்பட்டுள்ளதாக பாராளுமன்ற உறுப்பினர் குற்றம் சுமத்தியமையே இதற்கான காரணமாகும்.

இதேவேளை, இலங்கை இராணுவத்தலைமையகத்தை மீள் நிர்மாணம் செய்வதற்காக மதிப்பீடு செய்யப்பட்டுள்ள நிதி தொடர்பாக ஐக்கிய தேசியக்கட்சி பாராளுமன்ற உறுப்பினர் தயாசிறி ஜயசேகர கேள்வி எழுப்பினார்.

இந்த வாய்மூல கேள்விக்கு பதிலளித்த அமைச்சர் தினேஸ் குணவர்தன இராணுவத் தலைமையகத்தை மீள் நிர்மாணம் செய்வதற்கு 35 பில்லியன் ரூபா செலவாகும் என மதிப்பீடு செய்யப்பட்டுள்ளதாக குறிப்பிட்டார்.

இராணுவம், கடற்படை மற்றும் விமான படையில் கடமையாற்றுவோரில் மூன்று பிள்ளைகள் இருக்கும் குடும்பங்களுக்காக கடந்த வரவு செலவுத்திட்டத்தின் மூலம் பயனடைந்தோரின் எண்ணிக்கை தொடர்பாக ஐக்கிய தேசியக் கட்சி பாராளுமன்ற உறுப்பினர் ரவி கருணாநாயக்க கேள்வி எழுப்பினார். (அ-2)

# பன்றிகளைப் போல இராணுவத்தையும் அடைத்து வைத்திருக்க முடியாது

## ஆளும்கட்சியின் பிரதம கொறடா பதில்

பன்றிகளை கூடுகளில் அடைத்து வைத்திருப்பதைபோல இராணுவத்தினரை அடைத்து வைத்திருக்க முடியாது என்று தெரிவித்த ஆளும் கட்சியின் பிரதம கொறடாவும் அமைச்சருமான தினேஷ் குணவர்த்தன பத்தரமுல்லையில் நிர்மாணிக்கப்படவிருக்கின்ற இராணுவ தலைமையகத்திற்கு 350 கோடி ரூபா ஒதுக்கப்பட்டுள்ளது என்றார்.

பாராளுமன்றத்தில் நேற்று வியாழக்கிழமை வாய்மூல விடைக்கான வினாக்கள் நேரத்தின்போது ஐ.தே.க.எம்.பி.யான தயாசிறி ஜயசேகர கேட்ட கேள்விக்கு பதிலளிக்கும் போது அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அவர் தொடர்ந்தும் உரையாற்றுகையில், காலிமுகத்திடலில் அமைந்துள்ள இராணுவத் தலைமையகத்தை அகற்றிவிட்டு மீண்டும் நிர்மாணிப்பதற்கு உத்தேசிக்கப்பட்டுள்ள இடம், செலவு விபரங்கள் தொடர்பான கேள்விகளை ஐ.தே.க. எம்.பி.யான தயாசிறி ஜயசேகர கேட்டிருந்தார்.

கேள்விகளுக்கு பதிலளித்த அமைச்சர் இராணுவ தலைமையகம் பத்தரமுல்லை, அக்குரகொட என்னுமிடத்தில் அமைக்கப்பட்டு வருகின்றது. அதற்கென 350 கோடி ரூபா ஒதுக்கப்பட்டுள்ளது. நிர்மாணப் பணிகள் துரிதப்படுத்தப்பட்டுள்ளன. அப்பணிகள் எப்போது நிறைவுபெறும் என்று கூற முடியாது.

குறுக்கிட்ட தயாசிறி எம்.பி. இராணுவத்துக்கு சொந்தமான காணியை அரசாங்கம் விற்று வருகின்றது. இராணுவத்தினரின் பாண்ட் பிரிவினர் தமது இராணுவ முகாம்களில் இடவசதி இல்லை என்று தெரிவிக்கின்றனர். இராணுவத்தினரை பன்றிகளை கூடுகளில் அடைத்து வைப்பதைப் போல அடைத்து வைக்காது இட வசதிகளை அரசாங்கம் ஏற்படுத்திக் கொடுக்கலாமே என்றார்.

இதற்கு பதிலளித்த அமைச்சர் தினேஷ் குணவர்த்தன, இராணுவத்தினருக்கு சகல வசதிகளையும் ஏற்படுத்திக் கொடுப்பதற்கு அரசாங்கம் நடவடிக்கைகளை மேற்கொண்டு வருகின்றது. அவர்களை பன்றிக்கூடுகளில் அடைத்து வைத்திருப்பதை போல அடைத்து வைத்திருப்பதற்கு அரசாங்கம் தயாரில்லை என்றார். (அ-2)

# அஸ்வின் சதம் ; இந்தியா கௌரவம்;

# 94 ஓட்டங்களுடன் சச்சின் 'அவுட்'

(மும்பை)

அஸ்வினின் அதிரடி சதத்தின் மூலம் இந்திய அணி முதலாவது இன்னிங்ஸில் சகல விக்கெட்டுக்களையுமிழந்து 482 ஓட்டங்களை எடுத்தது.



மகிழ்ச்சியில் அஷ்வின்

இப்போட்டியில் சர்வதேச கிரிக்கெட் அரங்கில் டெண் டுல்கர் நூறாவது சதம் அடிப்பார் என எதிர்பார்த்திருந்த இரசிகர்களுக்கு அவர் 94 ஓட்டங்களுடன் ஆட்டமிழந்து ஏமாற்றமளித்தார்.

இந்தியாவுக்கு சுற்றுப்பயணம் மேற் கொண்டுள்ள மேற்கிந்தியத்தீவுகள் அணி 3போட்டிகள் கொண்ட டெஸ்ட் தொடரில் விளையாடி வருகிறது.

இதில் முதலிரண்டு டெஸ்ட் போட்டிகளில் வெற்றி பெற்ற இந்திய அணி தொடரை 2:0 என்ற கணக்கில் தனதாக்கியது. இந்நிலையில் மூன்றாவதும் இறுதியுமான டெஸ்ட் கடந்த 22 ஆம் திகதி மும்பையில் ஆரம்பமானது.

இப்போட்டியில் நாணயச் சுழற்சியில் வெற்றி பெற்று முதலில் துடுப்பெடுத்தாடிய மேற்கிந்தியத் தீவுகள் அணி முதலாவது இன்னிங்ஸில் சகல விக்கெட்டுக்களையுமிழந்து 590 ஓட்டங்களை எடுத்தது.

தொடர்ந்து துடுப்பெடுத்தாடிய இந்திய அணி நேற்று முன்தினம் மூன்றாம் நாள் ஆட்டநேர முடிவில் அதன் முதலாவது இன்னிங்ஸில் 3 விக்கெட்டுக்களை இழந்து 281 ஓட்டங்களை எடுத்தது.

இந்நிலையில் நான்காம் நாளான நேற்று தொடர்ந்து துடுப்பெடுத்தாடிய இந்திய அணிக்கு வி.வி.எஸ்.லக்ஸ்மன் 32 ஓட்டங்களுடன் ஆட்டழந்து ஏமாற்றமளித்தார்.

அடுத்து ஹோலி களமிறங்க மறுமுனையில் கிரிக்கெட் அரங்கில் நூறாவது சதமடிப்பார் என எதிர்பார்த்த சச்சின் டெண்டல்கர் 153 பந்துகளில் (8 பவுண்டரிகள், 2 சிக்ஸர்கள் உட்பட) 94 ஓட்டங்களை எடுத்து ராம் போலின் பந்தில் சமியிடம் பிடி கொடுத்து ஆட்டமிழந்தார்.

இதன் மூலம் 6 ஓட்டங்களால் நூறாவது சதம் அடித்து சொந்த மண்ணில் சாதனை படைக்கும் வாய்ப்பை சச்சின் டெண்டுல்கர் இழந்ததுடன் இரசிகர்களையும் ஏமாற்றினார்.

அடுத்து வந்த தோனி 8 ஓட்டங்களுடன் வெளியேற இந்திய அணி 331 ஓட்டங்களுக்கு 6 விக்கெட்டுக்களை இழந்து திணறியது.

எனினும் ஹோலியுடன் இணைந்த அஸ்வின் அதிரடியாக ஆடி நம்பிக்கை அளித்தார். இதில் அஸ்வின் தனது முதலாவது அரைச் சதத்தை பூர்த்தி செய்ய இந்திய அணி 400 ஓட்டங்களை தொட்டது.

மறுமுனையில் விராட் ஹோலியும் தனது முதலாவது டெஸ்ட் அரைச்சதத்தை பூர்த்தி செய்தார்.

எனினும் விராட் ஹோலி 52 ஓட்டங்களுடன் ஆட்டமிழந்தார். இதைத் தொடர்ந்து களமிறங்கிய இஷாந்த் சர்மா 5, ஆரோன் 4 ஓட்டங்களுடனும் வெளியேறினர்.

எனினும் அதிரடியைத் தொடர்ந்த ரவிச்சந்திரன் அஸ்வின் 117 பந்துகளில் டெஸ்ட் அரங்கில் தான் விளையாடிய மூன்றாவது போட்டியில் கன்னி சதத்தை பூர்த்தி செய்து அசத்தினார்.

எனினும் அஸ்வின் 118 பந்துகளில்(15 பவுண்டரிகள், 2 சிக்ஸ்சர்கள் உட்பட) 103 ஓட்டங்களுடன் ஆட்டமிழந்தார்.

இந்நிலையில் இந்திய அணி முதலாவது இன்னிங்ஸில் சகல விக்கெட்டுக்களையுமிழந்து 482 ஓட்டங்களை எடுத்தது.

பந்துவீச்சில் மேற்கிந்தியத் தீவுகள் அணி சார்பாக ராம்போல், சாமுவேல்ஸ் தலா 3 விக்கெட்டுக்களையும் சமி 2 விக்கெட்டுக்களையும் பிஷோ ஒரு விக்கெட்டையும் வீழ்த்தினர்.

தொடர்ந்து முதலாவது இன்னிங்ஸில் 108 ஓட்டங்களால் முன்னிலை பெற்ற மேற்கிந்தியத்தீவுகள் அணி இரண்டாவது இன்னிங்ஸில் துடுப்பெடுத்தாடி நேற்று நான்காம்நாள் ஆட்டநேர முடிவில் 2 விக்கெட்டுக்களையிழந்து 81 ஓட்டங்களை எடுத்தது. இதில் பராத் வைற் 34, பிரவோ 27 ஓட்டங்களை எடுத்து ஆட்டமிழக்காமல் களத்திலுள்ளனர்.

பந்து வீச்சில்பிரக்ஜன் ஓஜா 2விக்கெட்டுக்களை சாய்த்தார். இப்போட்டியின் ஐந்தாவதும் இறுதிநாளான ஆட்டம் இன்றாகும்.



சோகத்தில் சச்சின்

இந்நிலையில் மேற்கிந்தியதீவுகள் அணி 8 விக்கெட்டுக்கள் கைவச முள்ள நிலையில் 189 ஓட்டங்களால் முன்னிலையிலுள்ளது. எனவே இப்போட்டி சமனிலையில் முடிபதற்கு சந்தர்ப்பங்கள் உள்ள நிலையில் சில அதிசயங்கள் நடந்தால் இரு அணிகளில் ஒன்று வெற்றி பெறவும் முடியும்.

## இருபது-20 போட்டியில் இலங்கை அணி தோல்வி

இலங்கை அணியுடனான ஒரேஒரு இருபது-20 போட்டியில் பாகிஸ்தான் அணி 5 விக்கெட்டுக்களால் வெற்றி பெற்றது.

இப்போட்டியில் முதலில் துடுப்பெடுத்தாடிய இலங்கை அணி 19.3 ஓவர்களில்141 ஓட்டங்களுடன் சகல விக்கெட்டுக்களையும் இழந்தது.



தினேஷ் சண்டிமல் 44 பந்துகளில் 56 ஓட்டங்களைப் பெற்றார். அணித்தலைவர் திலகரட்ண டில்ஷான் 15 பந்துகளில் 28 ஓட்டங்களைப் பெற்றார்.

இலங்கை அணியின் முன்வரிசை வீரர்கள் வேகமாக் ஓட்டங்களை குவித்த போதிலும் பின்வரிசை வீரர்கள் சொற்ப ஓட்டங்களுடன் ஆட்டமிழந்தனர். அவ்வணியின் கடைசி 7 விக்கெட்டுக்கள் 22 ஓட்டங்கள் இடைவெளியில் வீழ்ந்தன.

பாகிஸ்தான் பந்து வீச்சாளர்களில் அய்ஸாஸ் சீமா 34 ஓட்டங்களுக்கு 4 விக்கெட்டுக்களை வீழ்த்தினார்.

பதிலுக்கு துடுப்பெடுத்தாடிய பாகிஸ்தான் அணி 19.3 ஓவர்களில் 5 விக்கெட்டுக்களை மாத்திரமே இழந்து வெற்றி இலக்கை அடைந்தது.

இதில் அணித்தலைவர் மிஸ்பா உல்ஹக் ஆட்டமிழக்காமல் 38 பந்துகளில் (3பவுண்டரிகள், ஒரு சிக்ஸர் உட்பட) 48 ஓட்டங்களைக் குவித்தார்.

## இலங்கையில் ஆகாய பறப்பில் சாகச வீரர் பீற்றர் பெசென்யெ

சாகச வீரர் பீற்றர் பெசென்யெ, உனவட்டுன கடற்கரைப்பகுதியில் ஆகாய பறப்பு சாகச நிகழ்வை டிசம்பர் 03 ஆம் திகதி பி.ப 2 மணிமுதல் எயார் ஷோ மூலம் முன்னெடுக்கின்றார்.

இலங்கையின் முதலாவது எயார் ஷோ சாகச நிகழ்வை ரெட்புள் முன்னெடுக்கவுள்ளது. இதற்கு முன்பு ரெட்புள் இலங்கையில் முன்னெடுத்திருந்த மோட்டார் சாகச நிகழ்வுகளைத் தொடர்ந்து இந்த ஆகாய சாகச நிகழ்வு இடம்பெறவுள்ளது.

ரெட்புள் எயார் ரேஸ் நிகழ்வுகளின் பிதாமகன்எனக் கருதப்படும் பீற்றர் பெசென்யெ, இலங்கையின் உனவட்டுன கடற்கரைப் பரப்பில் இந்த ஆகாய சாகச நிகழ்வை மேற்கொள்ளவுள்ளார். இந்நிகழ்வு இலங்கையின் முன்னணி சாகச நிகழ்வுகளில் ஒன்றாகக் கருதப்படுகிறது.

பீற்றர் பெசென்யெ 4 உலக கிராண்ட் பிரீ பட்டங்களை பெற்றுள்ளதன் மூலம் இந்த சாகச நிகழ்வுகளை நிகழ்த்துவதில் நிபுணத்துவம் பெற்றுள்ளார். மேலும் இவர் ஐரோப்பிய சம்பியன் மற்றும் உலக சம்பியன் பட்டங்களை இரு முறை வென்றுள்ளார். இந்த நிகழ்வுக்கு முன்னதாக யுனெஸ்கோ அமைப்பினால் பிரகடனப்படுத்தப்பட்டுள்ள உலகின் மரபுரிமை பகுதிகளில் ஒன்றாக அடையாளம் காணப்பட்டுள்ள இலங்கையின் சிகிரியா குன்றின் மேற்பகுதியினூடாக தனது பறப்பு நடவடிக்கையை மேற்கொள்ளவுள்ளார்.

இந்நிகழ்வு டிசம்பர் 02 ஆம் திகதி இடம் பெறவுள்ளது. டிசம்பர் 03 ஆம் திகதி இடம் பெறவுள்ள பிரதான நிகழ்வின்போது இலங்கை விமானப்படையின் கண்காட்சி நிகழ்வும் இடம் பெற ஏற்பாடாகியுள்ளது.

ரெட்புள் எயார் ஷோ நிகழ்வானது விசேடமாக அமைந்த டேக் ஓஃவ் பார்டி நிகழ்வின் மூலம் அறிமுகப்படுத்தப்பட்டிருந்தது. உலகளாவிய ரீதியில் பல வித்தியாசமான விளையாட்டு நிகழ்வுகளை ஏற்பாடு செய்யும் பொறுப்பைக் கொண்டுள்ள ரெட்புள் விளையாட்டு அமைப்பின் மூலம் 2001 ஆம் ஆண்டு த ரெட்புள் எயார் ஷோ ஆரம்பிக்கப் பட்டது.

உலகின் முன்னணி விமானிகளுக்கு சவால் ஏற்படுத்தக்கூடிய சிறந்த ஆகாய மார்க்கமான போட்டி நிகழ்வுகளை ஏற்பாடு செய்வதே இதன் நோக்கமாகும்.







இலங்கை வங்கியின் லீசிங் பொல கிளிநொச்சி கிளைத் திறப்பு விழாவில் இலங்கை வங்கியின் தலைவர் காமினி விக்கிரமசிங்க உள்ளிட்ட குழுவினர் அலுவலகத்தை திறந்து வைப்பதையும் லீசிங் அடிப்படையிலான வாகனங்களை வாடிக்கையாளர்களுக்கு வழங்கி வைப்பதையும் படங்களில் காணலாம்.

# TILKO JAFFNA CITY HOTEL

70/6,K.K.S ROAD,JAFFNA. T.P:0212225969

Web:cityhoteljaffna.com
e-mail:info@hoteljaffna.com

Tilko Jaffna City Hotel for Business & Relaxation in the heart of Jaffna City
Conference Hall Facilities including Multimedia & PA System
Large Banquet Hall For Wedding Receptions, Work Shops, Conventions & Seminars
Non Ac Mini Conference Hall
Special take away Lunch/Dinner Pack
Morning/ Evening Snacks
Special Package Rate for
Family Get-to-Gathers, Birthday/ Anniversary Functions, Company Get to Gathers

*Await Opening*
*Special Barbaque at our Garden Cafeteria*
*Inclusive of Chines/Indian Jaffna Authentic*
*Variety Cuisine s From our open hot ranga Kitchen*

உங்கள் வியாபார நடவடிக்கைகள் மற்றும் பொழுது போக்கு அம்சங்களுக்கு யாழ். நகரின் மத்தியில் ஒளி, ஒலி அமைப்பு மற்றும் நவீன வசதிகளுடன் கூடிய மாநாட்டு மண்டபம், சிறிய /நடுத்தர /பிரமாண்டமான குளிரூட்டப்பட்ட, குளிரூட்டப்படாத சகல வசதிகளுடன் கூடிய மண்டபங்கள்,திருமண, பிறந்த நாள் கொண்டாட்டங்கள்,வியாபார நிறுவன ஒன்றுகூடல்களுக்கும் ஏதுவான பாரிய மண்டப வசதி அத்துடன் மதிய, இரவு பொதி செய்யப்பட்ட உணவு வகைகள், காலை, மாலை சிற்றுண்டிகள்...

இந்திய, சீனா மற்றும் யாழ். பாரம்பரிய உணவு வகைகளும் ஒரே இடத்தில்...

மிகவிரைவில் TILKO HOTEL இல் Barbeque வசதியுடனான பூந்தோட்ட உணவகம் திறக்கப்பட வுள்ளது.



உங்கள் வியாபார நடவடிக்கைகள் மற்றும் பொழுதுபோக்கு அம்சங்களுக்கு யாழ் நகரில்...

T.P.:077 6943479
K.Gunaseelan
Marketing Executive


# ரவிராஜ் நினைவு நிகழ்விற்கு இராணுவத்தினர் அனுமதி மறுப்பு



முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினரும் சட்டத்தரணியுமான நடராஜா ரவிராஜின் 5 ஆம் ஆண்டு நினைவு நிகழ்வு சாவகச்சேரியில் நடத்துவதற்கான ஏற்பாடுகள் தமிழ் தேசிய மக்கள் முன்னணியினால் மேற்கொள்ளப்பட்டிருந்தது.

எனினும் இது பற்றி தகவல் அறிந்த இராணுவத்தினர் நிகழ்வுக்கான மண்டபம் வழங்கியவர்களது வீட்டுக்குச் சென்று குறித்த நிகழ்வு 27 ஆம் திகதி வரை நடத்த அனுமதிக்க முடியாது என்றும் அதனை நிறுத்த வேண்டும் என்றும் தெரிவித்துள்ளதாக அக்கட்சி தெரிவித்துள்ளது.

இதன் காரணமாகவே மேற்படி நிகழ்வை பிற்போடவேண்டிய நிலை ஏற்பட்டது. இராணுவத்தின் ஜனநாயக விரோதமான இச்செயற்பாட்டை தமிழ்த் தேசிய மக்கள் முன்னணி மிகவும் வன்மையாக கண்டித்துள்ளது. (பா)

# முல்லை-தட்டுவன்கொட்டி மக்களுக்கு இன்று முதல் படகுச் சேவை ஆரம்பம்

இரணைமடு குளத்தின் பத்து வான் கதவுகளும் திறக்கப்பட்டுள்ளதனை அடுத்து குளத்தின் கீழ் பகுதிகளில் உள்ள பெரும்பாலான பிரதேசங்கள் வெள்ளத்தில் மூழ்கியுள்ளன.

அத்துடன் ஆனையிறவு - தட்டுவன்கொட்டி கிராமத்தின் தரைவழி தொடர்புகள் முற்றாக துண்டிக்கப்பட்டுள்ள நிலையில் மக்கள் பெரும் அவலத்தில் சிக்கியுள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

இது தொடர்பாக கிளிநொச்சி மாவட்ட அரச அதிபர் ரூபவதி கேதீஸ்வரனுடன் தொடர்பு கொண்டபோது அவர் தெரிவித்துள்ளதாவது,

தட்டுவன்கொட்டி மக்களின் போக்குவரத்திற்காக இன்று முதல் படகு சேவை ஒன்றினை ஆரம்பிக்க உள்ளதாகவும் இதற்கான நடவடிக்கைகளை மாவட்ட அனர்த்த முகாமைத்துவ பிரிவினர் மேற்கொண்டு வருவதாகவும் தெரிவித்தார்.

ஏற்கெனவே மூன்று மாதத்திற்குத் தேவையான உணவுப் பொருட்கள் பலநோக்கு கூட்டறவுச் சங்கத்தின் மூலம் களஞ்சியப்படுத்தப்பட்டு விட்டதாக அவர் குறிப்பிட்டார். (எ)

## இலங்கையில்...

தெரிவித்துள்ளார்.

லிபியாவின் சர்வாதிகார ஆட்சி வீழ்ச்சியடைந்துள்ள நிலையில் உலக நாடுகளில் ஜனநாயகத்தை நிலைநாட்டும் பிரவாகம் உருவெடுத்துள்ளது.

பொதுநலவாய நாடுகள் அங்கம் வகிக்கும் அநேகமான ஆசிய மற்றும் ஆபிரிக்க நாடுகள் ஜனநாயக வழியைத் தெரிவு செய்துள்ளன.

அரேபிய நாடுகளிலும் இந்த நிலைமை ஏற்பட்டுள்ளது. ருவாண்டா போன்ற நாடுகளிலும் தற்போது ஜனநாயகப் பாதைக்கு முன்னுரிமை அளிக்கப்பட்டுள்ளதாக அவர் குறிப்பிட்டுள்ளார். (எ-5)


ஜேர்மனி, சுவிஸ், பிரான்ஸ், நோர்வே, கனடா, அவுஸ்திரேலியா... உட்பட எல்லா நாடுகளுக்குமான சகல விதமான விஸாக்களுக்குமான இலவச சட்ட ஆலோசனை.

சனி, ஞாயிறு மட்டும்.
நேரில் வரவும்.

(C-5053)





**திசைகாட்டி**

முன்மாதிரியான ஆலோசனை நிறுவனம்

37, சிவகுருநாதர் ஒழுங்கை, பிறவுண் வீதி, யாழ்ப்பாணம்.
T.P. : 021 221 9016, 021 491 4527
E-mail: Thisaikaddi@sltnet.lk
இணையத்தள முகவரி www.thisaikaddi.lk
(யாழ் நகரிலிருந்து கஸ்தூரியார் வீதியூடாக வருகையில் யாழ். இந்துக் கல்லூரி மைதானம் கடந்தவுடன் வலது புறமாக வரும் ஒழுங்கை)


## யுத்தக் ...

போர் முடிந்தவுடன் அரசு என்ன செய்ய வேண்டும் என்ற வேலைத் திட்டத்தை அரசு சமர்ப்பித்தது. போரில் கொல்லப்பட்டவர்கள், சிறையில் இருப்பவர்கள் மற்றும் போர்க் காலத்தில் காணாமல் போனவர்கள் ஆகியோரின் பெயரை அரசு வெளியிட வேண்டும் என்பது எமது கோரிக்கை. ஆனால் இப்போது காலதாமதமாக வந்திருந்தாலும் அரசு இதனை ஒப்புக் கொள்ளுகின்றது.

இது தொடர்பாக முழுமையான விசாரணை நடத்தும் பொறுப்பு அரசுக்கு இருக்கின்றது. போரின் போது இழைக்கப்பட்ட குற்றம், கொலைகளுக்கு யார் பொறுப்பு என்பது கண்டறியப்பட வேண்டும்.

போர்க் குற்றம் தொடர்பாக விசாரணை ஒன்று தேவைதான். இலங்கை இராணுவம் கட்டுப்பாட்டுடன் நடக்க வேண்டும் என்பதற்கு இலங்கை அரசுக்கு ஒரு கடமை இருக்கின்றது. அந்த கடைப்பாடு இல்லை என்றால் நாடு எங்கேயோ போயிருக்கும்.

இந்த விசாரணை இலங்கை அரசால் தான் நடத்தப்பட வேண்டும் என நாங்கள் விரும்புகின்றோம்.

ஆகவேமக்கள்மனதில்நம்பிக்கை உருவாக ஒரு தீவிர விசாரணை நடத்த வேண்டும்.

என்னைப் பொறுத்தவரை இந்த உலகத்தில் எல்லா நாடுகளும் போர்க்குற்றம் புரிந்துள்ளன. யாரும் நல்லவர்கள் கிடையாது. இந்தநிலையில் யாரிடம் இந்தப் பொறுப்பை ஒப்படைப்பது? அது போல யாருமே இல்லை. எனவே இந்த விசாரணையை அரசே முறையாக நடத்த வேண்டும்.

தமிழ் மக்கள் கொழும்புக்கு மருத்துவச் சிகிச்சைக்காக வந்த போது, விடுதிகளில் தங்கியிருந்த போது, அவர்களை கொழும்பில் இருந்து வெளியேற்ற அரசு முற்பட்டபோது முழுமையாக எதிர்த்த ஒரு கட்சி ஜே.வி.பிதான்.

அப்படியாக சிறு பிரச்சினையையே தீர்க்க முற்பட்ட நாங்கள், போரில் தமிழ் மக்கள் பெற்ற பிரச்சினையை எப்படி விட்டுவிட முடியும் என்றார். (எ-5,11)

## சித்திர...

சம்பவங்களை குறைப்பதற்கு அரசாங்கம் கூடுதல் கவனம் எடுத்து செயற்படவேண்டும் என சர்வதேச நீதியாளர்கள் குழு வலியுறுத்தியுள்ளது.

குறிப்பாக சாட்சிகளைப் பாதுகாத்தல், சித்திரவதைச் சம்பவங்களில் பாதிக்கப்பட்டவர்களுக்கு புகலிடம் வழங்குதல் போன்றவற்றில் கூடுதல் கவனம் செலுத்தப்பட வேண்டும் என சர்வதேச நீதியாளர்கள் குழு தெரிவித்துள்ளது. (ச-5)

## இராணு...

இனந்தெரியாத நபர்கள் மாவீரர் தினத்தை முன்னிட்டு சுவரொட்டிகள் ஒட்டப்பட்டிருந்த பெயர்ப் பலகையை அடித்து நொருக்கியுள்ளனர். இந்தச் சம்பவம் நேற்று முன் தினம் பிற்பகல் ஒருமணியளவில் இடம்பெற்றுள்ளது.

நாளை 27ம் திகதி வரும் மாவீரர் நினைவு தினத்தை முன்னிட்டும் தமிழீழ விடுதலைப் புலிகளின் தலைவர் வேலுப்பிள்ளை பிரபாகரனின் பிறந்த தினத்தை முன்னிட்டும் யாழ் பல்கலைக்கழக மாணவர் பொது அறையில் உள்ள பெயர்ப் பலகைகளில் சுவரொட்டிகள் ஒட்டப்பட்டிருந்தன.

யாழ். பல்கலைக்கழக சமூகம் என்ற பெயரில் ஒட்டப்பட்ட இந்த சுவரொட்டிகளுடன் பெயர்ப் பலகையையும் யாழ் பல்கலைக்கழகத்திற்குள் திடீரென மோட்டார் சைக்கிளில் நுழைந்த மர்ம நபர்கள் அடித்து நொருக்கியுள்ளனர். பல்கலைக் கழக செயற்பாடுகள் இடம்பெற்றுக் கொண்டிருந்த பொழுதே இந்தச் சம்பவம் நடைபெற்றுள் ளது.

இதேவேளை யாழ்ப்பாணம், மற்றும் வன்னியிலுள்ள இந்து ஆலயங்களில் படையினரின் கண்காணிப்பு மேற்கொள்ளப்பட்டு வருவதுடன் மணியடிப்பதற்கும் தடை விதித்துள்ளனர். (எ-5)

## சரணடை...

கிளிநொச்சி மாவட்டத்தில் இளைஞர்கள் காணாமல் போவது மற்றும் கைது செய்யப்படும் சம்பவங்கள் மீண்டும் அதிகரித்துள்ளதாகவும் அவர் சுட்டிக்காட்டினார்.

யுத்தம் முடிபடைந்தாலும் தமிழ்ப் பிரதேசங்களில் இளைஞர்கள் தொடர்ந்தும் அச்சத்துடனேயே வாழ்ந்து வருவதாக குறிப்பிட்டதுடன், கிளிநொச்சியில் கடந்த சில தினங்களில் பாடசாலை மாணவர்கள், தொழில் புரியும் இளைஞர்கள் கடத்தப்பட்டுள்ளமையினையும் சுட்டிக் காட்டினார்.

அத்துடன் புனர்வாழ்வளிக்கப்பட்டு விடுவிக்கப்பட்ட முன்னாள் போராளிகள் பலர் நிம்மதியற்ற வாழ்க்கையே வாழ்ந்து வருவதாக குறிப்பிட்ட அவர், போரில் இறந்தவர் களை நினைத்து அவர்களுக்கு பூவைத்து வணங்க முடியாத துர்ப்பாக்கிய நிலைமையே காணப்படுவதாகவும் குறிப்பிட்டார். (எ-5)

# வசந்தம் ரிவியில் 'முதலீட்டாளர் தினம்'

(கொழும்பு)

யாழ்ப்பாணத்தில் எதிர்வரும் 3ஆம் திகதி முதலீட்டாளர் தினம் கொண்டாடப்படவுள்ளது.

இந்நிகழ்வை விளக்கும் வகையில், கொழும்பு பங்குப் பரிவர்த்தனையின் யாழ்.கிளை முகாமையாளர் மு.திலீபன் மற்றும் நேஷன் செக்கியூரிட்டீஸைச் சேர்ந்த திருமதி அசோகன் பங்குபற்றும் தொலைக்காட்சி நிகழ்ச்சி வசந்தம் ரிவியில் இன்று காலை 11 மணிமுதல் 12 மணிவரை நேரடியாக ஒளிபரப்பாகவுள்ளது. (எ-1)

## பொன்சேகா...

டி சில்வா தலைமையிலான மூன்று நீதியரசர்கள் குழுவின் முன்னிலையில் இம்மனு மீதான விசாரணை இடம்பெற்றபோது, மனுதாரர் மற்றும் பிரதிவாதிகள் தரப்பில் முன் வைக்கப்பட்ட கருத்துக்களை பரிசீலித்த நீதிமன்றம் விசாரணையை பிற்போட்டுள்ளது.

இதன்படி, இம் மனு மீதான விசாரணை எதிர்வரும் டிசம்பர் மாதம் 15 ஆம் திகதி இடம்பெறும் என மேன் முறையீட்டு நீதிமன்றம் அறிவித்துள்ளது.

இரண்டாவது இராணுவ நீதிமன்றத்தில் தனக்கு 30 மாதகால சிறைத்தண்டனை விதிக்கப்பட்டதை அடுத்து தனது நாடாளுமன்ற உறுப்பினர் பதவியை பறித்தமை சட்ட விரோதமானது என அறிவிக்கும்படி கோரி சரத் பொன்சேகா மேன் முறையீடு செய்திருந்தமை குறிப்பிடத்தக்கது. (எ-5)


**A/L கணக்கீடு A/L**

உயர்தர கணக்கீட்டின் முழுப்பாடத்திட்டத்தையும் உள்ளடக்கிய பல்தேர்வு வினாக்களை அலகு ரீதியாக உள்ளடக்கிய நூல் உங்கள் கையில்....

"உயர்தர கணக்கீடு"
(பல்தேர்வு வினாக்கள்)
by- K. Kajeeparan
(Kajeepan)
MCQ 1000
(6846)

| அன்னை புத்தகசாலை | பூபாலசிங்கம் புத்தகசாலை |
|---|---|

**இலவச கருத்தரங்கு**

நீங்கள் பட்டப்படிப்பை தேடுபவரா ???

இன்னும் நீங்கள் தவறவிடப்படவில்லை! நிபுணர்களை சந்தித்து உங்களை தயாரக்க தயாராகுங்கள்!
உங்களின் பட்டப்படிப்பினை கீழ் காணும் வெளி நாடுகளில் தொடர வாழ்த்துக்கள்...!



:: UK :: New Zealand :: Cyprus
:: Ireland :: Singapore :: Malaysia

Free Consultation for
:: Student Visas :: Dependent Visas :: Appeals
:: Visa Reapplications :: Administrative Reviews

Special Consultation for Visa refused and 10 year banned students

| Date | Time | Venue |
|---|---|---|
| 27th November 2011 | 10.30am-1.00pm | Cooperative Auditorium (Opposite to the General Post Office, K.K.S Road ,Jaffna. ) |

விண்ணப்பம் மற்றும் மேலதிக ஆலோசனைகளை பெற்றுக் கொள்ள
English- 071-7118671 Tamil- 077-7666394
(After 6 pm)

Guideline International Consultants and Academy (Pvt) Ltd
(British Council Approved IELTS Registration Centre)

**அடகு நகைகளை மீட்பதற்கு மீண்டுமோர் அரிய சந்தர்ப்பம்...!**

பவுணுக்கு அதிக பணம் தரும் வங்கி / நிறுவனத்திற்கு மாற்றி உங்கள் நகைகளில் பெறுமதிக்கு கூடுதல் பணம் பெறப்போகிறீர்களா?

குறைந்த வட்டிவீதம் தரும் வங்கி/ நிறுவனத்திற்கு உங்கள் நகைகளை மாற்றி வைக்கப்போகிறீர்களா?

அடகு வைத்துள்ள உங்கள்நகைகளுக்கு ஏல விற்பனை கடிதம் வந்து விட்டதா ? அவற்றை மீட்டு கூடுதல் பவுண் பெறுமதிக்கு விற்கப்போகிறீர்களா?

(C-5048)

உங்களுக்கு உதவ நாம் தயாராக இருக்கிறோம். இன்றே அழையுங்கள் 0774050936
சேவைக்கட்டணம் அறவிடப்படும்.


இப்பத்திரிகை வலம்புரி அன்.கோ ஸ்தாபனத்தாரால் இல.3,2 ஆம் ஒழுங்கை, பிறவுண் றோட், யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள அவர்களது அச்சகத்தில் 26.11.2011 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.